# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 19 திங்கட்கிழமை (02.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 157



Sri Lanka Cricket

03 நடவடிக்கைக்குத் தீர்மானம்



07 வலிகளைச் சுமந்து வலிமையோடு



10 வைத்தியசாலைக்கு உயிர் கொடுங்கள்



16 கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்துமா ஐ.நா?


# சில ஆயிரம் டொலர்களுக்காக இலங்கையை விற்காதீர்கள்!

## நேற்றைய மேதினக் கூட்டத்தில் மஹிந்த

கொழும்பு, மே 2

சில ஆயிரம் டொலர்களுக்காக இலங்கையை விற்காதீர்கள்!

அரச சார்பற்ற அமைப்பினர், பொது அமைப்பினர், தனியார் ஆகியோரிடம் ஜனாதிபதி மஹிந்த ரஜபக்ஷ நேற்று இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

கொழும்பு மாநகரசபை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற அரசின் மேதினக் கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை நாட்டுமக்கள் ஒட்டுமொத்தமாக இணைந்து எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கை மீது போர்க் குற்றம் சுமத்தியுள்ள 'தருஸ்மான்' அறிக்கையை முற்றாக நிராகரிப்போம். பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட, காயமடைந்த மக்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் உணவு போன்ற உதவிகளை வழங்கியமை படையினருக்கு எதிரான குற்றச்சாட்டா?



எமது படையினர் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் மருத்துவ உதவிகளைக் கூட (29 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மேதினப் பேரணிகளில் ஐ.நாவை வசைபாடி கோஷங்கள்

### பான் கீ மூனின் கொடும்பாவியும் எரிப்பு

கொழும்பு, மே.02

தொழிலாளர் தினமான நேற்று அரசு ஏற்பாடுசெய்த நான்கு முனைப் பேரணியிலும் ஐ.நாவுக்கு எதிரான கோஷங்கள் வானைப்பிளந்தன.

மேதினமான நேற்று அரசும் அதன் (29 ஆம் பக்கம் பார்க்க)

# உண்மை எதுவென விளக்க சீனா, ரஷ்யாவுடன் பேச்சு

## தயார் என்கிறது கூட்டமைப்பு இந்திய உதவிகளையும் கோருகிறது



கொழும்பு, மே 2

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த கொழும்பு அரசின் நிலைப்பாட்டுக்கு சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் உறுதியான ஆதரவை வெளிப்படுத்தி உள்ள நிலையில், அந்த நாடுகளுக்கு உண்மை நிலையை விளக்கும் வகையில் அவற்றுடன் பேசத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (29 ஆம் பக்கம் பார்க்க)




அரசின் பேரணி...

# தமிழனாக இருந்தும் எம் மக்களுக்கு எதிராக குற்றமிழைத்து வருகிறார் அமைச்சர் டக்ளஸ்

## நிபுணர் குழு அறிக்கை குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் அபத்தமானவை

யாழ்ப்பாணம், மே.02

தமிழனாக இருந்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் மன்னிக்க முடியாதளவுக்கு தொடர்ந்தும் குற்றம் இழைத்து வருகிறார். அதே சமயம் ஐ.நா. சபையில் நிபுணர்குழு அறிக்கை தொடர்பாக அமைச்சர் வெளியிட்ட கருத்துக்கள் அபத்தமானவை - கண்டிக்கப்பட வேண்டியவை.

இவ்வாறு கூறினார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மே தினக் கூட்டம் நேற்று யாழ். நகர் மார்ட்டின் வீதியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

மாவை சேனாதிராசா அங்கு பேசும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு சார்ந்த டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்கள் (29 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழு அறிக்கையை ஆதரிக்கும் கூட்டமைப்பினருடன் பேசமாட்டேன்

## அரச குழுவின் தலைமைப் பதவியைத் துறந்தார் ரட்ணசிறி

கொழும்பு, மே 02

அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தும் அரச பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பதவியில் இருந்து சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க விலகியுள்ளார்.

இலங்கைப் படையினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டமையே இதற்குக் காரணம் என்று ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

தனது இராஜிநாமாக் கடிதத்தை அமைச்சர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். படையினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதால், அவர்களுடன் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக என்னால் பேச முடியாது என்று அமைச்சர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இராஜிநாமாவைத் தொடர்ந்து அவரது வெற்றிடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜயசிங்கவின் பெயரிடப்பட்டுள்ளது. அரச பிரதிநிதிகள் குழுவில் (29 ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக் பண்டிகையை முன்னிட்டு

# முன்னாள் போராளிகளில் மேலும் ஒரு தொகுதியினர் விடுவிப்பு

கொழும்பு, மே 02

திருமணமான முன்னாள் போராளிகளுள் மேலும் ஒரு தொகுதியினர் வெசாக் பண்டிகையை முன்னிட்டு விடுதலை செய்யப்படவுள்ளனர் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் வெசாக் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது.

அண்மையில் திருமணமான முன்னாள் போராளிகளுள் 492 பேர் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளுள் இன்னும் 4 ஆயிரத்து 500 பேர் மாத்திரமே விடுதலை செய்யப்படவுள்ளனர் என்றும், ஏனையோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு (29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரபரப்பான ஆட்டம் வென்றது ராஜஸ்தான்

-டிலீப்-

ரெயிலர் சிறப்பான ஆட்டம். வெற்றிக்கு வழி சமைத்தது அவரது அதிரடி. தொடர் தோல்விகளால் யுவராஜின் அரையிறுதி கேள்விக்குறி?

ஜெய்பூரில் நடந்தது ஐ.பி.எல்லின் 38 ஆவது ஆட்டம். சுழற்றப்பட்டது நாணயம். வென்றார் வோர்ன். பணித்தார் புனேக்கு. பணிந்து வந்தது துடுப்பெடுத்தாட. ரைடர் - மனிஷ் பாண்டி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள். சுழலுடன் தொடங்கியது பந்து வீச்சு. போத்தா வீசினார் முதல் ஓவர். ரைடர் தொடங்கினார் பவுண்டரியுடன் கணக்கை. ஆரம்ப அதிரடி ரைடரின் கையில். மூன்றாவது ஓவரில் முடித்து வைத்தார் போத்தா. 18 பந்துகளில் 24 ஓட்டங்கள் பெற்றுக்கொடுப்பு. நுழைந்தார் அதிரடி ஆட்டக்காரர் உத்தப்பா.

ஐந்தாவது ஓவரில் உத்தப்பா ஆரம்பித்தார் அதிரடி. அமிர் சிங் ஓவரில் பெறப்பட்டன இரண்டு பவுண்டரிகள். வீசினார் வோர்ன் ஆறாவது ஓவர். உத்தப்பா அடித்தார் மூன்று பவுண்டரிகள். மீதி மூன்று பந்துகளிலும் கோரப்பட்டன ஆட்டமிழப்பு முறையீடுகள். ஏமாற்றம் அதற்குப் பதில். 37 பந்துகளில் 50 ஓட்டங்களைத் தொட்டது ராஜஸ்தான். விட்டுவைக்கவில்லை வோர்ன். ஒன்பதாவது ஓவர் வீச மீண்டும் வந்தார் வோர்ன். உத்தப்பா உதைத்தார் முதல் பவுண்டரி. அடுத்த பந்திலேயே சரிந்தார் உத்தப்பா. 21 பந்துகளில் 35 ஓட்டங்கள் அணிக்கு பங்களிப்பு. அடங்கியது ஏழு பவுண்டரிகள்.

நம்பியிருந்தனர் யுவராஜ்ஜை. காலை வாரினார் அவர். ஏழு ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார் யுவராஜ். ஆட்டமிழந்தார் ரன் அவுட்டில். தொடர்ந்தது துரதிருஷ்டம். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பான்டி 30 ஓட்டங்களுடன் வெளியேற்றம். 4 ஆவது விக்கெட் வீழ்த்தப்பட்டது 93 ஓட்டங்களில். மத்திய வரிசையில் மன்ஹாஸ் ஆட்டம் சிறப்பு. பின்வரிசை முடிந்தவரை ஆட்டம். இருந்தும் வெற்றிக்கு நிர்ணயித்தது 144 ஓட்டங்கள். இருபது ஓவர்களில் 143 ஓட்டங்கள். இழந்தது 7 விக்கெட்டுக்கள். இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்ந்தது திரிவேடியின் பந்து வீச்சில்.

இலக்கு இலகு. இருந்தும் அதை எட்ட பட்டதுபாடு. வொட்ஸன் - ராவிட் தொடக்கினர் ராஜஸ்தான் ஆட்டம். நிதானமாய் முன்னேறிச் சென்றது ஆட்டம். ஆரம்ப ஓவர்களில் ராஜஸ்தான் அதிரடியை அடக்கியது புனே. 29 ஓட்டங்களைத் தொட்டது ராஜஸ்தான். முதலாவது விக்கெட் இழக்கப்பட்டது. வொட்ஸன் வெளியேற்றப்பட்டார் 12 ஓட்டங்களுடன். தோமஸ் பந்தில் முடிவுக்கு வந்தது அவர் ஆட்டம். ராவிட் 18 ஓட்டங்களுடன் ராகுல் சர்மாவின் பந்து வீச்சில் வெளியேற்றம். சகலதுறை விற்பன்னர் போத்தா. வந்தார் அடுத்து. கலக்கல் ஆட்டம் எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம். 18 பந்துகளில் 12 ஓட்டங்கள். ராகுல் சர்மா போத்தாவை பவிலியனுக்குத் திருப்பினார். அடுத்து வந்தார் மெனேரியா. வீணாக்கப்பட்ட பந்துகள் விளாசப்பட்டு சேர்க்கப்பட்டன ஓட்டங்கள். புனே விட்டு வைக்கவில்லை இவரது ஆட்டத்தை. ராகுல் சர்மா மீண்டும் கைவரிசை. 22 பந்துகளில் 29 ஓட்டங்கள் விளாசல். அடங்கின மூன்று சிக்ஸர்கள்.

இறுதியில் ரெயிலர் - ரஹானி ஆட்டத்தை முன்னெடுத்தனர். வெற்றிக்கு தேவையான ஓட்டங்கள் எஞ்சியிருக்கும் பந்துகளும் சமாந்தரப் பயணம். 19 ஆவது ஓவரில் பறந்தது சிக்ஸர். ராஜஸ்தான் நிம்மதிப் பெருமூச்சு. 20 ஆவது ஓவரில் ரஹானி அடித்தார் பவுண்டரி. இறுதியில் எஞ்சியிருந்தது 3 பந்துகள். ஆறு விக்கெட்டுக்களால் கிடைக்கப்பெற்றது வெற்றி. ராகுல் சர்மா அபாரம். வீசினார் 4 ஓவர்கள். ஓட்டங்கள் கொடுத்தது 13. கைப்பற்றியது மூன்று விக்கெட்டுக்கள்.

ரெயிலர் அதிரடி ஆட்டம். ஆட்டநாயகன் விருது சென்றது இவருக்கு.

# சென்னையின் எழுச்சிப் பயணம் தொடர்கின்றது



-அருண்மொழி-

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 39 ஆவது ஐ.பி.எல் ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சூப்ப கிங்ஸ் அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முரளி விஜய் - மைக் ஹஸி ஆகியோர் களமிறங்கினர். அதிரடி ஆட்டத்தை கைவிட்டு முரளி விஜய் நிதான ஆட்டத்தை தொடர்ந்தார். இருந்தும் பிறக்கன் ஓஜாவின் பந்து வீச்சில் 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 14 பந்துகளை எதிர்கொண்டே இந்த ஓட்ட எண்ணிக்கையை பெற்றார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக மைக் ஹஸி மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகிய இருவரும் மிகச் சிறப்பாக ஆடினர். டெக்கான சார்ஜஸ்ஸின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். 60 ஓட்டங்களை இரண்டாவது விக்கெட்டுக்காக பெற்றுக்கொண்ட நிலையில் மைக் ஹஸி ஆட்டமிழந்தார். 41 பந்துகளில் 46 ஓட்டங்களை பெற்றார். இதில் 5 பவுண்டரிகளும் அடங்கும். தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக ரெய்னா - டோனி ஆகியோர் இணைந்து கொண்டனர். டோனியின் ஆட்டம் அதிரடியாக இல்லை. இருந்தும் சுரேஷ் ரெய்னா பவுண்டரிகள், சிக்ஸர்கள் என்பவற்றை விளாசினார். அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ரெய்னா 31 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். 17.5 பந்து வீச்சுகளில் 136 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரெய்னாவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 35 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிறக்கன் ஓஜாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அல்பின் மோர்கல் அடுத்து நுழைந்தார் களத்துக்கு. 19 ஆவது ஓவரை இசாந் சர்மா வீசினார். மோர்கல் அடுத்தடுத்து 3 பந்துகளில் சிக்ஸர்கள் அடிக்க சென்னை 150 ஓட்டங்களைத் தொட்டது. இருந்தும் இருபதாவது ஓவரின் முதலாவது பந்து வீச்சிலேயே மோர்கல் ரன் அவுட்டில் வெளியேற்றப்பட்டார். 6 பந்துகளில் 19 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே வெளியேறினார். இதில் 3 சிக்ஸர்கள் அடக்கம். இறுதியில் 20 ஓவர்களில் 5 விக்கெட் டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ஓஜா 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

கடினமான இலக்கை விரட்டத் தொடங்கிய டெக்கான் அணிக்கு சொஹால் - தவான் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. மோர்கலின் பந்து வீச்சை நொருக்கித் தள்ளினார். எவரது பந்து வீச்சையும் விட்டு வைக்காது விளாசித்தள்ளினார் சொஹால். 24 பந்துகளில் 50 ஓட்டங்களை அடித்தார் சொஹால். இறுதியில் 30 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜகாத்தியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் சங்கக்கார 15 ஓட்டங்களைக் பெற்றுக் கொடுத்தார். ஒரு கட்டத்தில் டெக்கான் சார்ஜஸ் வெற்றி பெறும் நிலையிருந்தது. பிற்பாதி ஆட்டத்தில் சென்னை அணி மிகச் சிறப்பாகப் பந்து வீசியது. அத்துடன் களத் தடுப்பும் அபாரமாக இருந்தது. இதனால் டெக்கான் சார்ஜஸ்ஸின் விக்கெட்டுக்கள் இலகுவாக பறிக்கப்பட்டன. இறுதியில் 8 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பந்து வீச்சில் மோர்கல் 3 விக்கெட்டுக்களையும், பொலஞ்சர், ஜகாத்தி ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சென்னையின் வெற்றிக்கு காரணமாக இருந்த அல்பின் மோர்கல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 09 | 05 | 03 | 0 | 1 | - 0.145 | 11 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 08 | 05 | 03 | 0 | 0 | + 0.530 | 10 |
| மும்பை இந்தியன்ஸ் | 07 | 05 | 02 | 0 | 0 | + 0.498 | 10 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 08 | 05 | 03 | 0 | 0 | + 0.247 | 10 |
| றோயல்ஸ்சலஞ்சர்ஸ் பெங்களூர் | 08 | 04 | 03 | 0 | 1 | - 0.052 | 09 |
| டெக்கான் சார்ஜஸ் | 08 | 03 | 05 | 0 | 0 | + 0.048 | 06 |
| டெல்லி டெயா டெவில்ஸ் | 08 | 03 | 05 | 0 | 0 | - 0.031 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 06 | 03 | 03 | 0 | 0 | - 0.276 | 06 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 08 | 03 | 05 | 0 | 0 | - 0.853 | 06 |
| புனே வாரியர்ஸ் | 08 | 02 | 06 | 0 | 0 | - 0.089 | 04 |

# சச்சினுக்கு அருங்காட்சியகம்

சச்சினை கௌரவிக்கும் வகையில் அவரது பெயரில் மிகப் பிரமாண்டமான விளையாட்டு அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க மகாராஷ்டிர அரசு முடிவு செய்துள்ளதாக முதல்வர் பிருதிவிராஜ் சவாண் தெரிவித்துளார்.

மும்பையில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு சத்ரபதி சிவாஜி விருது வழங்கும் நிகழ்ச்சியில் 44 பேருக்கு விருதை வழங்கி அவர் பேசியதாவது:

சச்சின் தனது சாதனைகளின் மூலம் மகாராஷ்டிர மாநிலத்துக்கு பெருமை தேடித்தந்துள்ளார். சமீபத்தில் முடிவடைந்த உலகக் கிண்ண போட்டியில் சச்சினின் பங்கு அளப்பரியது. அவரின் அளவில்லா சாதனைகளை கௌரவிக்கும் வகையில் அவரது பெயரில் விளையாட்டு அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

சச்சினுக்கு பாரத ரத்னா விருது வழங்குவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்படும் என்று பிருதிவிராஜ் சவாண் சமீபத்தில் சட்டப் பேரவையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(15)

## இன்றைய ஆட்டம்

- மும்பை இந்தியன்ஸ் எதிர் பஞ்சாப் கிங்ஸ் லெவன் (மாலை 4 மணி)
- டெல்லி டெயாடெவில்ஸ் எதிர் கொச்சி ருஸ்கேர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்


- ஹோக்லி – பெங்களூர் (7 ஆட்டங்கள் 294 ஓட்டங்கள்)
- சேவாக் – டெல்லி (8 ஆட்டங்கள் 288 ஓட்டங்கள்)
- சச்சின் – மும்பை (7 ஆட்டங்கள் 276 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (7 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- வோர்ன் – ராஜஸ்தான் றோயல்ஸ் (8 ஆட்டங்கள் 11 விக்கெட்டுக்கள்)
- பொலஞ்சர் – சென்னை (5 ஆட்டங்கள் 10 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிவரும் 6 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே அரை யிறுதிக்குள் நுழைய முடியும் என்று புனே வாரியர்ஸ் அணியின் தலைவர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஐ.பி. எல் லீக் ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியிடம் 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் புனே வாரியர்ஸ் தோற்றது. அதன் பிறகு யுவராஜ் கூறியதாவது:

நாங்கள் பந்துவீசியபோது 20 ஓட்டங்களைக் கூடுதலாக கொடுத்து விட்டோம். துடுப்பாட்டத்திலும் வேகமாக ஓட்டங்கள் சேர்க்கத் தவறி விட்டோம். இதுவே தோல்விக்கான காரணங்கள் என்று நினைக்கிறேன். இனி விளையாடவுள்ள 6 ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே அரை யிறுதிக்கு முன்னேற முடியும்.

அதனால் இனி வரும் ஆட்டங்களில் சிறப்பாக விளையாட வேண்டும். பெங்களூருக்கு எதிரான தோல்விக்கு நாணயச்சுழற்சியை இழந்ததும் ஒரு காரணம். நாங்கள் கடந்த 5 ஆட்டங்களில் நாணயச் சுழற்சியில் வென்றபோதும், அதில் சில ஆட்டங்களில் தோற்றுள்ளோம். என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் போதுமான அளவுக்கு முயற்சி எடுத்து ஆடவில்லை. பெங்களூர் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமானது என்பதால் 181 ஓட்டங்கள் என்பது வெற்றி பெறக்கூடிய 'ஸ்கோர்தான்'. முதல் 6 ஓவர்களில் பெரிய அளவில் விக்கெட்டுகளை இழக்காவிட்டாலும், ஓட்டங்களைக் குவிக்கத் தவறிவிட்டோம்.

அப்போது ஓட்டங்களை எடுத்திருந்தால் நானும், உத்தப்பாவும் ஆட்டத்தை வெற்றியில் முடித்திருப்போம். சிறப்பாக பந்துவீசியபோதும் துரதிருஷ்டவசமாக தோற்றுவிட்டோம் என்றார். (15)

# பயிற்சியாளர் பிளெட்சரை வரவேற்கின்றோம்



தாமதம் செய்யாமல் உடனடியாக வேறு பயிற்சியாளரை நியமனம் செய்தது வரவேற்கத்தக்க செயல் என்று இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த கிறிஸ்டன் சமீபத்தில் விலகினார். இதனால் அவருக்குப் பதிலாக சிம்பாப்வேயின் டங்கன் பிளெட்சர் புதிய பயிற்சியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இருப்பினும் ஐ.பி.எல் தொடருக்குப் பின்னர் இடம்பெறும் தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத்தீவுகளுக்கு செல்லும் இந்திய அணியுடன் இவர் இணைந்து கொள்ள மாட்டார். மாறாக இந்த ஆண்டு கடைசியில் இங்கிலாந்து செல்லும் இந்திய அணிக்கு பயிற்சியாளராகச் செல்லவுள்ளார்.

இதுகுறித்து சேவாக் கூறியதாவது:

இந்திய அணிக்கு மிகச்சிறப்பான பயிற்சியாளராக கடந்த மூன்று ஆண்டுகள் இருந்தவர் கிறிஸ்டன். இவரது விலகலுக்குப் பின்னர் மிகக்குறுகிய காலத்தில் இந்திய கிரிக்கெட் வாரியம் டங்கன் பிளெட்சரை பயிற்சியாளராக நியமனம் செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது.

இது இந்திய கிரிக்கெட் அணிக்கு மிகவும் நல்லது.. ஏனெனில் புதிய பயிற்சியாளரும், நமது வீரர்களும் இணைந்து ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு செயல்பட இந்த இடைப்பட்ட காலம் ஏதுவாக அமையும். தவிர இங்கிலாந்து தொடருக்கு முன்பாக பிளெட்சருக்கு ஏற்கனவே உள்ள தன்னுடைய வேலைகளை முடித்து வர போதுமானதாகவும் இந்த நேரம் அமைந்துள்ளது. (15)

# ஆடுகளம் சரியில்லை



கொச்சியில் நேற்று முன்தினம்–நடந்த ஆட்டத்தில் கொச்சி, டெல்லி அணிகள் மோதின. இதில் டெல்லி வெற்றி பெற்றது. ஆனால் டெல்லி அணித் தலைவர் சேவாக் கொச்சி அணி ஆடுகளம் சரி இல்லை என்று புகார் கூறினார்.

அவர் கூறியதாவது:-

20 ஓவர் போட்டி என்றாலே அதிக அளவில் ஓட்டங்கள் குவிக்கும் வகையில் மைதானம் இருக்க வேண்டும். ஆனால் கொச்சி மைதானம் ஆடுகளம் அதற்கு ஏற்ற மாதிரி இல்லை. வீரர்கள் சிக்சர், பவுண்டரி என்று விளாசினால் தான் ரசிகர்கள் ரசிப்பார்கள் ஆனால் கொச்சி ஆடுகளம் இதற்கு ஏற்றபடி இல்லை.

மிகவும் மெதுவான மைதானமாக உள்ளது. பந்து சரியாக வராமல் கண்டபடி எகிறுகின்றது. இவ்வாறு அவர் கூறினார். (15)

# ஹடினுக்குப் பதிலாக பௌச்சர்

கொல்கத்தா ஙைட் ரைடர்ஸ் அணியில் தென்னாப்பிரிக்காவின் அதிரடி வீரரும், விக்கெட் காப்பாளருமான மார்க் பௌச்சர் சேர்க்கப்பட்டுள்ளார். அந்த அணியில் இடம் பெற்றிருந்த ஆஸ்திரேலிய வீரர் பிரட் ஹடின் காயம் காரணமாக விலகியதையடுத்து பௌச்சர் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாளை நடைபெறும் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் களமிங்கவுள்ளார். பிரட் ஹடினுக்குப் பதிலாக மார்க் பௌச்சர் அணியில் இடம் பெற்றிருப்பது எங்களின் அதிர்ஷ்டமே.

அவர் டெஸ்ட், ஒருநாள், இருபது ஓவர் என்று அனைத்து விதமான ஆட்டங்களிலும் அதிக அனுபவங்களைப் பெற்றவர்.

பிரட் ஹடினுக்கு கைவிரலில் காயம் ஏற்பட்டுள்ளதால் அதற்கு சிகிச்சை பெறுவதற்காக அவர் ஆஸ்திரேலியா திரும்புகின்றார். (15)

# வெற்றிகள் தொடரும்

கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல் போட்டியில் கொல்கத்தா, பஞ்சாப் அணிகள் மோதின. முதலில் ஆடிய பஞ்சாப் அணி 119 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து ஆடிய கொல்கத்தா அணி 17.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 120 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றி குறித்து கம்பீர் கூறியதாவது:

இந்த வெற்றிக்கு எங்கள் அணியின் பந்து வீச்சே முக்கிய காரணம் ஆகும். பஞ்சாப் அணி 119 க்குள் சுருண்டு விட்டதால் எங்களால் வெற்றி பெற முடிந்தது.

அதிலும் எங்கள் தொடக்க வீரர் மோர்கன் அதிரடியாக ஆடி நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். எங்கள் அணிக்கு நல்ல வலுவை உருவாக்கினார். இதனால் தான் அடுத்து வந்த நானும், திவாரியும் நிலைத்து நின்று ஆடி வெற்றிக்குரிய ஓட்டங்களை எடுத்தோம்.

முதல் 4,5 ஓவர்களில் ஆடுவது மிகவும் சிரமமானது. ஆனால் அந்த நேரத்தில் கடும் நெருக்கடியாக இருக்கும். ஆனால் மோர்கன் எந்த சிரமும் இல்லாமல் அதிரடியாக ஆடினார். இப்போது இந்த வெற்றி மூலம் முன்னணி இடத்திற்கு வந்து இருக்கிறோம். தொடர்ந்து இதேபோல் மற்ற போட்டிகளிலும் 100 சதவீதம் நன்றாக ஆடி சிறப்பான இடத்துக்கு வருவோம். (15)

# சிம்பாப்வே அணித் தலைவர் பதவி விலகினார்

சிம்பாப்வே கிரிக்கெட் அணித் தலைவர் பதவியிலிருந்து எல்டன் சிகும்புரா ராஜினாமா செய்துள்ளார். தனது தனிப்பட்ட ஆட்டத்தில் கவனம் செலுத்தப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

25 வயதான சகலதுறை வீரரான சிகும்புரா கடந்த வருடம் மே மாதம் சிம்பாப்வே அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால், அதன்பின் அவர் போட்டிகளில் அதிகம் பிரகாசிக்கவில்லை.

உலகக் கிண்ணப் போட்டிகளில் அணியின் தோல்விகள் தொடர்பாகவும் அவர் விமர்சிக்கப்பட்டார்.

'உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து திரும்பி வந்த பின்னர் இந்தப் பதவி குறித்து தீவிரமாக யோசித்தேன். எனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடனும் கலந்துரையாடினேன். சிலர் இன்னும் நான் இந்தப் பதவியில் நீடிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். எனினும் ஏனையோர் எனது சொந்த ஆட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் அணிக்குத் தலைமை தாங்க மற்றொருவருக்கு வழி விட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்டனர்' என்று சிகும்புரா கூறினார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹமில்டன் மஸகட்ஸா அல்லது பிரண்டன் டெய்லர் அடுத்த அணித் தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (15)

# நடவடிக்கைக்கு தீர்மானம்

ஹசான் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் இலங்கை கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபை முடிவு எடுக்கவுள்ளதாக கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையின் பிரதம அதிகாரி டி.எஸ். சில்வா தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் ஹசான், 1992 ஆம் ஆண்டிலிருந்து 'பிக்ஸிங்' நடக்கின்றது என்பதை உறுதியாகவே சொல்வேன். உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் ஏன் 4 வீரர்கள் திடீரென மாற்றப்பட்டனர். ( மென்டிஸ் நீக்கம் ஓட்டங்களே எடுக்காத கப்புக்கெதர அணியில் இணைப்பு) இது ஏன் என்று இதுவரை புரியவில்லை. இதே கேள்வியைத்தான் அர்ஜுனவும் எழுப்பியிருந்தார். ஆனால் உலகக் கிண்ண போட்டி 'பிக்ஸ்' செய்யப்பட்டது என்று நான் சொல்ல முடியாது. 'மேட்ச் பிக்சிங்' இந்த நாட்டின் கிரிக்கெட்டில் சகஜமாகிவிட்டது . இது புற்று நோய் மாதிரி பரவிக் கொண்டிருக்கின்றது. பொறுப்பில் உள்ளவர்கள் விரைவில் இதனைத் தடுக்க வேண்டும். இல்லையேல் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட நிலைமைதான் இலங்கை அணிக்கு ஏற்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தை ஆதாரத்துடன் நிரூபிக்குமாறு இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்தக் கூற்று தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தொடர்பில் விஷேட கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு [illegible] உள்ளதாக சில்வா [illegible]தார். (15)

# ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியலில் எங்களுக்கு திருப்தி இல்லை: அப்ரிடி

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிடும் தரவரிசைப் பட்டியலில் தமக்கு துளி கூட திருப்தியில்லை என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது:

ஐ.சி.சி வெளியிடும் தரவரிசைப் பட்டியல்கள் எவ்விதத்தில் உருவாக்கப்படுகிறது என்பது எங்களுக்கே புரியவில்லை. தற்போது தங்கள் அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளோம்.

இருந்தும் தரவரிசைப் பட்டியலில் எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து ஆறாவது இடத்திலேயே நீடிப்பது வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்தார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### மயில்வாகனம் சிவபாக்கியம்

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி இன்று (02.05.2011) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை. (3749) (34) M.சிறி, M.றஞ்சன், M.உமாசுதன்

## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ் றெஜினோல்ட் பற்றிமா அருள்சோதி

(இளைப்பாறிய தொழில்நுட்ப அதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

மாதகலைச் சொந்த இடமாகவும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட F.R.F அருள்சோதி 30.04.2011 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி) - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான S.M.மகேசன் (பெருந்தோட்ட வைத்திய அதிகாரி) - பூராணி தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ரனெற் றோகினியின் அன்புக் கணவரும் கிறிஷோன் (மக்கள் வங்கி, வவுனியா), ஆன் மடோனா (Q.A.E., Colombo), ஜூடி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாக்கியம் (அவுஸ்ரேலியா), அருட்தந்தை நவரட்ணம் (OMI)(பிலிப்பைன்ஸ்), காலஞ்சென்றவர்களான மாசிலாமணி (ஆங்கில ஆசிரிய ஆலோசகர்), F.C.வேதநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புனித சாள்ஸ் ம.வி.), இராசநாயகம் மற்றும் ஜொய்சி (கனடா), ஜெசிந்தா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் டிஷாந்தினி (Colonial Engineering) அவர்களின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.05.2011) திங்கட்கிழமை காலை அவரின் யாழ்ப்பாண இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டு 04.05.2011 புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல. 19, குருசோ வீதி, யாழ்ப்பாணம். மனைவி, பிள்ளைகள்.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நூல் நிலையம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நோயாளர் நலன்கருதி நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சிற்றுண்டிச்சாலை இயங்கிய கட்டடம் புனரமைக்கப்பட்டு நூல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நூல் நிலையத்துக்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், புதினப் பத்திரிகைகள் அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-207)

## வீதியில் சென்றவரை தாக்கியது பன்றி

வேகமாக ஓடிவந்த காட்டுப்பன்றி வீதியில் சென்றவரைத் தாக்கிக் காயப்படுத்தியது. வரணியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜே.சிவாகரன் (வயது-26) என்பவர் காயமடைந்தநிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். நகரினை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு :0718685456

## மாடுகள் விற்பனைக்கு

கறவைப் பசுமாடுகள், பசுக் கன்றுகள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
05.05.2011க்கு முன்பாக தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு-
26, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

## காணி குத்தகைக்கு தேவை

A9, வீதியில் நாவற்குழியில் இருந்து மீசாலைக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் 20 பரப்புக்கு மேற்பட்ட காணி நீண்டகாலக் குத்தகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு- 0212228754

## கிளிநொச்சி ஆச்சிரமத்துக்கு கணினி பயிற்றுவிப்பாளர்கள் உடன் ஆள்சேர்ப்பு

மகாதேவா சைவச்சிறார் இல்ல ஆச்சிரமத்துக்கு கணினி கற்கை நெறிகளை வழங்கக் கூடிய கணினி விரிவுரையாளர்கள்/ கணினி பயிற்றுவிப்பாளர்கள் உடன் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பங்களை உடன் அனுப்பி வைக்கவும்.

ஆச்சிரமத்தில் தங்கியிருந்து கற்பிக்கக் கூடியவர்கள் மட்டும் எதிர்வரும் 07.05.2011 க்கு முன்னர் சுயவிவரங்களை தலைவர், மகாதேவா சைவச்சிறார் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளனர்.

தொ.பே- 0773868566 (சி/578142) தி.இராசநாயகம், தலைவர்.

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) C9 (வீதி வேலைக்கு) ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 04.05.2011 - 11.05.2011 பி.ப. 02.00 மணிவரை.
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 12.05.2011 பிற்பகல் 02.00 மணிவரை.
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 13.05.2011 முற்பகல் 10.00 மணி. *(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)*
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தபால் உறையில் ஒட்டி பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம் (வ-து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரியிட்டு தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் 12.05.2011 பிற்பகல் 02.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக இடப்படல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01 | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உள்ளகப் பிரதான வீதியும் உள்ளக உப வீதியும் அமைத்தல் | 10,000.00 | 1,000.00 |

(சி/577994) (34) பொதுமுகாமையாளர்.


## எங்கள் அப்பாவின் நினைவுகளுடன்

# கரைந்துவிட்ட முதலாம் ஆண்டு



எம்மோடு அளவளாவ:
1946.11.01

எம்மை அழவைக்க:
2010.05.13



அமரர்

### மருதலிங்கம் கணேசன்



திதி: அமாவாசை (02.05.2011)

**அப்பாவுக்காக கண்ணீருடன்...**

ஆலமரமாய் இருந்தீர்கள் அப்பா!
ஆயிரம் உறவுகள் இளைப்பாறின அப்பா!
அந்தரிக்க விட்டுச் சென்றீர்கள் அப்பா!
அநாதைகளாய்த் தவிக்கின்றோம் நாங்கள் அப்பா!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அப்பா!
ஆறுதல் தர நீங்கள் இல்லையே அப்பா!
குடிசை வாழ்க்கையில் இருந்த இன்பம்
இன்று கோடிகள் கொடுத்தாலும் இல்லையே அப்பா!
ஓராண்டுதான் சென்றது அப்பா!
ஓயவில்லை எம் கண்ணீர் அப்பா!
எங்கு சென்றீர்கள் எமைவிட்டு அப்பா!
எப்போது வருவீர்கள் எம்மிடம் அப்பா!
இன்னொரு பிறப்பு இருந்தால் அப்பா!
எனக்கு என்றும் நீங்கள் தான் அப்பா!





என்றும் நீங்காத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்
72/2, செல்லர் வீதி, நல்லூர்.

(48)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆசிய நாடுகளின் அந்தர நிலை

ஆசிய நாடுகளின் சனத்தொகையில் மேலும் ஆறரைக் கோடி மக்கள் கடும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகப்பிந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆசியப் பிராந்திய நாடுகளில் பாவனைப் பொருள்களின் குறிப்பாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மிக வேகமாக சிறுசிறு இடைவெளிகளில் உயர்த்தப்படுவதால் இந்தப் பாதகமான நிலை உருவாகுவதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஆண்டின் முதலாவது காலாண்டில் - ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் - மட்டும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், ஆசிய நாடுகளில் 10 சதவீதம் அதிகரித்துள்ளதாக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளில் வாழும் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் தமது வருமானத்தில் அறுபது சதவீதத்தை உணவுக்காகச் செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடர்கிறது. அதனால் மற்றும் அடிப்படைத் தேவைகளுக்கு மிகுதியை பங்கிடுவது நாளாந்த வாழ்க்கையில் பெரும் பாதிப்புகளை, பின்னடைவுகளைக் கொண்டுவந்துள்ளது.

இவற்றின் விளைவாக வருமாணம் குறைந்த குடும்பங்களின் சுகாதாரம், கல்வி உட்பட்ட முக்கிய செலவுகளுக்கு வாய்ப்புக் குன்றி, அவை அல்லாடுகின்றன.

இந்தத் தகவல்களை, புள்ளிவிவரங்களைத் தமது சமீபத்தைய அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதம பொருளாதார நிபுணர் சண் யோன் கேரே.

ஆசியக் கண்டத்தில் வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கை 330 கோடி. உலகிலேயே அதிகூடிய மக்கள் வாழும் பிராந்தியம் ஆசியாவே ஆகும். அவற்றில் மிகப் பலவும் அபிவிருத்தி குன்றிய நாடுகளே. உணவுப் பொருள்களின் விலைகள் உலகச் சந்தையில் அடிக்கடி உயர்கின்றன, உயர்த்தப்படுகின்றன. அதன் விளைவு அபிவிருத்தி குன்றிய நாடுகளிலேயே பெரும் தாக்கங்களையும் பாதிப்புகளையும் கொண்டுவருகிறது.

செல்வந்த நாடுகளில் எரிபொருள்கள் மற்றும் பிரதான உணவுப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்படும் போதெல்லாம் அதனால் தாங்கொணா நிலைக்குத் தள்ளப்படுவது ஆசியா, ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகளும் அவற்றில் வாழும் மக்களுமே.

தமது பிராந்திய நாடுகளில் கிடைக்கும் வளங்களை விட ஆசியா போன்ற ஏனைய பிராந்திய நாடுகளின் வளங்களையும் மறைமுக வழிகளில் தமது நலன்களுக்காகப் பயன்படுத்தும், சுரண்டும் போக்கையும் மேற்குலக நாடுகள் நிறுத்தாவிடினும் குறைப்பதிலாவது மனம்கொள்ள வேண்டும்.

ஆசியப் பிராந்தியம் போன்ற வளம் குன்றிய நாடுகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதில் அபிவிருத்தியடைந்த செல்வ நிலை நாடுகள் ஆர்வம் காட்டுவதையும் மறைப்பதற்கில்லை. மறுப்பதற்கில்லை.

இதேவேளை, ஆசிய நாடுகளில் பலவும் (இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உட்பட) ஆயுதக் கொள்வனவுக்குப் பெருந் தொகைப் பணத்தைச் செலவிடுகின்றன. உள்நாடுகளில் எழும் அரசியல் பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வை நாடுவதைத் தவிர்ப்பதாலும், அண்டை நாடுகளுடன் பகைமை உணர்வை வளர்ப்பதாலும் ஆயுதக் கொள்வனவை அவற்றால் தவிர்த்துக்கொள்ள முடியாமற் போகிறது.

அடுத்து, இயற்கை அனர்த்தங்களின் விளைவாக உணவு உற்பத்தியில் வீழ்ச்சியும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றால் உண்டாகும் பொருளாதார முடைகளும் ஆசிய நாடுகளின் ஏனைய பலவீனங்களில் சில வாகும்.

உலகமயமாதலால் உண்டாகக் கூடிய பின்னடைவுகளும் மிக அதிகளவில் அபிவிருத்தி குன்றிய ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தின் தாழ்வுநிலைக்குக் காரணமாக அமைகின்றன.

வளர்ச்சி அடைந்த நாடுகளின் உற்பத்தி மற்றும் கைத்தொழில்சார் பொருள்களுக்கான இறக்குமதி வரிகளை உயர் மட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் வைத்திருப்பதும் ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகமாக இருப்பதை மறைக்க முடியாது.

மொத்தத்தில், சனத்தொகை அதிகமாக உள்ள ஆசியப் பிராந்தியத்துக்கு, அதனைச் சேர்ந்த நாடுகளுக்கு அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இப்போதுள்ளதை விட அதிக அளவில் உதவவும், அவற்றின் வளங்களை மறைமுகமாகச் சுரண்டாமல் இருக்கவும் அபிவிருத்தி அடைந்த மேற்குலக நாடுகள் மனம் கொள்ள வேண்டும்.

செயலில் காட்ட முன்வருமா?

# அரசுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ள அமைச்சர்களின் முரண்பாடான கருத்துகள்

**நேற்று 01-05-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சன கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.**

உலகத் தலைநர்களில் ஐ.நா. நிபுணர் குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை ஆராயப்பட்டு வரும் அதேவேளையில் கொழும்பில் விரிவடையும் அரசியல் நாடகங்கள் பல வகையிலும் கவலைக்குரியனவாக மட்டுமின்றி நகைப்புக்குரியனவாகவுமுள்ளன.

நிபுணர் குழுவின் அறிக்கையைப் புறக்கணிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ள அதேவேளையில் இறுதி நேரத் தீர்மானமாக ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குப் பதில் ஒன்றை அனுப்புவ தென்று முடிவு செய்தது. அது மட்டுமல்ல நிபுணர் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்களுக்கு தீர்வு காணும் நடவடிக்கையிலும் அரசு இறங்கியுள்ளது.

இதேவேளை நாட்டின் வெளியுறவுத் துறையை நிர்வகிக்கும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தொடர்ந்தும் முரண்பாடான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். இதன் காரணமாக வெளிநாட்டு அரசுகளும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும், அமைச்சர் காலத்துக்குக் காலம் தெரிவிக்கும் எந்த விடயமும் அதிகார பூர்வமானது என்பதறியாது தடுமாறி நிற்கிறார்கள்.

கடந்த வியாழக்கிழமை வெளியுறவுத்துறை அமைச்சர் கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளை ஐ.நா. அறிக்கை மீதான அரசின் கொள்கையை விளக்குவதற்காக அழைத்திருந்தார். அறிக்கை தொடர்பாக ஆக்கப் பூர்வமாக கருத்து வெளியிடுவது அரசு கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை. நாட்டில் இதுவரை வெளிப்பட்டுள்ள சாதகத்

## பான் கீ மூனுக்கு பீரிஸ் எழுதிய கடிதம் குறித்து அரசுத் தலைவர்கள் கவலை

தன்மை யான விடயம் எதுவும் வெளியிடப்படாமல் இருக்கிறது. அறிக்கையில் காணப்படும் சர்ச்சைக்குரியதான விடயங்களும் அதனை இந்தக் கால கட்டத்தில் வெளியிட்டமையும் உருவாகியுள்ள சாதகமான நிலைமையைக் கெடுப்பதாகவும் பிரிவினைகளைத் தோற்று விப்பதாகவும் இருக்கின்றன என்று அவர்களிடம் அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் அமைச்சரின் ராஜதந்திரிகளுடனான சந்திப்புக் குறித்து வெளிநாட்டு அமைச்சு விடுத்த அறிக்கையில், வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் அமைச்சர் பேசுகையில் பெரிய அளவில் மக்கள் எதிர்ப்பு பேரணிகளை நடத்துவது சிலர் கூறுவது போல் அரசின் நோக்க மல்ல. மக்கள் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அல்லது வன் முறைகளை தூண்டிவிட்டு ஐ.நா. சமூகத்துக்கோ வெளிநாட்டு தூதர்களுக்கோ சங்கடங்களை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல. இந்த உணர்ச்சிகரமான சூழ்நிலையில் இவ் வாறான குற்றச்சாட்டுக்களை சிலர் அதற்கென வைத்திருக்கும் அரசில் நிகழ்ச்சித் [illegible] [illegible] றார்கள் என்றார் அமைச்சர்.

அவர் கூறுவதெல்லாம் உண்மையான நிலைமை தான் என்று வெளிநாட்டு தூதுவர்களையும் வெளிநாடுகளையும் நம்ப வைப்பதற்கு அமைச்சர் முயன்றிருக்கிறார். ஆனால் இது உண்மைதானா அல்லது வெறும் கற்பனைக் கதையா என்பது புரியாத புதிராக விருக்கிறது.

வெளிநாட்டு அமைச்சுக்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மகாவலி மத்தியநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இன்னொரு கபினெற் அமைச்சர் இதற்கு நேர்மாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அரசு சார்பு டெய்லி நியூஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி வருமாறு: ''ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் மே தின பேரணி தாருஸ்மன் அறிக்கைக்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பர்'' என்று அதன் தலைப்பு இருந்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொருளாளரும் தொழில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சருமான டல்லஸ் அழகப்பெருமா கூறியது:

அரசு நடத்தும் மேதினப்பேரணியில் முதல் தடவையாக 16 அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளவிருகின்றன. தொழிற் சங்கங்களுடன் வேறு அமைப்புகளும் ஆயிரக்கணக்கான மக்களும் கலந்து கொள்வார்கள். தாருஸ்மன் அறிக்கைக்கு எமது நாட்டின் எதிர்ப்பினை இது எடுத்துக் காட்டுவதாக இருக்கும்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ''பிறந்த நாட்டுக்காக ஒரு சொட்டு வியர்வை, நாட்டைப் பாதுகாக்க மக்களின் சுவர். முழு நாட்டின் உழைக்கும் மக்கள் அனைவரும் ஏகாதிபத்திய வாதிகளுக்கெதிராக எழுவார்கள்'' என்பதாக அவர் கூறினார்.

அரசின் ஊடக அமைச்சரும் பேச்சாளருமான கெஹலிய ரம்புக் வெலவும் கருத்து வெளியிட்டிருந்தார். புதன் கிழமை அமைச்சரவைக் கூட்டத் தின் பின்னர் அடுத்த நாள் அவர் பத்திரிகையாளர்களிடம் பேசினார். ஐ.நா.வை மிக மோச மாக அவர் விமர்சித்தார். டெய்லிநியூஸ் பின்வருமாறு அதைப் பற்றி கூறியிருந்தது; மூவர் குழுவை அமைத்ததன் மூலம் ஐ.நா.செயலாளர் நாயகம் உலக சபையின் பெறுமதி மிக்க நிதிகளை விரயமாக்கி விட்டார் என்று அமைச்சர் கண்டித்தார். இலங்கை ஜனாதிபதி மற்றும் இராணுவத் தலைவர்கள் மீது அவதூறு கற்பித்து தமது சொந்த நன்மைக்காக சில நாடுகளையும் நிறுவனங்களையும் திருப்திப்படுத்தி மீண்டும் பதவியில் அமர்ந்து கொள்வதற்காக இந்த எழுத்தாளர்களை அவர் பணிக்கு அமர்த்திக் கொண்டார் என்று ஊடக அமைச்சர் சாடியுள்ளார்.

**சிரிப்புக்கு இடமான நகைச் சுவை**

இந்த அதிகார பூர்வ நாடகத்துக்கு அமைச்சர் விமல் வீரவன்சவும் தமது நகைச் சுவையான / 'காமெடி' அம்சங்களை வழங்கவே செய்தர். நியுயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. சபைக்கு நிகராக மற்றொரு ஐ.நா. சபையை நிறுவும் படியாக அமைச்சர் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டார். இந்த சபை எங்கு அமைக்கப்பட வேண்டும், எந்தெந்த நாடுகள் அதில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

வியாழக்கிழமை பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அமைச்சர் வீரவன்ச, ''பான் கீ மூன் ஒரு பொம்மை, அறிக்கையைத் தயாரித்த மூன்று முட்டாள்களும் கூட பொம்மைகள் தான். அவர்கள் பணம் கொடுத்து வாங்கப் பட்டவர்கள். ஏகாதிபத்தி வாதிகள் விரும்பும் சில காரியங்களை செய்வதற்காக இருப்பவை இந்த நிறுவனங்கள். எனவே இலங்கையின் அரசுத் தலைவருக்கு ஒரு கடமை இருக்கிறது. வேறொரு ஐ.நா வை அமைக்க வேண்டிய தகவலை அவர் ஏனைய நாட்டுத் தலை வர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். எமது நட்பு நாடுகளுக்கும் நடு நிலை நாடுகளுக்கும் போதுமான அளவு நாம் விளக்கங்கள் கொடுக்க வில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டாலும் கூறப் படா விட்டாலும் குறித்த மூன்று முட்டாள்களின் 'அறிக்கைக்கு நாம் பதிலளிக்க வேண்டியதில்லை. நாம் என்ன செய்தோம். மிகக் குறைந்த பாதிப்புகளுடன் போரை நடத்தினோம். ஆனால் வினைத்திற னுடன் வெளி நாடுகளுக்கு விளக்கத் தவறிவிட்டோம். இதனை வெளிநாட்டமைச்சுத் தான் செய்ய வேண்டும்'' என்று கூறினார் அமைச்சர் வீரவன்ச.

புதிய ஐ.நா. ஒன்றை அமைக்கும் முயற்சியைத் தொடர்கிறாரோ இல்லையோ தற்போதைய அமைப்பின் அனுசரணையில் மிக உல்லா சமாக வெளி நாடுகளில் காலம் கழித்து விட்டு அண்மையில் தான் அவர் நாடு திரும்பினார். கென்யா-நைரோபியில் நடந்த குடியிருப்புக்கள் தொடர்பான மாநாட்டில் சென்று கலந்து கொண்டுவிட்டு அண்மையில் தான் அவர் நாடு திரும்பியிருந்தார்.

இவ்வாறு அமைச்சர்கள் பலரது கருத்துக்களும் மாறுபாடாகக் காணப்படுகின்றன. மக்கள் பேரணி பற்றிய கருத்து எங்கிருந்து உருவானது. எந்தக் கருத்தை கொழும்பிலுள்ள ராஜ

**தொகுப்பு: கோகுலன்**

தந்திரிகள் நம்பவேண்டும் என்று அமைச்சர் பீரிஸ் எதிர் பார்க்கின்றார். அவரது சொந்தக் கருத்தினையா? அல்லது மற்றவர்கள் குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்றவர்களின் கருத்தையா? இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும்படி ஜனாதிபதியே அழைப்பு விடுத்திருந்தார். அன்றைய காலை டெய்லி நியூஸ் பத்திரியை அமைச்சர் வாசித்திருக்க மாட்டார்''

அரச அதிகார பூர்வ இணையத்தளம் கூட பின்வருமாறு ஏப்ரல் 18 ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த வருடம் மே தினமானது தொழிலாளர் இனத்துக்கு முறையாக கௌரவம் செலுத்தும் அதே நேரம், எமது நாட்டின் மீது அநீதியைக் கொண்டு வர மேற்

(28ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் மிகுந்த வடமராட்சி விழிப்புணர்வுக் கண்காட்சி

## காலத்தின் தேவை இது



பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

நீண்ட காலத்தின் பின்னர் எமது பிரதேசத்தில் இக்கண்காட்சி நடைபெறுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. கடந்த காலங்களில் நோய்களின் தாக்கம் குறித்து மக்கள் அறிந்துகொள்ள முடியாதிருந் தது. இதனால் வைத்தியசாலைகளை நாடிச் செல்வோர் தொகை அதிகரித்திருந்தது. ஆனால் இந்தக் கண்காட்சி மூலம் நோய்களின் தாக்கங் களை பொதுமகன் ஒருவன் ஆரம்பத்திலேயே அறிவைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

இக்கண்காட்சியினால் சமுதாயத்தில் உடல் ஆரோக்கியத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இக்கண்காட்சியின் பயன்பாடு பாடசாலை மட்டத்திலிருந்து சமுதாயத்திடம் முழுமையாகச் சென்றடையும் என நம்பலாம் - என்றார்.

## மிக அவசியமான கண்காட்சி



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் உயிரியல் பிரிவில் கற்கும் மாண வன் ம.சொலமன் கண்காட்சியைப் பார்வையிட்ட பின்னர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு.

இக்கண்காட்சி எமது கல்விக்கு மட்டுமல்ல, எமது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படும் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறியக் கூடிய வாய்ப்புக்களைத் தந்துள்ளது. நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளைக் கண்டு அவற்றுக்குரிய தீர்வை நாம் கவனிக்கக்கூடியதாக இருக்கும். நோய்கள் தொடர்பாக இலங்கை மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை. இது ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளது. ஆனால் யாழ். பல் கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நோய்கள் தொடர்பான ஆரம்ப அறிகுறிகளை இந்தக் கண்காட்சி மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லியுள்ளார்கள். இதன் மூலம் எம்மக்கள் மத்தியில் நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நிச்சயம் ஏற்படும். இக் கண்காட்சி அனைவருக்கும் பிரயோசனமானது- என்றார்.

## சமூகத்தில் அதிகரிக்கும் புற்று நோய்த் தாக்கம்



இக் கண்காட்சியில் புற்றுநோய் தொடர்பாக விளக்கம்ளிக் கும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை யில் உயர்தர உயிரியல் பிரிவில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவி த.அருந்துஷா கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் வழிகாட்டலின் கீழ் புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துக்களைக் கூறும் பணியை நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். மருத்துவ பீட மாணவர்களால் எமக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. புற்று நோயின் தாக்கம் எமது சமுதாயத்தில் அதி கரித்துக் கொண்டிருப்பதன் காரணமாக அதைப் பற்றிய அறிவைப் பெற்று விளக்கமளிப்பதற்காக விரும்பி இத்துறையைத் தெரிவு செய்தேன். அங்கு நான் பெற்றுக்கொள்கின்ற அறிவும், அனுபவமும் எனது உயர் கல்விக்கு உதவும் - என்றார்.

## கிராமப் புறங்களும் பயனடையும் வகையில்...



யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட 31 ஆவது அணியைச் சேர்ந்த கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவில் இடம் பெற்றுள்ள மாணவி அ.பிரண்ஜா கண்காட்சி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:-

அண்மையில் இடம்பெற்ற கண்காட்சிகள் யாழ். நகரை மையமாக வைத்து நடைபெற்றுள்ளன. அதனால் இந்தப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் சாதாரண பொதுமக்களும் அவற்றைப் பார்த்துப் பயன் பெறக் கூடிய வாய்ப்புகள் குறைவாக இருந்தன. அதனால்தான் கண்காட்சியை நகருக்கு வெளியே புறநகரப் பகுதியில் நடத்த முடிவு செய்தோம். இதற்கு மருத்துவ பீட பேராசிரியர்கள், விரிவுரையா ளர்கள், மருத்துவ பீட மாணவர்கள் உள்ளிட்ட அனைவரது ஒத்துழைப்பும் எமக்குக் கிடைத்துள்ளது.

நோயாளர்களிடமிருந்து பெற்ற அனுபவங்களைக் கொண்டு அவர்கள் விளங்கக் கூடிய மொழியில் இந்த விழிப்புணர்வுக் கண்காட்சியில் விளக்கங்கள் தொகுக் கப்படுகின்றன. - என்றார்.

## தெரியாத விடயங்களை அறிய முடிந்தது



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ் நிலை மாணவி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் செல்வி இ.கார்த்திகா கருத்துத் தெரிவிக்கையில்: இந்தக் கண்காட்சி அனைவருக் கும் பயனளிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது. கண் காட்சியில் இடம்பெற்றுள்ள அம்சங் கள் ஒவ்வொன்றையும் விளக்கும் மரணவர்கள் தமது பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். இந்தக் கண் காட்சியை அனைத்து மக்களும் பார்வை யிட வேண்டியது அவசியமாகும். நோய்கள் பற்றி எமக் குத் தெரியாத பல விடயங்களை இந்தக் கண்காட்சி வாயிலாக நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. நீரிழிவு, புற்றுநோய், மாரடைப்பு, உயர் குருதிய முக்கம், ஆஸ்மா, பார் வைக் குறைபாடு ஆகியன இன்று எம் மக்கள் மத்தியில் முக்கிய நோய்களாகக் காணப்படுகின்றன. அத்தோடு, நாளாந்தம் இடம் பெறும் வீதி விபத்துக்களும் எம் மக்கள் நோக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இது போன்றவற்றுக்கு இந்தக் கண்காட்சி யில் விடை காணக்கூடியதாக உள்ளது - என்றார்.

## வரவேற்புக்குரிய முயற்சி



காச நோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி தெரிவிக்கையில்

உடலியல் நோய்கள், தொற்று நோய்கள் பற்றித் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. புற்றுநோய், ஆஸ்மா பற்றிய விழிப் புணர்வுகளுக்கும் சரியான விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின் றன. தற்போது குடா நாட்டில் பிரதான பிரச்சினையாக வீதி விபத்து உருவெடுத்துள்ளது. 30 கிலோ மீற்றர் வேகத்துக்கு அதிகமாகச் சென்றால் உயிரிழப்பு ஏற்படும் என்ற நிலை தற்போது உள்ளது. இது தொடர்பாகத் தெளிவான விளக்கங்கள் அளிக் கப்பட்டு வருகின்றன.

பொது மக்களின் பங்குபற்றல் அதிகமாக உள்ளது. இது இன்னும் அதிகரிக்க வேண்டும். இந்தகைய நிகழ்வுகளை வெளிப்படுத்த ஏனைய ஊடக நிறுவனங்கள் தொலைக்காட்சிகள் முன்வர வேண்டும். இந்தக் கண்காட்சி பாடத்திட்டம், நடை முறை வாழ்க்கை என்பவற்றில் மாணவர்களுக்கு நல்ல பயனுள்ளதாக அமைந்துள்ளது- என்றார்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி பொன்னுராசா**

(முன்னாள் சிமெந்து தொழிற்சாலை சுப்பிரிண்டன்)

மண்ணில்:09.12.1927

திதி: அமாவாசை 02.05.2011

விண்ணில்:04.05.2000

பாசத்துடன் எம்மைப் பாரினிலே
வளர்த்தவரே உமது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருற்றிருக்கும்
மனைவி, மகள்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

958/19, தலையாழி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பொ.சமறக்கொடி (மகன்).

(5728)(39)

## தேவை

தையலில் அனுபவம் வாய்ந்த ஐந்து ஆண்களும், இரண்டு பெண்களும் தேவை. கட்டிங் தெரிந்த இரண்டு ஆள்களும் தேவை.

**நியூ ஸ்ரைலோ ரெக்ஸ்ரைல் ரெயிலர்ஸ்**
கோப்பாய் சந்தி அருகில் பருத்தித்துறை வீதி.

தொடர்புகளுக்கு:0771387239

(3739)

## கண்ணீர் அஞ்சலி

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் காவலாளியாக கடமையாற்றும் திரு.ந.சிவலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நவரத்தினம் யோகம்மா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
விசுவமடு.

செயலாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

(3714)

## குழவி குத்தி பெண் காயம்

தென்மராட்சி, மே 2

மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிலிருந்த கருங்குழவிகள் வீதியில் சென்ற பெண்ணைத் தாக்கிக் காயப் படுத்தியது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா தேவராணி (வயது 58) என்பவர் குழவிகளால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-207)

## வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் இல்லை

தென்மராட்சி, மே 2

பூநகரி நாச்சிக்குடா கடலேரிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் சில்ருக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் சாவகச்சேரி மக்கள் வங்கியூடாக 61 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு சில குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு கிடைக்காமையால் இக்குடும்பங்கள் வங்கிக்கு அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-207)

## நீங்கா நினைவுகளில்...

| 15ஆம் ஆண்டு | எட்டாம் ஆண்டு | முதலாம் ஆண்டு |
|---|---|---|
| அன்னை மடியில் 11.11.1960 | அன்னை மடியில் 30.04.1962 | அன்னை மடியில் 05.05.1978 |
| ஆண்டவன் மடியில் 10.12.1996 | ஆண்டவன் மடியில் 06.12.2003 | ஆண்டவன் மடியில் 13.05.2010 |







| அமரர் | அமரர் | அமரர் |
|---|---|---|
| க.சிறிஸ்கந்தராசா (சிறி) | க.இராசமோகன் (ராசு) | க.சத்தியசீலன் (மாறன்,அப்பன்) |

நல் இதயங்கள் நடு வாழ்வில் சாய்ந்தனவோ
அன்பின் திருவடிவம் அகிலத்தை மறந்தனவோ
என்பை உருக்கி விட்டு எங்கு சென்று மறைந்தீர்களோ
துன்பம் துயரமெல்லாம் தொடர் கதையாய் வளர்ந்தனவே
இன்பக் கவிக் குயில்களை எப்போது காண்போமோ
என்றும் உங்கள் நினைவால் வாடும்

கைதடி தெற்கு,
பொதுநூலக வீதி, கைதடி.

திரு.திருமதி கந்தையா
குடும்பத்தினர்

(3741) (39)

## தவறிவிட்டது

இரத்தினம் தபோதன் என்பவரின் மோட்டார் சைக்கிள் ரக்ஸ், இன்சூரன்ஸ், சாரதிஅனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய சிறிய ஜக்கேற்றுடன் ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதிக்கும், புத்தூர் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

செல்வா சைக்கிள் அன் ஹாட் வெயர்ஸ்,
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

## விற்பனைக்கு

உடற்பயிற்சி (ஜிம்) செய்வதற்கான ஒரு தொகை உபகரணங்கள் கைதடியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0770889528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளைச் சுமந்து வலிமையோடு....


2006 மே 2. மாலை 7.05.

இருளுக்குள் தன்னைப் போர்த்திக் கொண்டு உறங்குநிலைக்கு சென்று கொண்டிருந்த யாழ்.நகரத்தை-

''சடசட.'' என எழுந்த வேட்டொலிகள் திடுக்கிட வைத்தன. என்ன ஏதென்று எட்டிப் பார்க்கவும் பயம். பேசாமல் வீட்டுக்குள் முடங்குவதே உயிருக்கு உத்தரவாதம் என்பதால் வேட்டொலியோடு எல்லோரும் அடங்கிப் போய் விட்டனர்.

வேட்டொலி கேட்ட இடம் 'உதயன்' அலுவலகத்தில்தான். போர் மேகங்கள் மீண்டும் கருக்கட்டத் தொடங்கியிருந்த அந்தக் காலத்தில் துணிந்து நின்று உண்மையைச் சொன்னவன் உதயன் மட்டும் தான். அது அதிகாரத்தின் உச்சாணிக் கொப்பில் நின்று ஆடுபவர்களுக்கு கொதிப்பை உண்டு பண்ணியது. எப்படியாயினும் உதயனின் குரல்வளையை அறுத்து விட்டால் தாம் செய்யும் அட்டூழியங்கள் உலகின் காதுகளை எட்டுவதைத் தடுக்க முடியும் என்று எண்ணியவர்கள் களத்தில் இறங்கினர்.

முகங்களை கறுப்புத் துணியால் இறுகக் கட்டிய நால்வர் திடுதிடுப்பென துப்பாக்கி ஓசைகளோடு உதயனுக்குள் நுழைந்தனர். முகப்பில் ஆயுதமுனையில் பாதுகாப்பு உத்தியோகத்தரை ஒருவர் பணயமாகப் பிடித்து வைத்திருக்க ஏனைய மூவரும் ஆளுக்கொரு திசையில் சரமாரியாகச் சுட்டபடி முன்னேறினர். வந்தவர்களின் கண்களில் முதலில் சிக்கியவர் விற்பனை முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்). கேட்டுக் கேள்வி எதுவும் இல்லாமல் தமது அறையில் அமர்ந்திருந்த அவர்மீது துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ச்சப்பட்டன. உதயனின் வளர்ச்சிக்காகத் துடிப்போடு இயங்கிவந்த இந்த இளைஞனின் இதயத் துடிப்பை கணநேரத்துக்குள் துப்பாக்கி ரவைகள் முடித்து வைத்தன.



ஆயுதத்தின் துணையோடு ஓர் ஊடகத்தைச் சிதைக்க வந்தவர்களின் கோரப் பசிக்கு முதல் இரையானார் சுரேஷ். ஆனாலும் ஆயுததாரிகளின் வெறி அடங்கவில்லை. அவர்கள் இன்னும் நிறைய இரைகளை எதிர்பார்த்தனர். கொலை வெறியோடு பத்திரிகை மடிக்கும் பகுதிக்கு உள்நுழைந்து '' எல்லாரும் நிலத்தில விழுந்து படுங்கோடா!'' என்று உச்சஸ்தாயியில் கத்தினர். வீழ்ந்து படுத்தவர்களில் ஒருவரான ரஞ்சித் குமார் ராஜரட்ணம் தலையை மெல்ல நிமிர்த்த முனைகையில் நெஞ்சில் பாய்ந்தது துப்பாக்கி ரவை. சில நாள்களுக்கு முன்னரே இல்லற பந்தத்தில் இணைந்திருந்த ரஞ்சித், மணமாலை வாடுவதற்கிடையில் பிணமாகிப் போனார். ரத்தம் ஆறாகப் பெருக, அதனை மிதித்தபடி ஆசிரியபீடத்தை நோக்கி ஆவேசமாக ஆயுததாரிகள் நெருங்கினர். வெளியில் கேட்ட வேட்டொலிகளாலும், மரண ஓலங்களாலும் எச்சரிக்கையடைந்த ஆசிரியபீடத்தினர் பாதுகாப்பான இடமொன்றில் பதுங்கிக் கொண்டனர்.

பெரும் வேட்டைக்காக நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்த கொலையாளிகள் ஆசிரியபீடத்தில் எவருமே இல்லாததைக்கண்டு ஏமாற்றமடைந்தனர். தங்கள் இயலாமையை கணினிப்பிரிவிலிருந்த கணினிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மீது காட்டினர். கண்மூடித்தனமான அவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தால் கணினிப் பிரிவு ஒரு நொடியில் சிதைந்து சின்னாபின்னமானது. குற்றுயிராய் கிடக்கும் கணினி களைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தபடி வெளியேறிய கொலையாளிகள் வாசலில் கிடக்கும் சடலங்களைப் பார்த்து அகந்தையுடன் மறைந்து விட்டனர்.

20 நிமிடங்கள் வரை நீடித்த இந்தக் கொலை வெறியாட்டம் ஆயுததாரிகளின் வெளியேற்றத்தோடு முடிவுக்கு வந்தது. அடுத்த நாள் மே3ஆம் திகதி உலக ஊடக சுதந்திர தினம் அனுஷ்டிக்கப் படவிருந்த தருணத்தில், அதிகாரபீடத்தின் ஆசீர்வாதத்தோடு இயங்குகிற ஆயுதக் கும்பலால் உதயன் பணியாளர்கள் இருவரின் உயிரைக் குடித்த கோரச் செயலால் உலகமே அதிர்ச்சியில் உறைந்தது. இதற்கு முன்னரும் பல தடவைகள் உதயனின் மீதும் அதன் பணியாளர் மீதும் தாக்குதல் முயற்சிகள் நடந்திருந்தாலும் உதயன் அலுவலகத்துக்குள் உட்புகுந்து உயிரைக்குடித்த நிகழ்வு அப்போதுதான் முதன்முறையாக நடந்தேறியது. இத்தோடு 'உதயனின் கதை முடிந்தது' என்றெண்ணி எக்காளமிட்டுக்கொண்டனர் ஆயுததாரிகள். ஆனால் அடுத்த நாளின் காலைப் பொழுது அவர்கள் கன்னத்தில் பளார் என அறைந்தது. ரத்தத்தின் பிசுபிசுப்போடு, மரணங்கள் தந்த வலிகளைச் சுமந்த பின்னரும் நெஞ்சுறுதியோடு அடுத்தநாள் (மே 3) உதயன் வழமை போலவே ஊரெங்கும் உதித்தான்.

என்னதான் ஆயுதமுனையில் உண்மையின் குரல்வளையை நசுக்க முனைந்தாலும், எல்லாவற்றையும் தகர்த்தெறிந்தபடி உள்ளதைச் சொல்வதற்காக மக்களுக்கு நல்லதைச் செய்வதற்காக உதயன் வந்தே தீருவான் என்ற உண்மை அதன் மூலம் உணர்த்தப்பட்டது. எனினும் அதன்பின்னரும் உதயனின் வருகையைத் தடுக்க பல முயற்சிகள் அதே ஆயுததாரிகளால் எடுக்கப்பட்டன. பத்திரிகையைத் தீயிட்டு எரித்தல், விநியோகத்தைச் சீர்குலைத்தல், தொலைபேசி மிரட்டல்கள், எச்சரிக்கைக் கடிதங்கள், கைக்குண்டு வீச்சுக்கள் என நீண்டு சென்ற முயற்சிகள் எல்லாம் உதயனின் வருகையைப் பாதிக்கவே இல்லை. மாறாக ஒவ்வொரு அடியும் விழ விழ உதயன் இன்னும் உயிர்ப்போடு எழுந்தான். பொய்மைகளைச் சுட்டெரித்தான். இப்போதும் அவன் கதிர்கள் உண்மைக்காக, தமிழ் மக்களின் உரிமைக்காக தினமும்- திக்கெட்டும்- பரவியபடியேதான் இருக்கின்றன. உண்மையின் பெயரால், தர்மத்தின் நிழலால் மக்கள் சேவையை அவன் தெய்வீக சேவையாகவே மன திருத்திச் செயற்படுவான்.

*

## தீபமிட்டு அஞ்சலிப்போம்



பஸ்ரியன் ஜோர்ஜ்
சகாயதாஸ் (சுரேஷ்)
(விற்பனை முகாமையாளர்)

உதயத்தில் உதயன் கற்றோர் உள்ளங்கள் உவகை கொள்ளும்
இதயமுள் ளோர்கள் ஆவல் இனித்திடத் தேடி நிற்பார்
புதியன பூக்கும் வல்லோர் புலமையை ஏற்றும் போற்றும்
அதிபெரு வளர்ச்சி இந்த அகிலஉலகமும் உதயனின் சுற்றம்


தெருக்களும் ஊரும் பேரும் தீமைகள் குறைக்கத் தேடும்
உருக்கொளும் கொடுமை யாவும் ஒழித்திடக் கூடும் ஆயும்
செருக்கிலான் பயணம் மக்கள் சேவையே மகேசன் சேவை
இருக்கிறான் பயமேதென்பார் இதயத்தே உதயன் உள்ளான்

நெருப்பென உலவி வந்தான் நீறிட்டான் பொய்மை கொன்றான்
பெருக்கினான் இனிமை தூய்மை பெருகிடும் உதயன் கண்டோ!
சுருக்கிட நினைத்தார் ஊடக சுதந்திரம் அழிக்க வந்தோர்
வருத்தினார் எரித்தார் எங்கள் வளங்களைச் சிதைத்து நின்றார்

ஆயுதம் தரித்தோர் செய்த அநீதிக்கு உதவி நின்றோர்
தூய சிந்தனையின் முன்னே துலங்கிடும் வலிமை அற்றோர்
நேயமாய் பணி தொடர்ந்த நியாயத்தைக் கொல்ல நின்றார்
தாய்நிலத் துயர்ந்த செய்தித் தாளின் மேல் பொறாமை கொண்டார்

ஊடக சுதந்திரத்திற் கொரு தினம் உலகம் போற்றும்
ஏடிதன் பெருமை ஓங்கும் ஒரு சிலர் ஏனோ ? அறிவின்
கூடமாய் ஒளியாய் தோன்றும் குன்றதன் இருப்பைத் தீய்த்தே
காடதாய் மாற்றும் தீய கயவராய் கோலம் கொண்டார் ?

கடமையாம் ஊடகத்தின் கருத்துரை சுதந்திரத்தை
அடக்கிடத் துணிந்தெம் அன்பின் ஊழியர் உயிரைக் கொன்றார்
திடமன துடையோம் அந்த அநீதியின் ஐந்தாம் ஆண்டு
நினைவினில் வைத்தோம் அன்பின் தீபமிட் டஞ்சலிப்போம்.



இராஜரட்ணம்
ரஞ்சித்குமார்
(விநியோகப் பகுதி
பணியாளர்)

நிர்வாகத்தினரும் பணியாளர்களும்
உதயன் வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 மே 2011 திங்கட்கிழமை

# அரச திணைக்களங்களுக்கு நிரந்தரக் கட்டடம்; காணி வழங்கியும் பணி ஆரம்பமாகவில்லை

## அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணமாம்

சண்டிலிப்பாய், மே 2

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகை வீடுகளில் மாறி மாறி இயங்கி வரும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய நிலையம் ஆகிய வற்றுக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு பொதுமக்கள் 8 பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கிய போதிலும் இப்பிரதேசத்தில் கடமையாற்றும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் அக்காணியில் கட்டடம் அமைக்கும் பணி பின்தள்ளப்பட்டு வருகிறது.

இந்த அதிகாரிகளின் நிலைப்பாடு குறித்துக் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ள பொதுமக்கள் இந்த விடயத்தில் உயரதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் கட்டடங்களை அமைப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள அரச கால்நடை வைத்திய நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தபால்கந்தோர் ஆகியன வாடகை வீடுகளில் பல வருடங்களாக இயங்கி வருகின்றன.

இப்பிரதேசத்தில் முடிக்குரிய காணி இல்லாததினால் கட்டடம் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. காணி இருக்கும் பட்சத்தில் கட்டடம் அமைப்பதற்கு அரசிடமிருந்து நிதியைப் பெறலாம் என்றும் பொருத்தமான காணியைத் தந்துதவுமாறும் பொது மக்களிடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன அமைப்பதற்கு மானிப்பாய், டச்சு வீதியில் 8 பரப்புக் காணி பொது மக்களினால் வழங்கப்பட்டது. இத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் காணியை நேரில் சென்று பார்வையிட்டு சம்மதம் தெரிவித்தனர்.

ஆனால் இந்தக் காணியில் கட்டடங்கள் அமைப்பதற்கு இப்பிரதேசத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். நொண்டிச் சாட்டுகளைக் கூறி கட்டடம் அமைப்பதற்குத் தடையாக இருக்கும் இவர்களின் செயற்பாடு குறித்து அதிருப்தியும் விசனமும் தெரிவித்துள்ள பொது மக்கள் இந்தக் காணியில் கட்டடம்அமைப்பதற்கான ஒழுங்குகளை உயரதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள்.

இதே வீதியில், பொதுமகன் ஒருவர் இலவசமாகக் கொடுத்த காணியில் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு வருவதுடன் சண்டிலிப்பாய்க்கான கமநல சேவை நிலையமும் அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஐ-115)

# தெல்லிப்பழையில் கணினிப் பயிற்சி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைக் குழுவும், தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து தெல்லிப்பழை பிரதேசத்தில் க.பொ.த சாதரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இலவச கணினிக் கற்கை நெறியை அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளன.

இந்தக் கற்கை நெறியில் பங்குபெற ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரங்களைச் செயலாளர், மல்லாகம், காங்கேசன்துறை வீதி, 7 ஆம் கட்டையிலுள்ள சங்க அலுவலகத்தில் கையளிக்குமாறு சங்கச் செயலாளர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஆறுமாத கால இந்தப் பயிற்சி நெறியின் முடிவில் அரச தகைமையுடைய சான்றிதழும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-313-207)

# ஒஸ்மானியாக் கல்லூரியில் பரிசளிப்பு

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த வருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் கல்லூரிக்கென பழைய மாணவர்களால் ஒரு தொகுதிப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கல்லூரி அதிபர் ஏ.சி.முபாரக் மௌலவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வி.ரி.செல்வரத்தினம் கலந்து கொண்டார். (4-ரி)

# தொடர் மழை காரணமாக புகையிலைச் செய்கை பாதிப்பு

கோப்பாய், மே 2

கடந்த இரு வாரங்களாகப் பெய்த தொடர்மழையினால் புகையிலைச் செய்கையாளர்களுக்கு பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புகையிலை இலை கழுவப்பட்டு அதில் வெண்புள்ளிகள் தோன்றியுள்ளதுடன் அவை தரமற்று போய்விட்டதாகவும் மேலும் அடி மரம் வேர்கள் பலவும் வெளிக்கிளம்பி செடிகள் சாய்வடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் உற்பத்திச் செலவைக் கூட பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் இந்த வருடம் வலி.கிழக்குப் பிரதேசத்தில் குறைந்தளவு நிலப்பரப்பில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதனால் அதிக விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-72)

## தேரில் வீதியுலா...



பக்திப் பரவசம்: நேற்று இடம்பெற்ற சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலின் வருடாந்தத் தேர்த்திருவிழாவின்போது அதிக எண்ணிக்கையில் அடியவர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர். (86)

# வரணி பொது நூலகத்தில் சைக்கிள் தரிப்பிடம் இல்லை

யாழ்ப்பாணம், மே 2

வரணி பொது நூல்நிலையத்துக்கு வரும் வாசகர்களின் வசதிகருதி சைக்கிள் தரிப்பிடம் ஒன்று அமைப்பதற்கு கடந்த வருடம் சிமெந்திலான தூண்கள் பல சாவகச்சேரிப் பிரதேச சபையினால் மேற்படி நூல் நிலைய வளாகத்தில் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

இருந்தும் இன்றுவரை தரிப்பிடம் ஏதும் அமைக்கப்படவில்லை. இதனால் நூல் நிலையத்துக்கு வரும் பொது மக்கள் தமது சைக்கிள்களைக் கொளுத்தும் வெயிலிலேயே நிற்பாட்டிவிட்டு செல்லும் நிலை உள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபை இது விடயத்தில் ஊக்கம் செலுத்தி சைக்கிள் தரிப்பிடம் ஒன்றை விரைவில் அமைத்து உதவிடும் படி வாசகர்கள், பாடசாலை மாணவர்கள் வேண்டுகின்றனர். (ஐ-122)

# மனைவியைக் கொலை செய்ததாகக் கணவர் மீது தொடரப்பட்ட வழக்கு மேல் நீதிமன்றுக்கு பாரம்

தென்மராட்சி, மே 2

சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பகுதியில் கடந்த 2008 ஆம் ஆண்டு மனைவிக்கு மரணம் ஏற்படுத்தும் நோக்கில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் காயம் ஏற்படுத்திப் பின்னர் மரணம் ஏற்படுத்தியதாக கணவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சுருக்கமுறையற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் முதல் தோற்ற அளவில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் வழக்கினை மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்துமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

வழக்கின் எதிரி ஏற்கனவே மேல்நீதிமன்றின் பணிப்பின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டதால் மேல் நீதிமன்ற அழைப்புக் கிடைக்கும்போது நீதிமன்றுக்குச் செல்ல வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (ஐ-207)

# பௌத்த மதத்தின் 2600 ஆம் ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் சிறப்பான வெசாக் கொண்டாட்டம்

நாவற்குழி, மே 2

பௌத்த மதத்தின் 2600 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய சம்புத்த ஜெயந்தியை முன்னிட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி வெசாக் கொண்டாட்டங்களை யாழ்ப்பாணத்தில் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

முப்படை வீரர்களும் பொலிஸாரும் இதனை முன்னிட்டு தமது இடங்களுக்கு அருகில் வீதியோர அலங்காரங்கள், அலங்கார வளைவுகள், வெசாக் வெளிச்சக் கூடுகள் ஆகியவற்றை அமைப்பதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டும் சென்ற வருடங்களில் பயன்படுத்தப்பட்ட பொருள்களைக் கொண்டும் தென்பகுதியிலிருந்து எடுத்து வரப்படுகின்ற மூலப்பொருள்களைக் கொண்டும் இவற்றை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெறுகின்றன.

பௌத்தர்களின் மத அனுட்டானங்களில் சம்புத்த ஜெயந்தி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதனால் வடபகுதிகளிலுள்ள பௌத்த மத விகாரைகளில் வழிபாட்டை நிகழ்த்த பெருந்தொகையில் மக்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

யாத்திரிகர்களும் சுற்றுலாப் பயணிகளும் பெருமளவில் வரவுள்ளதால் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதிகளின் உரிமையாளர்களும் முன் ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர்.

தென்பகுதி மக்களுக்கு விருப்பமான யாழ்ப்பாணப் பாரம் பரிய உற்பத்திகளும் அதிகம் விற்பனையாகுமென எதிர் பார்த்து உற்பத்தியாளர்கள் தயாரிப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர். (க-121)

# வடகடல் வலைத் தொழிற்சாலைக்கு ரூ. 154 மில். வழங்குகிறது இந்தியா

வண்ணை, மே 2

கடந்த யுத்தகால அனர்த்தங்களில் சேதமடைந்த குருநகர், வடகடல் வலைத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்ய இந்திய அரசு 153 மில்லியன் ரூபா கடனுதவி வழங்க முன்வந்துள்ளது.

இதனூடாக வடபகுதி மீனவர்களின் மறுமலர்ச்சிக்கு உதவும் நோக்கமும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வடபகுதியில் 20 ஆயிரம் மெற்றிக்தொன் மீன்பிடி ஈட்டப்பட்டிருப்பதாகவும் அதனை இவ்வருடம் 25 ஆயிரம் மெற்றித்தொன் ஆக கூட்ட வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் மேற்படி கடனுதவி வழங்கப்பட இருப்பதாகவும் அறிய முடிகிறது. (ஐ-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில் 4 மாதங்களில் மட்டும்

# 'கள்ளக் கறண்ட்' பெற்ற 96 பேர் அபராதம் செலுத்தினர் ரூ.40 லட்சம்!

யாழ்ப்பாணம், மே2

யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு மாத காலத்தில் மட்டும் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 96 பேர் சிக்கியுள்ளனர்.

இவர்கள் நீதிமன்றங்களில் 40 லட்சம் ரூபாவை அபராதமாகச் செலுத்தியுள்ளனர்.

மின்சார சபையின் யாழ். அலுவலக உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இது குறித்து அந்த அதிகாரி மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோத மின்பாவனையாளர்களின் அதிகரிப்புக் காரணமாகப் பொலிஸாருடன் மின்சாரசபையினர் அண்மைக்காலங்களில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளின்போது இவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். இவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டு, 40 லட்சம் ரூபாவை குற்றப் பணமாகச் செலுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் சாவகச்சேரி மற்றும் குளப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் சட்ட விரோத மின்பாவனையாளர்கள் 15 பேர் பிடிக்கப்பட்டு 3 லட்சத்து 69 ஆயிரத்து 377 ரூபா அபராதமும் -

கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் 21 பேருக்கு 14 லட்சத்து 8 ஆயிரத்து 105 ரூபா அபராதமும் -

கடந்த மார்ச் மாதம் குளப்பிட்டி, வட்டுக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் 33 பேருக்கு 10 லட்சத்து தொள்ளாயிரத்து 12 ரூபா அபராதமும் -

கடந்த ஏப்ரல் மாதம் குளப்பிட்டி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் 27 பேருக்கு 11 லட்சத்து 84 ஆயிரத்து 312 ரூபா அபராதமும் - நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டது.

இனிவரும் காலங்களிலும் சட்டவிரோத மின்பாவனையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-9-311)

# ஐந்து ரூபா முத்திரையுடன் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழி

யாழ்ப்பாணம், மே2

பொதுமக்கள் தமக்கிடையே ஏற்படுகின்ற சிறு சிறு பிணக்குகளைப் பிரதேச மட்டத்தில் உள்ள மத்தியஸ்தர் சபை ஊடாக 5 ரூபா முத்திரைச் செலவுடன் மட்டும் இணக்கப்பாட்டை எட்ட முடியும்.

மத்தியஸ்தர் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ப.சனா தனசர்மா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதேச செயலக ரீதியான மத்தியஸ்தர் சபைகள் இலங்கையில் 302 இயங்கி வருகின்றன.

இதில் 7ஆயிரத்து 500 உறுப்பினர்கள் அங்கம் வகித்து வருகின்றனர்.

இந்த மத்தியஸ்தர் சபை மூலம் கிராம, பிரதேச மட்டங்களில் ஏற்படுகின்ற சிறு, சிறு பிணக்குகளைச் சிக்கலின்றித் தீர்த்து வைப்பது, பகையாளிகளுக்கிடையில் சுமூகப் போக்கை ஏற்படுத்தி இணக்கப்பாட்டைக் கொண்டுவருவது என்கின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்கிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகளைத் தீர்த்து நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வோம் என்கின்ற தொனியில் மத்தியஸ்தர் சபையை அணுகி 5 ரூபா முத்திரைச் செலவுடன் பிரச்சினைகளுக்குரிய இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும்.- என்றார். (ஐ-9)

தபாலதிபர்கள் சேவைக்கு

# நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 58பேருக்கு இன்னும் நியமனம் இல்லை

யாழ்ப்பாணம், மே2

வடமாகாணத்தில் 58 தபாலதிபர்கள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றிய போதும் இதுவரை சேவையில் இணைக்கப்படவில்லை. இதுதொடர்பாகத் தபாலமைச்சிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது ஆள்சேர்ப்புச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அபிவிருத்திப் பணிகளில் நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிரதம தபாலதிபர் தர்மராஜா.

உபதபாலதிபர்களுக்கான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட போக்குவரத்துப் பிரச்சினைகளால் யாழ்.தபால் திணைக்களம் தற்போது நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நட்டத்தில் இருந்து மீள்வதற்குத் தபால் திணைக்களங்கள் ஊடாக வழங்கும் சேவைகள் அதிகரிக்கப்படவேண்டும். இதற்காகத் தொழில்களை விருத்தியடையச் செய்ய வேண்டும். தற்போது யாழ்.மாவட்டத்தில் 560 தபாலகங்களும், 3000 இற்கும் மேற்பட்ட உபதபாலகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தபாலகங்களின் சேவைகளுக்காக ஆள்சேர்ப்புப் பயிற்சி வழங்கப்பட்டு நேர்முகத் தேர்வுக்குப் பங்குபற்றியவர்கள் 58 பேருக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை.

எனவே திணைக்களங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டுமானால் புதிய தபாலதிபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

அத்துடன், சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கும் உப தபாலதிபர்கள் தமது கடமைகளைச் சிவர நிறைவேற்றினால் மட்டுமே தபாலகங்கள் அபிவிருத்தியடையும்.- என்றார். (ம-313)

தகுதியான புன்முறுவல்...




முயற்சிக்குப் பாராட்டு: யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவின்போது வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வி.ரி.செல்வரத்தினம் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (4-ரி)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே2

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மணவாளக் கோல விழாவும் பஜனை நூல் வெளியீடும் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 7மணிக்கு நடைபெறவுள்ளன.

விசேட சங்காபிஷேக வழிபாடுகளைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்குப் பஜனை நூல்வெளியீடு இடம்பெறும். நீதிவான் இகுழந்தைவடிவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை முன்னாள் கிராம உத்தியோகத்தர் சு.செல்வராசாவும் மதிப்பீட்டுரையை கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் அதிபர் சு.பவளகுமாரும் வெளியீட்டுரையை யாழ்.சாக்கோ வைத்திய நிலைய வைத்தியர் கே.ரி.எஸ்.சபாநாதனும் வழங்கவுள்ளனர். (வ-313)

# நுணாவிலில் திருட்டு; இருவர் கைது

தென்மராட்சி, மே2

சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய இருவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி இரவு நுணாவில் பகுதி வீடொன்றில் ஆறுலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் பெறுமதிமிக்க பொருள்களும் திருட்டுப் போயுள்ளதாக மறுநாள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக நுணாவில் மேற்கைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த 26 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் 27ஆம் திகதி ஆஜர் செய்தனர்.

இந்த நபரை மே 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். பொலிஸார் மேற்கொண்ட தொடர் நடவடிக்கையினால் மீசாலை மடத்தடியைச் சேர்ந்த மேலும் ஒருவரைக் கைது செய்து கடந்த 28 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்தநபரை மே5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-207)

# வடமராட்சிக் கல்வி வலயத்தின் சமூக விஞ்ஞானப் போட்டிகள்

வடமராட்சிக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகள் சமூக விஞ்ஞானப் போட்டிகளை மே மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் வகுப்பு ரீதியாக நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் விவரங்களை உடன் சமர்ப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

கோட்ட மட்டத்திலான சமூக விஞ்ஞானப் போட்டிகள் மே மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் தரம் 6 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரையுள்ள மாணவர்களுக்கிடையே வகுப்பு ரீதியாக நடத்தப்படவுள்ளன.

கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகள் பாடசாலைகளின் வகைப்படுத்தலுக்கமையத் தனித்தனியாக நடத்தப்படவுள்ளன.

200மாணவர்களுக்குக்குறைந்த பாடசாலைகள், 201 தொடக்கம் 500 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 501 தொடக்கம் 1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 1000 இற்குக் கூடிய மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என நான்கு வகையாகப் பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டதற்கமைய தனித்தனியே கோட்ட மட்ட, வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. வலய மட்டப் போட்டிகள் மே மாதம் 30 ஆம் திகதியும், மாகாண மட்டப் போட்டிகள் ஜூலை மாதம் முதலாம் திகதியும், தேசிய மட்டப் போட்டிகள் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதியும் நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# மல்லாகத்தில் விவரம் பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே2

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைப் பிரிவிலுள்ள ஆயுள்கால அங்கத்தவர்கள் பலர் இடம்பெயர்ந்து இருப்பதால் அவர்கள் தற்போது வசிக்கும் முகவரியை 7ஆம் கட்டை, காங்கேசன்துறை வீதி, மல்லாகம் பிரிவு அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்களே வைத்தியசாலைக்கு உயிர் கொடுங்கள்



வருகின்ற மே 18 ஆம் திகதி தமிழர்களைக் கொன்றொழித்த முள்ளிவாய்க்கால் தினம் எம்மினத்தைமென்று - கொன்று - தின்று சீரழித்து 3 வருடங்களைக் கடக்கின்ற நிலையிலும் வன்னி மாவட்டங்களில் கொடிய போர் ஏற்படுத்திய அழிவுகள் - சிதைவுகள் - சின்னாபின்னங்களை இன்னும்தான் அபிவிருத்தி செய்தபாடில்லை. பேச்சளவிலும், பத்திரிகைச் செய்தியோடும் நின்றுபோகிறது.

போரினால் அழிவுற்ற பாடசாலைகள், வைத்தியசாலைகள், என எவற்றையும் அபிவிருத்தி செய்யாமல் அரசு ஏனோ தானோ என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று வருடத்தில் 38 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 18 ஆயிரம் பேர் வரை மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் இன்னும் 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மட்டும் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்த நிலையில் வட்டக்கச்சி வைத்தியசாலையின் பரிதாப நிலையை இதுவரை எவரும் கண்டு கொண்டதாக இல்லை. "காதலன் தன் காதலியின் வருகையை எதிர்பார்த்து பிரியமுடன் காத்திருப்பது போல" இந்த வைத்தியசாலை ஒரு வைத்தியரின் வருகைக்காக மூன்று வருடங்களாகத் தவம் கிடக்கிறது.

யுத்தம் முடிவடைந்து மக்கள் இந்தப் பகுதியில் மீள்குடியமரத் தொடங்கிய காலத்திலிருந்து இந்த வைத்தியசாலையை இயங்க வைப்பதற்கு வைத்தியருக்கான விண்ணப்பம் கோரப்பட்ட நிலையிலும் எவருமே விண்ணப்பிக்கவில்லையென்றும் குறிப்பாக வன்னி மாவட்டத்தில் உள்ள வைத்தியர்கள் அங்கு சேவையாற்ற முன் வருகிறார்களில்லை என்கின்ற குற்றச்சாட்டை அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ்.ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தைச் சார்ந்த அதிகாரியொருவர் முன்வைத்தார்.

இதன்போது குறுக்கிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வன்னிப்பகுதியைச் சேர்ந்த வைத்தியர்கள் அப்பகுதிகளுக்குக் கடமையாற்ற வருகிறார்களில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஏனெனில் வன்னியில் கொடூர யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது அங்கு மக்களோடு, மக்களாக இரவு, பகல் பாராது மருத்துவ சேவையில் தம்மாலான பங்களிப்பினை அர்ப்பணிப்புடன் புரிந்தவர்கள் அவர்கள். எனவே இந்தச் சாக்குப் போக்குகளை விடுத்து அந்த வைத்தியசாலையை மீளவும் உயிர்பெறச் செய்வதற்கு வழி சமையுங்கள் என்று அறிவுறுத்தினார்.

எது எவ்வாறாயினும் வட்டக்கச்சியில் சிவிக்சென்ரர், மாயவனூர், இராமநாதபுரம், மாவடியம்மன் உள்ளிட்ட பகுதிகளில் இதுவரை 3 ஆயிரத்து 87 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளனர் என்று செயலகப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தினமும் தமது வாழ்வாதாரத்தை ஓட்டுவதற்கே ஆதாரமின்றி அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நோய் நொடி வந்தால் அதனைப் போக்குவதற்கு ஏதுவான - வசதியான வைத்தியசாலையொன்று இல்லாத நிலையில் அவஸ்தைப்படுகிறார்கள்.

வட்டக்கச்சியில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அவர்கள் 11 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டுள்ளது.

"பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பார்களே! அதுபோலதான் கொடிய போரினால் எல்லாவற்றையும் கண் முன்னே பதைக்க, பதைக்க, பறிகொடுத்துவிட்டு ஏதிலியாகத் திரிகின்ற இந்தப் பகுதி மக்களுக்கு மேன்மேலும் துயரங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

நினைத்துப் பாருங்கள் 11 கிலோமீற்றர் தூரம் வரைக்கும் சென்று மருத்துவ சேவையைப் பெறுவதென்பது எவ்வளவு கடினமானதொன்று. அவசர சிகிச்சைக்காக ஒருவரைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் உயிர் பிரிகின்ற நிலைகூட ஏற்படலாம்.

"வைத்தியர்கள் வருகிறார்களில்லை, அதனால் வைத்தியசாலை மூடிக்கிடக்கிறது" என்று நொண்டிச்சாட்டு சொல்லிக் கொண்டிருக்காமல் அதற்கு உயிர்கொடுக்கத் துறைசார்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் இதுவே இன்றைய அவசர அவசியத் தேவையாகும்.

எம்மண்ணிலே பிறந்து, வளர்ந்து உயிர்காக்கும் உன்னத பணிக்காகத் தம்மை உயர்த்திக் கொண்ட வைத்தியர்கள் உயர்ந்த எண்ணத்தோடு, வட்டக்கச்சி வைத்தியசாலையில் தமது சேவையைத் தொடர முன்வர வேண்டும்.

அவ்வாறு பெருமனத்தோடு சேவையாற்ற முன்வரும் தருணத்தில் வெந்து - நொந்து போயுள்ள அந்தப் பகுதி மக்களுக்கு ஓரளவு ஆறுதலான மனநிலையினை வைத்திய சேவை ஊடாக ஏற்படுத்த முடியும்.

அதனை விடுத்து "பனையால் விழுந்தவனை மாடேறி மிதிக்கின்ற" செயல் போல அப்பகுதிக்குக் கடமைக்குச் செல்லாமல் விட்டு விடாதீர்கள். எம் மக்கள், எமது சேவைதான் அவர்களுக்குத் தேவை என்கின்ற நல்ல எண்ணத்தை மனதில் விதைத்து உங்கள் சேவை வட்டக்கச்சி மக்களுக்கும் கிடைக்க ஆவன செய்யுங்கள்.

வைத்தியரின் வருகைக்காக

**கவிநேசன்**

வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் வட்டக்கச்சி வைத்தியசாலைக்கு விமோசனம் கிடைக்க வழிகோலுங்கள், அதற்கு உயிர் கொடுங்கள், மக்களின் மருத்துவ தேவைக்கு வழிகாட்டுங்கள். ★

அனைத்தையும் இழந்து நிற்கிறோம், மிஞ்சியது எமது இயற்கை மூலவளமான
'கற்பகதரு' மட்டுமே!





பனைவளம் பெருக்கி வளமுடன் வாழ, கூட்டுறவில் நாட்டுயர்வுகாண பனந் தொழில் வல்லுநர்கள் ஒன்றுபட்ட 40வது வருட உதய நாள்!
(ஸ்தாபிதம்:01-05-1972)

இதனையும் அழித்தால்....?

அடக்குமுறைக்கு அடிபணியாமல் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் கல்வி, கலாச்சார, பொருளாதார வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் கூட்டுறவுத் தலைவர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் யாவருக்கும் இப்புனித நாளில் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்!

இந்தப் பனை வளம் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லப்போகின்ற அசையாத சொத்து!

நாளாந்தம் வெட்டித் தள்ளுகிறார்களே!
நெஞ்சு நெருடுகிறது!



எமதருமை தமிழ்பேசும் சகோதர பெருங்குடி மக்களே! தமிழர்தம் தலைவர்களே! பொறுப்பற்ற வகையில் பனை வளத்தை வெட்டியழிக்கும் கொடிய செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த உழைப்பாளர் நாளில் நாமனைவரும் உறுதிபூணுவோம்!

பனை வெட்டுவது சட்டப்படி குற்றமாகும்!

"பனையை நடுவோம், பயனைப் பெறுவோம்"

பிரசுரம்:-
எங்கிருந்தாலும்
பனை வளத்துக்காக வாழ்கின்ற
"கற்பகக் காவலன்" க.நடராசா
(பனைசார் நிறுவனங்களின் ஸ்தாபகர்)



T.P:00612-98965186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு பகலாக நோயாளர்களுக்கு சேவைபுரியும் தாதியர்களை கௌரவிப்பது எமது கடமையாகும்

## வவுனியா வைத்தியசாலையின் அத்தியட்சகர் தெரிவிப்பு

வவுனியா,மே 2

வைத்தியசாலைகளில் இரவு பகலாக நோயாளர்களுடன் சேவைபுரியும் தாதியர்களைக் கௌரவிப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ்.சத்தியமூர்த்தி.

கடந்த வாரம் வவுனியா பொது வைத்தியசாலையின் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவில் கடமையாற்றியவரும் 38 வருடங்கள் வைத்தியசாலையில் தாதிய சேவையில் கடமையாற்றி ஓய்வு பெறுபவருமாகிய திருமதி மகேஸ்வரி சிவபாலனின் சேவைநலன் பாராட்டு விழா பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் க.சந்திரகுமார் தலைமையில் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய அத்தியட்சகர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கடந்த எட்டு வருடங்கள் போர்ச்சூழல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் இரவு பகலாக வந்த நோயாளிகள் பல்வேறு வேதனைகளுடன் விடுதிகளில் சிகிச்சை பெற்றதை நாம் மறந்து விட முடியாது. அந்த வேளைகளில் எமக்குப் பல வளங்கள் பற்றாக் குறையாக இருந்ததுடன் ஆளணி வளமும் குறைவாகவே இருந்தது. அதனையும் தவிர்த்து இன்னல்களுடன் வந்த மக்களுக்கு நல்ல சேவைகளை நித்திரை விழித்து தமது குடும்பத்தையும் பாராது வைத்தியசாலையிலே தங்கி சேவை செய்த இவர் போன்ற தாதியர்களின் சேவைகள் மதிப்பிடமுடியாத ஒன்றாகும். அவர்கள் செய்த சேவையின் பிரகாரம் நீண்ட ஆயுள் காலம் அவர்கள் வாழ்ந்து தொடர்ந்து வெளியிலிருந்தும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பல வைத்திய நிபுணர்கள், சிரேஷ்ட தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர்கள் சேவையைப் பாராட்டி வாழ்த்துரைகள் வழங்கினார்கள். இதில் வைத்தியசாலையில் கடமைபுரியும் பலதரப்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

(க-501)

## கிணறுகளுக்கு குளோரின்

முல்லைத்தீவு,மே 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிணறுகளுக்கு குளோரின் இடப்படாததால் பூச்சிகளின் பெருக்கத்தினால் நீர் பாதிப்படைந்துள்ளது.

மிகநீண்டநாள்களாகக்கிணறுகளுக்குக் குளோரின் இடப்படாமையால் பாசி படர்வதுடன் பூச்சிகளும் பெருகி நீர் அசுத்தமடைந்து காணப்படுகிறது. எனவே விரைவில் கிணறுகளுக்கு குளோரின் இடப்பட வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (க-500)

## ஆலயத்துக்கு 70 லட்சம் ரூபா இழப்பு

யுத்த அனர்த்தங்களால் கிளிநொச்சி முழங்காவில் பிள்ளையார் ஆலயத்துக்கு சுமார் எழுபது லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தம், இடப்பெயர்வு என்பவற்றின் காரணமாக பல்வேறு இழப்புக்களும் அழிவுகளும் ஏற்பட்டன. அந்த வகையில் கிளிநொச்சி முழங்காவில் பிள்ளையார் ஆலயத்துக்கு சுமார் எழுபது லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது கிடைத்து வருகின்ற சிறிய நிதி உதவிகளைக் கொண்டு ஆலயத்தைப் புனரமைத்து வருவதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (க-6)

புதிய எழுச்சி...



சேவைகள் தொடரட்டும்: அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வில் எம்.பிக்களான மாவை.சேனாதிராசா, சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம் ஆகியோர் பிரதேச சபைச் செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

## மதுபோதையில் இடையூறு செய்த நால்வருக்கு தண்டம் விதிப்பு

கிளிநொச்சி,மே 2

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் மதுபோதையில் பாதசாரிகளுக்கு இடையூறு விளைவித்த நான்கு பேருக்குத் தலா ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் மது அருந்திவிட்டு வீதியால் பயணித்த பாதசாரிகள் மற்றும் பயணிகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்கள் நால்வருக்கும் தலா ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் எச்சரிக்கை செய்தும் விடுவிக்கப்பட்டனர்.

(க-6)

# மாந்தை கிழக்குப் பிரதேச சபையில் புதிய உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வு

முல்லைத்தீவு,மே 2

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான பதவியேற்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் புதிதாகத் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், முதன்மை விருந்தினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பாண்டியன் குளம் பாளையடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியத்துடன் மாந்தை கிழக்குப் பிரதேச சபை வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வு மாந்தை கிழக்குப் பிரதேச சபைச் செயலர் திருமதி கு.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தெரிவான 3 உறுப்பினர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தனிநாயக மும் உப தலைவராக சிவலோகநாதன் செந்தூரனும் தெரிவாகியுள்ளனர். (க-6)

## மீளக்குடியமர்ந்தவர்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கல்

கிளிநொச்சி,மே 2

கிளிநொச்சி, கல்மடு நகர்ப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 132 குடும்பங்களுக்கு சோஆ நிறுவனம் தற்காலிக வீடுகளை வழங்கியுள்ளது.

கிளிநொச்சி, கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள நாவல்நகர் மற்றும் றங்கன் குடியிருப்பு ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள 132 குடும்பங்களுக்கே சோஆ நிறுவனம் தற்காலிக வீடுகளை வழங்கியுள்ளது.

அத்துடன் 100 குடும்பங்களுக்கு கழிப்பறைகளையும் அமைத்துக் கொடுத்துள்ளதுடன் இதுவரை 95 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளையும் வழங்கியுள்ளது.

இதேவேளை மேலும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-6)

# தொடர்ந்து பெய்துவரும் மழையால் முல்லைத்தீவு விவசாயத்துக்கு பாதிப்பு

முல்லைத்தீவு,மே 2

முல்லைத்தீவில் தொடருகின்ற கோடை மழைகாரணமாக விவசாய நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது கோடை மழை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாரிபோன்று தொடர்ந்து பெய்து வருகின்றது. இதனால் சிறுபோக நெற்செய்கையில் பெரும் பாதிப்புத் தோன்றியுள்ளது. அத்துடன் மேட்டுப் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பெரும்போகத்தின் போது அடைமழை, வெள்ளம் காரணமாக விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டனர். சிறுபோகத்தின் போதாவது இதனைச் சீர்செய்யலாமென்ற நம்பிக்கையுடன் அவர்கள் காத்திருந்தனர். ஆனால் தற்போது பெய்துவரும் கோடை மழை அந்த நம்பிக்கையைத் தகர்த்துள்ளது. கடும்மழை காரணமாக சிறு குளங்களின் கீழ் செய்கை பண்ணப்படும் வேளாண் பயிர்கள் பாதிப்புறும் நிலையை எட்டியுள்ளன. அத்துடன் மேட்டுப் பயிர்ச் செய்கைக்காக நிலத்தைப் பண்படுத்துதல், விதைகளை நாட்டுதல் போன்ற வேலைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் விவசாயிகள் பெரும் கவலையில் மூழ்கியுள்ளனர். இடியுடன் கூடிய மழை பெய்து வருவதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீட்டு நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-500)

## மூன்று வர்த்தக நிலையங்களுக்கு கிளிநொச்சியில் சீல் வைக்கப்பட்டது

கிளிநொச்சி,மே 2

கிளிநொச்சி நகரப் பகுதியில் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் உணவுப் பொருள்கள் மற்றும் திகதி காலாவதியான பொருள்களை வைத்திருந்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றின் உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கிளிநொச்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் கடை உரிமையாளர்களுக்குத் தண்டம் விதித்ததுடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை நீதிமன்றுக்கு கிடைக்கும் வரை வர்த்தக நிலையத்தை மூடி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள் ஏ-9 வீதியை அண்டியுள்ளதால் வீதியில் வரும் பயணிகள் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோருக்குத் தரமான உணவுப் பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காகக் கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தினர் அடிக்கடி வர்த்தக நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மீது திடீர் பரிசோதனை நடத்தி பல வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போர்க்குற்ற விசாரணையில் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

ஐ.நா. அறிக்கை தொடர்பாக ஒருபக்கச் சார்பான நிலைப்பாட்டை அரச தரப்பில் உள்ள வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தலைமைகள் உடனடியாக எடுக்காமல் குறித்த அறிக்கையை நிதானமாகப் பரிசீலித்து அதில் குறிப்பிட்ட பரிந்துரைகளுக்கேற்ப குற்றமிழைத்தவர்களுக்கு எதிராகவும் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சார்பாகவும் செயற்பட வேண்டும். இந்த நியாயத் தன்மைகளில் இருந்து விடுபடுபவர்களைத் தமிழ்ச் சமூகம் ஒருபோதும் மன்னிக்காது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்:-

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாட்டு செயலாளர் நாயகம் ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரும் மேற்கொண்ட போர்க் குற்றங்களையும் அவைகளுக்கான பரிகாரங்களையும் விவரிக்கின்றது. ஐ.நா.கடந்தகாலத்தில் விழிப்புடன் செயற்பட்டிருந்ததால் அப்பாவித் தமிழ் மக்களின் பேரழிவைத் தடுத்திருக்க முடியும்.

இனியாவது தமிழ் மக்களின் ஜனநாயகம் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னின்று ஐ.நா.உழைக்க வேண்டும் என்னும் கருத்து நிலவுகின்றது.

அந்தப் போரில் அப்பாவித் தமிழ் மக்கள் பாதிப்படைந்திருக்கக் கூடாது என்பதுதான் தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடு. ஆனால் அதற்கு நேர்மாறான நிகழ்வு நடந்துவிட்டது.

குற்றம் இழைத்தவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது எந்தவிதத்திலும் நியாயமானது அல்ல.

இதை உணராமல் வடக்கு, கிழக்கில் உள்ள ஒருசிலர் தம் நலம் சார்ந்து குற்றங்களை மறைப்பதற்கு உடந்தையாக இருப்பது தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது.

தமிழ் மக்களின் நலன் தொடர்பாகச் செயற்படும் அரசியல் தலைமைகள் முதலில் மக்களுக்கு நடந்த அநீதியை சுட்டிக்காட்ட வேண்டும். இதை மறைப்பதற்கு எச்சந்தர்ப்பத்திலும் துணைபோகக்கூடாது.

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தலைமையில் சில உறுப்பினர்கள் அரசுக்குச் சார்பாகத் தீர்மானம் நிறைவேற்றியதாகவும் இதற்கு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஆதரவு அளித்ததாகவும் ஒரு பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டது.

எமது கட்சி எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களுக்கு நடந்த அநியாயங்களை மூடி மறைப்பதற்குத் துணைபோகாது என்பதை மிகவும் தெளிவாகக் கூறுகின்றேன் - என்றார்.



ஊர்வலம்....

உலகத் தொழிலாளர் தினத்தையொட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் மேதினப் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணி மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் ஆரம்பமாகி மாவடி வேம்பு காளி கோயில் முன்றலில் முடிவடைந்தது. (21)

# காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

மட்டக்களப்பு,மே2

மட்டக்களப்பு, படுவான்கரைப் பிரதேசத்தின் போரதீவுப் பற்றுப் பிரிவிலுள்ள விவேகானந்தபுரம் கிராமத்துக்குள் கடந்த வியாழக்கிழமை காட்டு யானைகள் புகுந்து மூன்று வீடுகளுக் குச் சேதம் விளைவித்துள்ளன.

இந்த யானைகளின் அட்டகாசத்தால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன், அங்குள்ள மரவள்ளித் தோட்டம், பலாமரம் ஆகியவற்றையும் சேதமாக்கியுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் வரதராஜாவுடன் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் காட்டு யானைகளின் தொல்லைகள் குறித்தும் கலந்துரையாடினார். இந்தக் கிராமத்திற்குள் காட்டு யானைகள் தினமும் உட்புகுந்து கிராம மக்களுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் சேதத்தை விளைவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)






# வடிகால் அமைக்கும் பணி நிறுத்தம்; நெற்செய்கை மேற்கொள்வதில் சிரமம்

அம்பாறை, மே 2

அம்பாறை மாவட்டம் சம்புக்களப்புப் பிரதேசத்திலுள்ள 8 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் பயன்பெறும் வகையிலான திட்டமெனக் கூறிக் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வடிகால் அமைக்கும் பணி கைவிடப்பட்டுள்ளமை குறித்து இந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வடிகால் அமைக்கும் பணி மண் அகழும்- மிதக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்திக் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக சம்புக்களப்புப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான நெற் காணிகள் வடிகால்வாய் வசதிகள் இல்லாத காரணத்தால் விவசாயம் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வடிகால் அபிவிருத்தி வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்தல் காலத்தின் போது துரிதமாக இடம்பெற்ற இந்த நடவடிக்கையானது, தேர்தல் முடிந்ததும் திடீரென நிறுத்தப்பட்டமைக்கான காரணம் [illegible] அந்தப் பகுதி விவசாயிகள் கேள்வியெழுப்புகின்றனர். (ச)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணுலகில் 18.04.1936

விண்ணுலகில் 03.04.2011

திருமதி

## வேலாயுதம் செல்லக்கண்டு

கடந்த 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.05.2011) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் மதியம் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்திலும் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சாவற்கட்டு,
ஆனைக்கோ.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3657) (39)



## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 04.05.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

*றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
*துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

021 222 2867, 0776090926

(3394)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1289 சிகப்பு

இடபம் 22 26 30 31 29-04-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,898,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,925 | 20/- | 4,478,500/- |
| 2 இலக்கங்கள் | 20,536 | 40/- | 821,440/- |
| 1 இல. + லக்கினம் | 20,352 | 60/- | 1,221,120/- |
| 2 இல. + லக்கினம் | 1,858 | 200/- | 371,600/- |
| 3 இலக்கங்கள் | 553 | 1000/- | 553,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,898,400/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,595,660/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 604 | | 501,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 267,886 | | 9,096,660/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,899,400/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 05 12 33 44

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 602 | 500/- | 301,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 604 | | 501,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து இன மக்களுக்கும் பாரபட்சமற்ற உயரிய சேவை

## திருமலை நகரபிதா செல்வராசா உறுதி

திருகோணமலை,மே2

அனைத்து உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கும் நான் செவிமடுப்பேன். அனைத்து இன மக்களின் தேவைகளையும் பாரபட்சமின்றி நிறைவேற்றுவேன். இவ்வாறு தெரிவித்தார் திருகோணமலை நகரபிதா க.செல்வராசா.

திருகோணமலை நகரசபை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் முதலாவது அமர்வு நகரசபை சபா மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமானது. இதற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நாம் நகரசபை நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளோம். அதேபோன்று பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக வந்திருக்கின்றார்கள். எனவே, அவர்களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களே. அதனால் அவர்களின் கோரிக்கைகளையும் செவிமடுத்து, அனைத்து திருகோணமலை மக்களுக்கும் நான் நகரபிதாவாகச் செயற்படுவேன்.

எந்தவொரு வேறுபாடுமின்றி எமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அனைத்து இன மக்களின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு நான் பாடுபடுவேன். பிரதேச அபி விருத்தி மூலம் தேசிய அபி விருத்தியை அடையலாம்.

இதற்கு நகரசபை உறுப்பினர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பங்களிப்பு மிக முக்கியமானது.

எமது சபை சிறந்த சபையாக மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். பிறப்பு முதல் கல்லறை வரை மக்களுடன் தொடர்புபட்டது தான் உள்ளூராட்சி சபை. இந்தச் சபையின் முடிவுகளை செயற்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியமாகும்.

2015ஆம் ஆண்டுக்குள் எமது அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. திருகோணமலையில் 19 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள வீதிகள் திருத்தப்பட வேண்டும்.

திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கும் தீர்வுகளைக் காண வேண்டும். கரையோரங்களை அபிவிருத்தி செய்து திருகோணமலை நகரத்தைச் சுற்றுலா நகரமாக மாற்ற வேண்டும்.பொது மக்களுக்கு உரிய அனைத்து வசதிகளையும் உருவாக்கி, 2015 ஆம் ஆண்டுக்குள் திருகோணமலையை அழகான சுற்றுலா நகரமாகக் கட்டியெழுப்பப் பாடுபடுவேன்- என்றார்.

# பாலமுனை மீனவர்களுக்கு தோணி, வலை வழங்கல்

மட்டக்களப்பு, மே2

ஆரையம்பதிப் பிரதேச செயலாளர் பிரிவின் பாலமுனை கிராமத்திலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு கிழக்கு மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சினால் மீன்பிடி தோணிகளும் வலைகளும் வழங்கப்பட்டன.

பாலமுனை ஆழ்கடல் தரைக்கடல் மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் அலுவலகத்தில் வைத்து இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி உத்தியோகத்தர் எஸ்.ஜெயரூபன் மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர் இளங்கோ ஆகியோர் இந்தப் பொருள்களை வழங்கியுள்ளனர். (ச)

# நகரசபை உறுப்பினரின் சம்பளம் சமூக சேவைக்கு

மட்டக்களப்பு,மே2

காத்தான்குடி நகரசபை உறுப்பினர் சல்மா அமீர் ஹம்சா தனது நகர சபை மாதாந்த சம்பளத்தைசமூக சேவைக்குப் பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

இவர் தனது முதலாவது மாதாந்த சம்பளத்தை காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் நலன்புரி அமைப்புக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கியுள்ளார்.

இந்த அமைப்பின் சமூக சேவைக்காகத் தனது பதவிக் காலம் முழுவதும் பெறவுள்ள மாதாந்த சம்பளத்தை வழங்கவுள்ளதாக சல்மா அமீர் ஹம்சா தெரிவித்துள்ளார். (ச)

# கன்னன்குடா மகாவித்திக்கு இந்திய அனுசரணையில் பஸ்

மட்டக்களப்பு,மே2

இந்திய அரசின் அனுசரணையுடன் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கன்னன் குடா மகா வித்தியாலயத்துக்கு 20 லட்சம் ரூபா பெறுமதியான பஸ்ஸைக் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணத்தால் இந்திய அரசிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய வழங்கப்பட்ட பஸ் பாடசாலை அதிபரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலைக்கு அளப்பெரும் சேவையாற்றுவதற்காக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அவருக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

## வெள்ளத்தில் வயல்கள்....



பாதிப்பு:-மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த அடைமழை காரணமாக பட்டிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட காலபோக விவசாயச் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ச)

# கட்டாக்காலி மாடுகளினால் பயணிகள் சிரமம்

மட்டக்களப்பு,மே2

மட்டக்களப்பு- கல்முனை பிரதான நெடுஞ்சாலையில் கட்டாக்காலி மாடுகளினால் இரவு நேரப் பயணத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மண்முனைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஆரையம் பதி, புதுக்குடியிருப்பு, கிரான் குளம் போன்ற பிரதான வீதி யிலும், மண்முனை தென் எருவில் பற்று (களுவாஞ்சிகுடி) பிரதேச சபைக்குட்பட்ட களுதாவளை, களுவாஞ்சிக்குடி, ஓந்தாச்சி மடம் போன்ற பிரதான நெடுஞ்சாலையிலும் கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் வீதியின் நடுவே உறங்குவதனால் பயணிகள் பல அசௌகரியங்களுக்குட்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (ச)

# தோட்டத் தொழிலாளரின் நாள் சம்பளம் 750 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும்

## மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

நுவரெலியா,மே2

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கருத்திற்கொண்டு தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 750 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கே.கே.பியதிஸ்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனியார்துறையினருக்கு ஓய்வூதியத் திட்டம் வழங்கப்பட்டால் தொழிலாளர்களுக்கு பலத்த சிரமங்கள் ஏற்படும்.

இந்தச் சட்ட மூலத்தை அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அதனைப் பிரகடனப்படுத்துவதற்கு அரசு முனைகிறது.

இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு பத்து வருடங்கள் தொடர்ந்து பணியாற்றியவர்கள் மட்டுமே உள்வாங்கப்படவுள்ளனர். 60 வயதுக்குப் பின்னரே அவர்கள் ஓய்வூதியத்தைப் பெற முடியும்.

சர்வதேச மட்டத்தில் தொழில் புரிபவர்கள் 55 வயதில் ஓய்வு பெறலாம் என்ற நியதி உள்ளது. 55 வயதில் ஓய்வுபெறுபவர் ஓய்வூதியத்திற்காக ஐந்து வருடங்கள் காத்திருக்க முடியுமா? தற்போதுள்ள சட்டங்களின்படி ஓய்வூதியத்திற்குத் தகுதியுள்ள ஒருவர் இடையில் மரணித்தால் அவரது மனைவி அல்லது பிள்ளைகள் ஓய்வூதியத்தைப் பெற முடியும். புதிய சட்டப்படி அது சாத்தியமாகாது.

தனியார்துறையினருக்கு ஓய்வூதியத்தை வழங்கியே ஆக வேண்டும் என அரசு பிடிவாதம் செய்தால் அந்த நிதியத்திற்கு அரசே போதிய பணத்தை முதலீடு செய்யவேண்டும்.

அதனை விடுத்து ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பணத்தை எடுத்துப் பயன்படுத்துவது தவறு.

தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை எமது கட்சி எதிர்க்கவில்லை. எனினும், வருடக் கணக்கில் சிரமப்பட்டு சேமித்த ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பணத்தை எடுக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

அரசு கடந்த தேர்தலின்போது அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வை வழங்குவதாக உறுதியளித்திருந்தது. அந்த வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. - என்றார். (ச-5)

# இரத்தினபுரியில் அடைமழை; களுகங்கை நீர்மட்டம் உயர்வு

பதுளை,மே 2

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக களு கங்கையின் நீர்மட்டம் உயர் வடைந்துள்ளது.

இதையடுத்து களுகங்கையை அண்மித்துள்ள பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு, பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசத்திலுள்ள தாழ் நிலங்கள் அனைத்தும் வெள்ள நீரில் மூழ்கிக் காணப்படுவதுடன், சில பகுதிகளில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# நக்கிள்ஸ் தமிழ் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மூடும் அபாயம்

நுவரெலியா, மே 2

வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள பெருந்தோட்டப் பகுதிப் பாடசாலையான நக்கிள்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் அதன் ஆரம்பப் பிரிவைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. குறைந்தது ஆறு ஆசிரியர்களையாவது உடன் நியமித்துத் தருமாறு அதிபர் வி.வேணுகோபால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மா விலை அதிகரிக்காவிடின் சிலவாரங்களில் தட்டுப்பாடு ஏற்படும்

கொழும்பு,மே2

பால்மாவகைகளின்விலையை 46 ரூபாவால் அதிகரிப்பதற்கு அனுமதியளிக்காவிட்டால் இன்னும் சில வாரங்களில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமென பால்மா நிறுவனங்கள் கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளன.

400 கிராம் பால்மாப் பக்கெற் ஒன்று குறைந்தபட்சம் 244 ரூபாவுக்கு தற்போது விற்பனை செய்யப்படுகிறது. புதிய விலையின்படி 400 கிராம் பால்மா பக்கெற் ஒன்று 290 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் - என பால்மா உற்பத்தி நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், எம்மால் இங்கு பால்மாவின் விலையை அதிகரிக்க முடியவில்லை. இதனால் இனியும் பால்மா வகைகளை இறக்குமதி செய்ய முடியாதுள்ளது என்றும் அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.


பால்மாவகைகளின்விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபை அனுமதியளிக்காவிடின் பால்மாக்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அந்த நிறுவனங்கள் சுட்டிக் காட்டின.

## பிலிப்பைன்ஸ் தூதுவருடன் அமைச்சர் றிசாத் சந்திப்பு
## இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் குறித்து ஆராய்வு

கொழும்பு, மே2

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையே வர்த்தகத்தை மேலும் அதிகரிப்பதற்கு பலமான சாத்தியக் கூறுகள் உண்டெனக் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன், பங்களாதேஷ் - இலங்கைக்கான பிலிப்பைன்ஸ் தூதுவர் பன்ஹாரிம் அப குயினோம் லாவை அமைச்சில் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு கூறினார்



இதன்போது பிலிப்பைன்ஸ் வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருவதாக அமைச்சர் தெரிவித்தார். பிலிப்பைன்ஸ் வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர் எனவும் பிலிப்பைன்ஸ் தூதுவர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையில் தற்போது இடம்பெற்றுவரும் வர்த்தகத்தின் பெறுமதி 20 மில்லியன் அமெரிக்க டொலராகும். அது மட்டுமல்லாது 2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலிருந்து பிலிப்பைன்ஸுக்கான ஏற்றுமதிகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

இலங்கையிலிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு இறப்பர், ஆடைகள் மற்றும் இரத்தினக் கற்கள் என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 2008 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்ததை அதிகரிக்கும் நோக்கில் பிலிபைன்ஸ் வர்த்தக சங்கமும், இலங்கை வர்த்தக சங்கமும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சின் செயலாளர் திலக் கொல்லுரே உட்பட அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ச)

## 10 வருடங்கள் ஒரே இடத்தில் பணிபுரிந்த பிரதேச செயலர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, மே.2

பத்து வருடங்களுக்கு அதிகமாக ஒரே இடத்தில் பணிபுரிந்த பிரதேச செயலாளர்களை இடமாற்றம் செய்வதற்கு அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.


அமைச்சர் டபிள்யூ.டி. செனவிரத்னவின் ஆலோசனைக்கமைய இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை பிரதேச செயலாளர்களுக்கான இடமாற்றம் தொடர்பில் தீர்க்கமான திட்டமொன்று இருக்கவில்லை என்றும், அத்தகைய திட்டம் அமுல்படுத்தப்படுவது இதுவே முதல் தடவை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டிலுள்ள 25 பிரதேச செயலாளர்களில் சுமார் 15 பேர் ஒரே இடத்தில் 10 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி யுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

பிரதேசங்களின் சரியான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி இடமாற்றங்களை மேற்கொள்ளுமாறு அமைச்சர் செனவிரத்ன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.(ச)

### பயிற்சி நிறைவு....



திருகோணமலை கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் முதலாவது தொகுதிக் கடற்படையினர் பயிற்சி பெற்று வெளியேறும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சம்பூர் கடற்படைத் தளத்தில் நடைபெற்றது. (ச)

## தனியார் பஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தால் எதிர் விளைவு ஏற்படும் - அமைச்சர்

கொழும்பு,மே2

பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்காகத் தனியார் பஸ் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம எச்சரித்துள்ளார்.

தனியார் பஸ்சேவை நிறுத்தப்படுமாயின் இலங்கைப் போக்குவரத்துச் சபை அதன் பலத்தை காட்டத் தயாராக உள்ளது என்றும், அது ஒரு பயணியைக் கூட வீதியில் தவிக்க விடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இ.போ.ச. ஊழியர்களுக்கான செயலமர்வின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு,

இ.போ.ச. தனது பலத்தை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இது போக்குவரத்துத் துறையில், நீதியீனமான கோரிக்கைகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறையாகும்.

இந்த அரசு பதவிக்கு வந்த போது இ.போ. ச. புறக்கணிக்கப்பட்ட - பெரும் நஷ்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனமாகக் காணப்பட்டது. ஆனால் இப்போது இ.போ.ச. சுயசார்புள்ள அரச போக்குவரத்துச் சேவையாக மாறிவிட்டது.

இ.போ.சவுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படும். இந்தியாவிலிருந்து உதிரிப்பாகங்களைக் கொள்ளளவு செய்யும் டிப்போக்களுக்கு 2 சதவீதம் ஊக்குவிப்பு வழங்கப்படும். டிப்போக்கள் உதிரிப்பாகங்களைத் திறந்த சந்தையில் வாங்க அனுமதிக்கப்படமாட்டாது - என்றார்.

## ஐ.நா.நிபுணர் குழு அறிக்கைக்கு ஊவா மாகாண சபையில் எதிர்ப்பு

கொழும்பு,மே.2

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையானது நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படுத்தும் எனத் தெரிவித்து நேற்றுமுன்தினம் ஊவா மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை நாட்டின் இறைமையில் கைவைக்கும் ஒரு சட்டவிரோத அறிக்கை என்பதனால் அதனை ஊவா மாகாண சபையின் ஆளும் தரப்பு முற்றுமுழு தாக எதிர்க்கின்றது என மாகாண அமைச்சர் குமார சிறி ரட்னாயக்க பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போது தெரிவித்தார்.

ஜனாதிபதி மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை முற்று முழுதாக எதிர்க்கட்சி என்ற ரீதியில் எதிர்க்கின்றோம் என ஊவா மாகாண எதிர்க் கட்சித் தலைவர் உபாலி சமரவீர தெரிவித்தார்.

ஜே.வி.பியும் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. (ச)

## நிபுணர் குழு அறிக்கை சக்திமிக்கது; முக்கியமானோரைக் கைது செய்ய முடியும்

### ஜனாதிபதி சட்டத்தரணி பி.பி.ஸிக்குத் தகவல்


ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையைக் கொண்டு இலங்கையின் தலைவர்கள், அதிகாரிகளைக் கைது செய்ய முடியும் என ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ பிபிசி சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையைத் தயாரித்தவர்கள் அதிகாரங்கள் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் அறிக்கை மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாக இருக்கின்றது.

இந்த அறிக்கையைக் கொண்டு வெளிநாடுகளில் உள்ள மனித உரிமை அமைப்புக்கள், உள்ளூர் நீதிமன்றங்களின் உதவியுடன் பிடியாணை பிறப்பிக்க முடியும். அவ்வாறு பிடியாணை பிறப்பித்தால் இலங்கையின் அரசியல் தலைவர்கள், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள் என்போர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது கைது செய்யப்படலாம். அதற்கான சக்தியை நிபுணர் குழுவின் அறிக்கை கொண்டுள்ளது என்று விஜேதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் தலைவர்கள், அதிகாரிகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்வது சவாலானதொன்றாகவே காணப்படும் என்றும் பிபிசி சிங்கள சேவைக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் மற்றும் மர்வட்ட செயலகம் இணைந்து நடத்திய புத்தாண்டு தின வைபவத்தில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கியின் கரும பீடத்துக்கு வருகை தந்த யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, 52 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜி.ஏ . சுதசிங்க ஆகியோரை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஸ்ணானந்தன் வரவேற்கின்றார். (319)

# பழைய மாணவர்களே பாடசாலையின் முதுகெலும்பாகத் திகழ்ந்து வருகின்றனர்

பழைய மாணவர்கள் ஒரு பாடசாலையின் முதுகெலும்புகள். அவர்கள் அந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் அதே வேளை சமுதாயத்தின் உயர்ச்சிக்காகவும் உழைப்பவர்கள் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலர் வி.ரி.செல்வரத்தினம் கூறினார்.

யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியில் கடந்த சனியன்று பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: பழைய மாணவர் சங்கம் இந்தப் பாடசாலையில் உயிர்த்துடிப்புடன் செயலாற்றுவதைப் பாராட்டுகிறேன்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தினமும் பாடசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டும். பாடசாலைக்குச் செல்லாமலும் மற்றும்இடைவிலகிஇருக்கும்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி, அவர்கள் ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரையாவது கற்பதற்குப் பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்தப் பாடசாலை ஜி.சீ.ஈ உயர்தர விஞ்ஞான பிரிவைக் கொண்டதாகும். ஆனால், தற்போது ஜி.சீ.ஈ சாதாரணதரம் வரைக்கும் இயங்கி வருகின்றது. அதனை உயர் தரப் பாடசாலையாகவே கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் பேசுகையில்:

இனம், மதம்,மொழி நிற வேறுபாடின்றி மனிதநேயத்துடன் வழங்கப்பட வேண்டியதில் கல்வியும் ஒன்றே. எனது 40 வருட சேவைக்காலத்தில் இலங்கையில் பல இடங்களிலும் சென்று சேவையாற்றிய அனுபவத்தை மறக்க முடியாது. அத்தகைய அனுபவங்களோடு பயணிக்கின்றேன்.

இந்த ஒஸ்மானியாக் கல்லூரி 2003 ஆம் ஆண்டு இந்தவிடத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது 41 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 350 மாணவர்ளுக்கு மேல் கல்வி கற்கிறார்கள்.

எனவே, உங்கள்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஏற்ப இந்த வருட இறுதிக்குள் தேவையான ஆசிரியர்களைப் பெற்றுத்தர முயற்சி எடுக்கிறேன்.

நீங்கள் கனவு காண்பதை நிஜமாக்குவதற்கு நாமும் பக்கபலமாக இருப்போம்.- என்றார்.

பாடசாலை அதிபர் ஏ.சி. முபாரக் மௌலவி உரையாற்றுகையில்:

2003 ஆம் ஆண்டு 45 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 350 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கிறார்கள். எமது பாடசாலை பல சவால்கள் மத்தியில் மீண்டும் இந்த இடத்தில் ஆரம்பிப்பதற்குப் பல வழிகளிலும் ஒத்துழைத்த நல்ல உள்ளங்களை நன்றி உணர்வுடன் நினைத்துக் கொள்வது நாகரிகமானதொன்றாகும். மேலும், கடந்த காலக் கஷ்ரங்களிலிருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் எதிர்காலத்தில் இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும்.- என்றார். (ஐ)

# உபதபால் அதிபர்களின் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படுதல் அவசியம்

யாழ்ப்பாணம், மே2

உப தபாலதிபர்களின்தொழிற் சங்கமும் ஒருங்கிணைப்பு மட்டத்தில் சேர்க்கப்பட்டால் மாத்திரமே தபாலதிபர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும்.

தொழிற்சங்கம் தனிப்பட்ட சேவைகளை வழங்குவதால் தொழிலாளர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை உப தபாலக அதிபர்கள் தொழிற்சங்கத்தின் செயலாளர் பிரேமகுமார விஜேயவர்த்தன.

இந்தச்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் யாழ். பிரதம தபாலக மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது:

1994 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆள் சேர்ப்பு திட்டத்தின் கீழ் உப தபாலதிபர்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளான ஓய்வூதியம்பெறல், சம்பள உயர்வு போன்ற பிரச்சினைகள் அரைகுறையாகவே தீர்க்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட அற்ப சொற்ப பணக் கொடுப்பனவுகள் அதிகமாகப் பலருக்கு கிடைக்கப்பெறவில்லை. இதிலிருந்து நாம் முழுமையாக மீண்டு எமது தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகள் போதியனவாகக் கிடைக்க வேண்டும் எனின் இந்தத்தொழிற் சங்கம் ஒருங்கிணைக்கப்பட்ட மட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.

முக்கிமாக பெண்களின் பிரசவ விடுமுறை, தபாலங்களின் வாடகைக் கொடுப்பனவு, சனிக்கிழமைகளில் விடுமுறை போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியதாக உள்ளன. அத்துடன் உபதபாலகங்கள் போதியளவு வரிப்பயன் பாடுகள் இல்லாமல் வாடகை வீடுகளில் இயங்குவதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

இது தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினையாகாது. பொது மக்களின் முக்கிய தேவைகளில் ஒன்று தபால் சேவை. இந்தச் சேவைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.- என்றார்.

(ஐ-313)

# கலாசாரப் பேரவையின் சேவைகளை கிராமங்களெங்கும் விஸ்தரிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,மே2

யாழ்.மாவட்டத்தின்கலை, பண்பாடு, விழுமியங்கள் மறைந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் பிரதேசங்கள் ரீதியாக கலாசாரப் பேரவையை உருவாக்க வேண்டும். அந்தச் சபையினூடாகக் கிராமங்கள் தோறும் சேவைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின் எமது மரபுரீதியான பண்பாடுகள் பேணப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்

யாழ்.பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் மாற்றமடைந்து வரும் வாழ்க்கை முறைகள், நாளாந்த செயற்பாடுகள் நமது கலாசாரங்களை மறைக்கும் அபாயத்தை உருவாக்குகின்றது.

குறிப்பாக மட்பாண்ட உற்பத்திப் பொருள்களின் பாவனை, சித்த வைத்தியத்துறையின் பயன்பாடு, நவநாகரிக ஆடைகளின் மாற்றம் போன்றன தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிக்கொண்டே போகின்றது.

இவற்றில் இருந்து எமது சமுதாயத்தை மீட்பதற்கு கிராமங்கள்தோறும் சபைகளை உருவாக்க முடியாவிட்டாலும் பிரதேசங்கள் ரீதியாக கிராமங்களை ஒன்றிணைத்து எமது கலை, பண்பாடு, விழுமியங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியது கட்டாய தேவையாக உள்ளது.

எனவே, இவ்வாறான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு சமூக ஆர்வலர்களும் கலைஞர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.- என்றார்.

(313)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே2

மத்திய அரசின் கீழ் இயங்கும் ஆயுர்வேத திணைக்களத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவதற்கு ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 65 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் நேரடியாகவோ அல்லது 021 321 3463 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை அதிகாரி அறிவித்துள்ளார்.(ஐ-288)

***

உயர்கல்வி அமைச்சின் தேசிய வழிவரு தொலைக் கல்விச் சேவையால் நடத்தப்படும் கணினிக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் இயங்கும் தேசிய வழிவரு தொலைக் கல்விச் சேவை மத்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-313)

# சாவகச்சேரியில் தையல் பயிற்சி வகுப்புக்கள்

தென்மராட்சி,மே2

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் பி.ப 4.00 மணிக்கு கண்டுவில் ஒழுங்கை, புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறுமெனச் சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார்.

ஆரம்ப நிகழ்வில் சங்கக் காப்பாளர் திருமதி ரு.இராசரத்தினம், தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் எஸ்.ரவிகரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலரை நம்பி ஒப்படைத்த காரியங்கள் முடியாமல் போகலாம். நினைத்த பொருள் ஒன்றை வாங்க பல இடங்களுக்கு அலைந்து திரியலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. பெற்றோர் வழியில் தொல்லைகள் உண்டு. குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். மனைவி, பிள்ளைகள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம்.

**இடபம்:** எதிலும் விவேகமாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்படும் நாள். நண்பர்களை நம்பி செய்த காரியங்கள் நல்ல விதமாக நடக்கலாம். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.

**மிதுனம்:** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்லவிதமாக நடக்கலாம். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியும். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய சிந்தனைகள் மனதை ஆள்கொள்ளும் நாள். மற்றவர்கள் பாதிக்கப்படுவார்களே என்பதைப் பற்றி கவலைப்படாமல், சில விடயங்களில் நீங்கள் நினைத்ததைச் செய்வீர்கள். கடன் மிகுதிகளை கனிவாகப் பேசி வசூலிப்பீர்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரைச் சந்திப்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள்.

**சிங்கம்:** எதிலும் அவசரமாக, ஆத்திரமாக செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உங்களிடம் உறுதி அளித்த நண்பர் ஒருவர் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள்.

**கன்னி:** மனதைக் குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். பெரிய மனிதர் ஒருவரின் நட்பு கிடைக்கும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில செலவுகளைச் செய்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். பரபரப்பாக செயற்படும் நாள்.

**துலாம்:** எதிலும் துணிச்சலாக முடிவு எடுப்பீர்கள். பெண்கள் பெற்றோர் வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். உறவினர் ஒருவரின் விமர்சனத்திற்கு ஆள்படலாம். திட்டமிட்ட சில வேலைகளை தங்கு தடையின்றி முடித்துக் கொள்வீர்கள். நண்பர் செய்த உதவி ஒன்றுக்காக அவர்களிடம் மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்கலாம். பண வரவு உண்டு.

**விருச்சிகம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். குடும்ப உறுப்பினர்கள் செய்த தவறுகளை பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள். உடல் நலம் இல்லாத உறவினர்கள் சிலரைப் பார்க்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, அறிமுகமான ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம்.

**தனுசு:** எதிர்காலம் பற்றிய கவலைகள் உண்டாகும். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் சரியாகும். குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். அயலார் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. தெய்வ அருளால் சில காரியங்கள் எதிர்பாராமல் நடக்கலாம்.

**மகரம்:** பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். தாய் வழி உறவுகள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். உங்களின் அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். சில பொருள்களை சகாய விலைக்கு வாங்கும் வாய்ப்பு உருவாகலாம்.

**கும்பம்:** பலனை எதிர்பாராமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். யாரிடமும் கடுமையாகப் பேசாமல் அமைதியாகப் பேச வேண்டும். உடன் பிறப்புக்கள் வகையில் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சிலரின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம். வேண்டா வெறுப்பாக சில செலவுகளைச் செய்வீர்கள். மறதியால் அவதியுண்டு.

**மீனம்:** எதிலும், தர்மம், நியாயத்துடன் நடந்து கொள்வீர்கள். வெளியூர் பயணங்கள் செல்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யலாம். முக்கிய வேலை ஒன்றை சிலர் உங்களை நம்பி ஒப்படைக்கலாம். வழக்கமான வேலைகளை தங்கு தடையின்றி செய்வீர்கள். சொந்த பந்தங்களின் வீடுகளுக்குச் செல்லலாம். புதிய முயற்சியில் வெற்றி கிட்டும்.

# கிடைத்திருக்கும் அடுத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துமா ஐ.நா.?

**'தி அட்லாண்டிக்' என்ற இணையத்தளத்தில் ஆர்மின் ரோஸன் எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

**2009** ஆம் ஆண்டின் முதற் பகுதியில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மனக் குழப்பத்தினைத் தருகின்றதொரு நிகழ்வினையும் எதிர்கொண்டிருந்தார்.

நவீன வரலாற்றில் மூர்க்கத்தனம் கொண்டதொரு அமைப்பாக மாறியிருந்த, நாட்டினது வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் தனியாகக் கட்டுப்பாட்டு அலகுகளைக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை எதிர்த்து 1976ஆம் ஆண்டு முதல் சிங்களப் பெரும்பான்மையினர் மிக மோசமானதொரு போரைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர்.

2007ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷ அரசானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தியிருந்தது. இந்தப் போரின் போது வினைத்திறன்கொண்ட வழிமுறைகளை அது கைக்கொண்ட அதேநேரம் நேர்மையற்ற வழிமுறைகளையும் பயன்படுத்தியிருந்தது.

விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்கும் வகையில் முழு அளவிலான படை நடவடிக்கையினை 2007ஆம் ஆண்டு இலங்கை அரசு ஆரம்பித்தது. இந்தப் போரின்போது கட்டுப்பாட்டுடன் நடக்கத் தவறிய அரச படையினர், பொதுமக்களை இலக்குவைத்தும் மோசமான தாக்குதல்களை நடத்தினர். உதாரணமாக, வாகரைப் பகுதியில் செறிந்திருந்த மக்கள் மீதும் வாகரை மருத்துவமனை மீதும் அரச படையினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

படையினரின் முழுமுதல் இலக்காக பொதுமக்கள் மாறுவது வழமையானதொரு சம்பவமாக மாறியது. 2007ஆம் ஆண்டு முதல் போரின் இறுதி நாள் வரைக்கும் அறுபதுக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

ஜனவரி 2009ஆம் ஆண்டு முகமூடி அணிந்து வந்த ஆயுததாரிகள் 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்தவினைப் படுகொலை செய்தனர். அரசின் செயற்பாடுகள் தொடர்பாகக் குறை கண்டு எழுதும் பத்திரிகையிது.

காத்திரமான எறிகணைச் சூட்டாதரவுடன் அரச படையினரின் இடைவிடாது தொடர்ந்த படை நடவடிக்கையின் விளைவாக பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்த புலிகள் வன்னியின் சிறிய பிராந்தியத்தினுள் முடக்கப்பட்டனர்.

ஈற்றில் முல்லைத்தீவுக் கரையோரத்தில் பாதுகாப்பு வலயமென அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியினுள் லட்சக்கணக்கான பொதுமக்கள் முடங்கியபோது, இலங்கை அரசினால் நடத்தப்பட்ட 26 ஆண்டுகாலப் போர் முடிவுக்கு வந்தது.

விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதில் அதிபர் ராஜபக்ஷ உறுதியுடன் இருந்தபோதும் இறுதிப்போர் எந்தளவிற்கு வன்முறைகள் நிறைந்ததாக இருந்தது என்பது இன்னமும் சரியாகத் தெரியவில்லை எனக் கூறுகிறார் அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழுவினைச் சேர்ந்த அலன் கீனன்.

''இதுபோல மக்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசத்தினை இலக்குவைத்து தனது சூட்டுவலுவினைக் கொடுமையாகப் பயன்படுத்துவதற்கு இலங்கை அரசு அதிக விருப்பத்துடன்தான் இருந்தது என்பதை நம்புவதற்கு அப்போது எவரும் தயாராக இருக்கவில்லை'' என்கிறார் கீனன்.

இருப்பினும் அண்மையில் வெளிவந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவினது அறிக்கையின் அடிப்படையில் அரசு மேற்குறித்தவாறு கொடூரத்தனத்துடன்தான் நடத்திருக்கிறது என்பது வெளிப்படை.

மே 19ஆம் நாளன்று விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டது. ஐ.நா. செயலாளர்

நாயகம் பான் கீ - மூனினால் நியமிக்கப்பட்ட நிபுண
குழு, அரசு பெற்ற இந்த வெற்றிக்காகக் கொடுக்க
பட்ட விலைதான் என்ன என்பதை வரிசைப்படுத்தி
ருக்கிறது.

''செப்ரெம்பர் 2008 தொடக்கம் 19 மே 200
வரையிலான காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தி
னர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன், வகை
தொகையற்ற முறையில் எறிகணைத் தாக்குதல்களை
நடத்தியவாறு தனது படை நடவடிக்கையினை முன்
னெடுத்தது. இதன்போது பெருந்தொகையான பொது
மக்கள் கொல்லப்பட்டனர்'' என நிபுணர் குழுவின்
அறிக்கை கூறுகிறது.

''தானே அமைத்துக்கொண்ட மூன்று பாதுகாப்பு வல
யப் பகுதிகளுக்குள்ளும் பொதுமக்களைச் செல்லுமாறு
தூண்டிய இலங்கை அரசு அந்தப் பகுதிகளை இலக்கு
வைத்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டி
ருக்கிறது.'' என்றும் அறிக்கை கூறுகிறது.

ஐ.நாவினது செயற்பாட்டு மையம், செஞ்சிலுவைச்
சர்வதேசக் குழுவினால் உணவுப்பொருள்கள் பகிர்ந்த
ளிக்கப்பட்ட மையங்கள் என்பனவும் எறிகணைத்
தாக்குதலுக்கு இலக்காகின. தவிர மருத்துவமனைகள்
மீது மோட்டார் குண்டுத் தாக்குதல்களும் ஆட்லறி எறி
கணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன என்ப
தெல்லாம் இப்போது சந்தேகத்துக்கு இடமின்றி ஆவண
மாக்கப்பட்டுள்ளது.

ஒரு போராட்டத்தின் கொடூரம் நிறைந்த முடிவிது.
அனைத்துலக சட்டங்களை நினைவிற் கொண்டோ
அல்லது வெளிப்படைத் தன்மையுடனோ இலங்கையின்
தலைவர்கள் இந்தப் போரை முன்னெடுக்கவில்லை.

களமுனைகளிலிருந்து தகவல்கள் வெளியே வருவ
தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை 2006ஆம்
ஆண்டு முதலே இலங்கை அரசு முன்னெடுத்தது.
அத்துடன் 2006ஆம் ஆண்டு முதலே விடுதலைப் புலி
களின் முன்னாள் உறுப்பினர்களையும் தன்னகத்தே
கொண்ட அதிநவீன படைத்தளபாடங்களுடனான
இலங்கையின் ஆழ ஊடுருவும் அணி செயற்பட்டு
வந்திருக்கிறது.

''இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பாகக்
குற்றங்காணுபவர்களையும் விடுதலைப் புலிகளுடன்
தொடர்பினைக் கொண்டிருந்ததாக நம்பப்பட்டவர்
களையும் கடத்துவதற்கு இலக்கத் தகடுகள் பொருத்
தப்படாத வெள்ளை வான்கள் பயன்படுத்தப்பட்டிருக்
கின்றன. மக்கள் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்
துவதே இந்தச் செயற்பாடுகளின் பிரதான நோக்கம்''
என நிபுணர் குழு தனதறிக்கையில் கூறுகிறது.

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலா
கத் தொடரும் இனப்போரை முடிவுக்குக் கொண்டு
வரும் வகையில் அனைத்துலக சட்ட நியமங்களை
ஒருபுறம் வைத்துவிட்டுச் செயற்படுவதென இலங்கை
முடிவெடுத்திருக்கிறது.

அத்துடன் இதற்குத் தடையாக இருக்கும் பத்திரிகை
யாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை இலங்கை
அரசு வெளியேற்றிய அதேநேரம் அவர்களது வாயையும்
அடைத்தது எனலாம். போரின் இறுதிநாள்களில் 7,000
தொடக்கம் 40,000 வரையிலான பொதுமக்கள் கொல்
லப்பட்டிருக்கலாம் என நிபுணர் குழுவின் அறிக்கை
கூறுகிறது.

வன்னிப் பகுதியில் தங்கியிருந்த தொண்டு நிறுவ
னப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அனைத்
துலக அவதானிப்பாளர்களை இலங்கை அரசு செப்ரெம்
பர் 2008 இல் வெளியேற்றியிருந்தது.

புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப்
பயன்படுத்தியமை மற்றும் கட்டாய ஆள்திரட்டலில்
அவர்கள் ஈடுபட்டமை தொடர்பான விவரங்களையும்
இந்த அறிக்கை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்றது எதுவோ அதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொறுப்புச்சொல்லும் செயன்முறையினை ஆரம்பிப்ப ற்கானதொரு ஆரம்பமே இந்த அறிக்கை எனலாம்.

ஐ.நா. அமைத்த நிபுணர் குழுவானது ஒருபோதும் ஒரு விசாரணைக் கட்டமைப்பாகாது. அந்தக் குழுவின் றுப்பினர்கள் இலங்கையினது போர் இடம்பெற்ற குதிகளுக்குச் செல்வதற்கோ அல்லது தடுப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கைப் டைத்துறை அதிகாரிகளை நேர்காண்பதற்கோ அரசி ால் அனுமதி வழங்கப்படவில்லை.

தவிர, இந்த நிபுணர்கள் குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணை மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றே. இலங்கையில் டம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை வ்வாறு விசாரணை செய்யலாம் என ஐ.நா. செயலாளர் ாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதுதான் நிபுணர்கள் ழுவிற்கு வழங்கப்பட்ட பணி.

குழு தனது அறிக்கையினை பான் கீ - மூனிடம் கைய ித்திருக்கும் நிலையில், முறையான விசாரணை ஆணைக் ழு ஒன்றினை அமைக்குமாறு பாதுகாப்புச் சபையிடம் செயலாளர் நாயகம் கோரிக்கை விடுக்கமுடியும்.

ஆனால் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நருங்கிய அரசியல் மற்றும் பொருளாதார உறவுநிலை லவுகின்றது. போரின் போது தனது பொதுமக்களை அரசு வ்வாறு நடத்தியது என்பதில் அனைத்துலகம் விசார ணைகளை நடத்தும் தேவை எதுவுமில்லை என்றே ரஷ்யா ும் சீனாவும் கருதுகின்றன. இந்த நிலையில் இலங் கைக்கு எதிரான விசாரணைகளுக்கு ரஷ்யாவும் சீனாவும் ஆதர்வு வழங்காததொரு நிலைமையே காணப்படுகிறது.

2009ஆம் ஆண்டு காஸா மீதான தாக்குதலின் பின்னர் யாரிக்கப்பட்டதைப் போன்று இலங்கை தொடர்பான ஓர் அறிக்கையினை ஐ.நாவின் மனித உரிமைச் சபை தயாரிக் லாம். ஆனால் இதற்கான வாய்ப்பும் அரிதாகவே காணப் டுகிறது.

இலங்கையில் மோதல்கள் முடிவுக்குவந்த ஓரிரு நாள் ளின் பின்னர், போர்க் குற்றங்கள் தொடர்பாக எழுந்த ற்றச்சாட்டுக்களை மறுத்த ஐ.நா. மனித உரிமைச் சபை, விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதற்கு இலங்கை மற்கொண்ட முயற்சியினை வரவேற்றுக் கருத்துரைத்தி ந்தது.

"அணிசேரா அமைப்பில் இலங்கை நீண்டகால உறுப் ினராக இருந்து வருகிறது. அத்துடன் அராபிய மற்றும் இஸ்லாமிய நாடுகளின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் து ஆதாரவாகச் செயலாற்றி வருகிறது. இந்த நிலையில் ந்த நாடுகள் இலங்கையினைப் பாதுகாக்கும் வகையி லயே செயற்படும்" என ஜெனிவாவினைத் தளமாகக் காண்ட ஐநா. கண்காணிப்பு (UN Watch) என்ற அமைப் ின் பணிப்பாளர் கிலெல் நுயர் Hillel Neuer கூறுகிறார்.

மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் நீதி மற்றும் காள்கைப் பணிப்பாளர் ஜேம்ஸ் றோசினது James Ross கவலின்படி, 2009ஆம் ஆண்டு கினியாவில் எதடிணனுச் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்ட சம்ப வத்தினைத் தாடர்ந்து ஐ.நா. செயலாளர் நாயகம் மேற் கொண்டது பான்று தனது சொந்த விசாரணை முன்னெடுப்புக்களை வர் மேற்கொள்ள முடியும்.

இதுபோல தன்னுடைய விசாரணையினை முன்னெ ப்பதற்கு வழியிருந்தபோதும் அதனை மேற்கொள்வதற் ப் பன் கீ - மூன் விரும்பவில்லைப் போன்றே தெரிகி து. விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு ர்க்கத்துடன் முன்னெடுத்த போரின் போதும் போர் டிவுக்கு வந்த பின்னரும் ஐ.நா. கடைப்பிடித்த அரசியல் ற்றும் தார்மீக நிலைப்பாடு எதுவோ அதனையொத்த ாறு முட்டிமோதாததொரு அணுகுமுறையினையே .நா. கைக்கொள்ளும்.

இலங்கையின் இறுதிப்போர் அசிங்கமானதொரு டிவினை எட்டிய அதேநேரம் இந்தப் போரின் இறுதிக் ட்டம் கொடூரம் நிறைந்தாக இருந்தமைக்கு ஐ.நா. கைக்கொண்ட முட்டிமோதாத அணுகு முறையும் ஒரு காரணம் எனலாம்.

செப்ரெம்பர் 2008இல், வன்னியில் செயற்பட்ட ஐ.நா. அமைப்புகள் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் அங்கிருந்து வெளியேறிவிடவேண்டும் என்ற இலங்கை அரசின் அறிவிப்பினை ஐ.நா. எந்தவிதமான எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொண்டது. விதிவிலக்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மாத்திரம் வன்னியில் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

மோதல்களின் நடுவே சிக்கி மனித நேயப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டு விட்டுவார்கள் என்ற காரணத்தினாலேயே இவர்களைத் தாங்கள் வெளியேற்றுவதாக அரசு வாதிடுகிறது. இருப்பினும், அரசின் இந்த நடவடிக்கைதான் "ஏற்றுக்கொள்ளப் பட்ட யுத்த விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணாக இலங்கை அரசு தயவு தாட்சண் யமின்றி மூர்க்கத்துடன் போரை முன்னெ டுப்பதற்கு வழிசெய்தது" என்கிறார் கீனன்.

சரி தனது பணியாளர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் வாய்ப்பு இருக்கிற தெனில் அந்தக் கரிசனையினை அரசுதான் வெளியிடவேண்டுமே தவிர வேறு எவரு மல்ல. "சரி, ஐ.நா உள்ளிட்ட அனைத்து மனிதாபிமான அமைப்புக்களும் வன்னி யிலிருந்து வெளியேறிவிடவேண்டும் என இலங்கை அறிவுறுத்தியபோது, அந்த முடி வினை ஐ.நா. வெளிப்படையாக எதிர்த்தி ருக்கலாமே" என வாதிடுகிறார் கீனன்.

"நீங்கள் எங்களது பாதுகாப்பிற்கு மதிப் பளித்தால் நாம் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம். கண்களை இறுக மூடி விட்டு மக்களை நிர்க்கதியாக விட்டுவிட்டு எவ்வாறு எங்களால் வெளியேற முடியும்" என்று ஐக்கிய நாடுகள் சபை வாதிட்டிருக்க முடியும்.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபை இவற் றில் எதனையும் செய்யவில்லை. மூர்க்கமா கத் தொடர்ந்துகொண்டிருந்த போருக்கு அமைதிவழித் தீர்வினைப் பேச்சுக்கள் ஊடாக ஏற்படுத்துவதற்கு உதவுமாறுகோரி பான் கீ - மூன் தனது தலைமை அலுவலர் விஜய் நம்பியாரைக் கொழும்புக்கு அனுப்பி யிருந்தார்.

நம்பியார் கொழும்பில் இருந்த காலப் பகுதியில் இலங்கை அரசுக்கும் விடுத லைப் புலிகளுக்கும் இடையிலான தொடர் பாடல் இணைப்பு ஒன்றை ஏற்படுத்தியி ருந்தார். நம்பியார் தொடர்பினை ஏற்படுத் திய விடுதலைப் புலிகளின் மூத்த தலை வர்கள் பின்னர் வெள்ளைக்கொடியுடன் சரணடைவதற்காக வந்தபோது இராணுவத் தின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளுக்கு முன்னால் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டி ருந்தனர்.

'வெள்ளைக்கொடிப் படுகொலை' என அறியப்பட்ட சம்பவத்தில் நம்பியாரின் பங்கு என்ன என்பதை முழுமையாக விசா ரிக்கவேண்டும் என ஐக்கிய அமெரிக்கா வினைத் தளமாகக் கொண்ட இனக் கொலைக்கு எதிரான தமிழர் அமைப்பினது செய[illegible] வலி[illegible]றார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் ஆகத் தகுதிகள்



என்னுடைய நண்பர் ஒருத்தர்... ஆழ்ந்த சிந்தனையிலே இருந்தார். "என்ன யோசனை செய்கிறீர்கள் என்று கேட்டேன்." "தலைவர் ஆக வேண்டும் என்று பார்க்கிறேன்... அதுதான் அதற்கான வழியை யோசித்துக் கொண்டு இருக்கிறேன்." என்றார்.

"நான் கூட அதுபோல யோசித் துப் பார்த்தேன்... அதன் பின்னர் அந்த யோசனையைக் கைவிட்டு விட்டேன்!" என்றேன்.

"ஏன்?" என்று கேட்டார் அவர்.

அதற்கான தகுதிகள் எனக்கு இல்லை என்பது என்னைவிட மற்றையவர்களுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது... அதனால் பேசாமல் இருந்து விட்டேன்" என்றேன்.

"தலைவர் ஆவதற்கு தகுதிகள் வேறு உண்டா?" என்று அவர் யதார்த்தமாத்தான் கேட்டார். நான் உடனே என்னிடம் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்து அவரிடம் கொடுத்தேன் படித்துப் பாருங்கள் என்று!

தலைவர் ஆவதற்கு என்ன வழி இருக்கிறது என்பதைப் பற்றி அந்தப் புத்தகத்திலே போட்டிருக்கிறது. முதலாவது வழி என்ன தெரியுமா?

நான்கு பேருக்கு முன் அல்லது கூட்டத்திற்கு முன் நீங்கள் போய் பேசும் போது எவற்றை ஆரம்பிக்கவேண்டும் என்றால்... உண்மையான புகழ்ச்சி நேர்மையான பாராட்டு ஆகியவற்றையே. எடுத்ததுமே அது சரியில்லை இது சரியில்லை என்று பேசிக் கொண்டிருக்கக் கூடாது!

மக்களைப் பார்த்து... நீங்கள் தான் தப்புச் செய்து விட்டீர்கள் என்று நேரடியாகச் சொல்லக் கூடாது... மக்கள் மீது தவறு இருந் தாலும் அதை மறைமுகமாக ஏதாவது கதை சொல்லி அதிலிருந்து அவர்கள் புரிந்து கொள்ளும் அளவிற்குச் செயற்படவேண்டும்!

அடுத்தவர்கள் செய்யும் தப்பு என்னவென்று அலசி ஆராய் வதற்கு முன் நீங்கள் செய்யும் தப்பு என்ன என்பதைப்பற்றியே பேச வேண்டும். எதுக்கும் நேடியாக உத்தரவு போட்டுக்கொண்டு இருக் காது இந்தச் செயலை நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி இருக்கும்? என்று கேள்வி மாதிரிக் கேட்கவேண்டும். இப்படிக் கேட்கும் போது அது உத்தரவாக இருக்காது. நாம் பேசும் போது அடுத்தவர்கள் மரியாதையைக் காப்பாற்றும் அளவிற்குப் பேசவேண்டும். உங்கள் பேச்சு இன்னொருவரை அவமானப் படுத்துவதாக இருக்கக்கூடாது.

ஏன்தான் இவர்களிடம்போய் மாட்டிக்கொண்டேன் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. ஒவ்வொரு சின்ன வளர்ச்சி யையும் பாராட்ட வேண்டும்... வெற்றி சாதாரணமாக இருந்தா லும் பாராட்டாமல் இருந்து விடக் கூடாது. பாராட்டும்போது தாராளமாக இருக்கலாம். ஆனால் குறை சொல்லும்போது கவனமாக இருக்க வேண்டும். வாய்க்கு வந்தபடி பேசி விட்டால் அப்புறம் சரியாக மாட்டிவிட்டு முழிக்கவேண்டியிருக்கும். நீங் கள் பேசுவது இன்னொருவருக்கு ஒரு கௌரவத்தையும் மரி யாதையையும் உருவாக்குவது போல் இருக்கவேண்டும். நீங் கள் பேசும் போது மற்றவர்களிடம் இருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையும் கெடுப்பது போல் அமையக்கூடாது. உங்கள் பேச் சைக் கேட்கிறவர்களுக்கு ஒரு ஊக்கம், உற்சாகம் வரவேண்டும். தவறாக ஏதாவது இருந் தாலும் அதை சுலபமாகத் திருத்திவிடலாம் என்பதுபோல உங்கள் பேச்சு அமைய வேண்டும்.

அடுத்தவர்களை சந்தோஷப்படுத்துங்கள். உங்கள் யோசனை யைக்கேட்டு நடப்பதனால் அந்த சந்தோஷம் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இந்தத் தகுதி எல்லாம் உங்களிடமிருந்தால் நீங்கள் ஒரு சிறந்த தலைவராகலாம் என்று அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் தலைவர் ஆவதற்கு வேறுசில தகுதிகள் எல்லாம் தேவைப்படுகின்றன. ஒரு பிள்ளை தன்னுடைய அப்பா விடம் போய் "அப்பா... உங்களை மாதிரி நானும் அரசியலில் சேர்ந்து தலைவர் ஆக வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். இன்றில் இருந்து எனக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுங்கள்" என்றான். அவரும் 'சரி' என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய ஏணியை எடுத்துக் கொண்டுவந்தார் அதனை ஒரு சுவரில் சாத்தி னார். பின்னர் "இந்த ஏணியில் ஏறி உயரப்போய் அந்த பரண் மேலே இருக்கும் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வா?" என்று மகனைப் பார்த்துக் கூறினார்.

"அப்பா... ஏணி சரியான உயரமாக இருக்கிறது நீங்கள் கவன மாக இதனைப் பிடியுங்கள் நான் ஏறிப் போகிறேன்." என்றான் மகன். "பயப்படாதே... நான் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் அப்பா.

மகனும் ஏணியில் ஏறி உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்துவிட்டார். ஏணி கொஞ்சம் சரிந்ததால் மகன் பொத் என்று கீழே விழுந்தான். இடுப்பைப் பிடித்துக்கொண்டு எழுந்து நின்று "என்ன அப்பா இது... இப்படி என்னை ஏத்திவிட்டுக் கையை விட்டு விட்டீர்கள்!" என்று கத்தினான். அப்போது அப்பா நிதானமாகச் சொன்னார் "அவசரப்படாதே மகனே' அரசியலில் இதுதான் முதல் பாடம்! சொந்தத் தந்தையாக இருந்தாலும் அவ ரையும் நம்பாதே!" என்று உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

**கோ. சுவாமிநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தினப் போட்டி கள்

யாழ்ப்பாணம்,மே2 வேலணைக் கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டிகளின் கலைத்திறன் போட்டிகள் யாவும் எதிர்வரும் 4ஆம் திகதி காலை 9 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 5ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட போட்டிகளும் 4ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளன என்பதனை அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள் கவனத்திற்கொள்ளுமாறு வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2219 திகதி 30 - 04 - 2011

ஆங்கில எழுத்திற்கும் M

வெற்றி எண்கள் 11 37 38 64

போனஸ் இல: 13

ஜக்பொட் பரிசு ரூ. 22,148,500/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 192677 | 20/- | 3,853,540/- |
| 2 இல | 13777 | 100/- | 1,377,700/- |
| 3 இல | 284 | 1,000/- | 284,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7661 | 40/- | 306,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 531 | 1,000/- | 531,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 22,148,500/- | 22,148,500/- |
| 1 இல + போனஸ் இல | 9159 | 100/- | 915,900/- |
| 2 இல + போனஸ் இல | 424 | 500/- | 212,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 393 | 200/- | 78,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 31,442,180/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 224957 | | 32,042,180/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 303143855-3-29 |
| அம்பாறை | 303128813-5-15 |
| திருகோணமலை | 303126344-6-28 |
| மொனராகலை | 303122795-7-05 |
| நுவரேலியா | 303125853-2-11 |
| பொலன்னறுவை | 303127428-4-22 |
| மாத்தறை | 303122378-5-06 |
| கண்டி | 303125861-5-42 |
| கம்பஹா | 303128261-9-12 |
| கொழும்பு | 303129643-4-49 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ.10,000,000/-

ஜதா நிற டிக்கட்டுகள் 2011 மே 04 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7



## ஹீரோ, கென்டன் காட்சியறை




சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்



ஹீரோ. கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672



## கடை வாடகைக்கு

ஐயனார் கோயிலடியில் ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்கு அருகில் உள்ள புதிய கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
021 222 9296,0779742504

## வேலையாள் தேவை

உலோகவார்ப்பு வேலைக்கு அனுபவம் உள்ள ஆண் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். இல.143, K.K.Sவீதி
கோண்டாவில் மேற்கு (தாவடி)
கோண்டாவில். தொடர்பு:0214920048

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட கச்சேரி, கல்வித் திணைக்களம், நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு அருகில் அமைந்த விசாலமான ஹோல் மற்றும் 4 வசதியான அறைகள், 3 இணைந்த குளியல் அறைகளையும் விசாலமான வாகனத் தரிப்பிடத்தையும் நன்னீர் வசதியையும் கொண்ட 4 பரப்புக் காணியில் அமைந்த வசதியான வீடு அரச, தனியார் நிறு வன அலுவலக/களஞ்சிய/விடுதி பாவனைக்காக வாட கைக்கு விடப்படும். தொடர்பு:0774955716.



## உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 605
திகதி 2011/04/30

சுப்பர் இலக்கம் 22

வெல்லப்பட்ட இலக்கங்கள் 31 45 54 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 13,280,922.40 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனை 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 237 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனை 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 464 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 11,805 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனை 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 6,750 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 170,132 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 27,232 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,885,780.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிகட்டுதிட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த புதன்கிழமை ரூ. 13,496,209.60

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk



உ
சிவமயம்







காரைநகர் திண்ணபுரம்

### ஈழத்துச் சிதம்பரம் திருவருள் மிகு ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத
### ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் தேவஸ்தானம்
### காரைநகர் சிவன் கோவில்

## மஹாயாக பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

சிவநேயச் செல்வர்களே!

சிவபூமியாம் காரைநகர் திண்ணபுரத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானினதும் பூரணா, புஷ்கலா சமேத ஸ்ரீ ஐயனார் பெருமானினதும், ஸ்ரீ சிவகாமி அம்மை சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானினதும் திருவருட் கிருபையால் தற்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் பல லட்சம் பெறுமதியான திருப்பணிகள் நிறைவெய்தி கரவருஷம் வைகாசி மாதம் 23 ஆம் நாள் (06.06.2011) திங்கட்கிழமை உதயம் 6.32 முதல் 7.16 வரை வரும் சுபமுகூர்த்தத்தில் திவ்விய மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள்பாலித்துள்ளது.

அடியார்கள் தங்களாலியன்ற சிவபுண்ணியமான பண உதவி, பொருள் உதவி புரிந்து பெருஞ்சாந்தி விழாவான மஹாகும்பாபிஷேகம் பொலிவு கண்டு சைவமும், தானமும், தர்மமும் வேத திருமுறை புராண படனமும் சிறக்க உதவிபுரிவீர்களாக.

அடியார்கள் தங்கள் பண உதவியை பின்வருமாறு அளித்து உரிய பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும் .

* ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்களிடம் தேவஸ்தானத்தில் நேரடியாக அளித்தல் .
* ஈழத்து சிதம்பர தேவஸ்தானத்தில் அமைந்துள்ள காரைநகர் சிவன்கோவில் அடியார்கள் சபையின் காரியாலயத்தில் அளித்தல்.
* KARAINAGAR SIVAN KOVIL DEVOTEES SOCIETY, LIMITED இன் இலங்கை வங்கி பம்பலப்பிட்டிக் கிளையிலுள்ள .CURRENT A/C No: 717581 க்கு பணமாகவோ காசோலை மூலமாகவோ செலுத்தி வங்கிப் பற்றுச்சீட்டை TREASURER, KARAINAGAR SIVAN KOVIL DEVOITEES SOCIETY LTD, 6B DAISY VILLA AVENUE, COLOMBO- 4 என்ற விலாசத்துக்கு அனுப்பி உரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

இலங்கை வங்கியின் SWIFT CODE: BCEYLKLX.

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.
30.04.2011

ஆ.அம்பலவி முருகன்
மு.சுந்தரலிங்கம்,
ஆதீன கர்த்தாக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்



ஆலயங்கள் உலகம் தோன்றிய காலம் முதலே மக்களிடம் தர்மத்தை எடுத்துக் கூறும் பணியைச் செய்வதுடன் மக்களை நல்வழிப்படுத்துவதிலும் பங்களிப்பான சேவையை வழங்கி வருகின்றன. இவ்வாறான சேவையை வழங்குவதற்கு ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளே உதவியாக இருக்கின்றன என்பது எமது முன்னோர்களால் கூறப்படும் கருத்தாகும். இதனால்தான் மூதாட்டி ஒளவையும் ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று கூறியுள்ளார்.

இவ்வாறு அமைக்கப்பட்ட பிரசித்தி பெற்ற ஆலயங்களில் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும். யாழ். நகரின் மையப் பகுதியில் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள இந்த ஆலயம் 1790 ஆம் ஆண்டு கோபாலச் செட்டியாரின் மகனான வைத்திலிங்கச் செட்டியாரால் அமைக்கப்பட்டது.

மக்களது வாழ்க்கையில் அடிப்படையிலேயே சமயம் இரண்டறக் கலந்துள்ளது. ''சைவத்தின் மேற் சமயம் வேறில்லை'' என்பது ஆன்றோர் வாக்கு. சைவத்தின் மரபுகளைப் பேணிக்காக்கும் பெரியோர்கள் புராதன ஆலயங்களைப் புனரமைப்புச் செய்தார்கள். புதிதாக அமைத்தும் உள்ளார்கள்.

அந்தவகையில் யாழ். நகரின் மையப் பகுதியில் புராதன சிவாலயமாக விளங்கும் வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் சுவாமி ஆலயம் (சிவன் கோயில்) எவ்வாறு உருவானது என்பது பற்றி எடுத்து நோக்கலாம்.

இந்த ஆலயத்தைக் கட்டியவர் கோபாலச் செட்டியார் ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்தில் தனது மனைவியுடன் சோழ நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இவர், ஒல்லாந்த அரசரின் மொழி பெயர்ப்பாளராக இருந்த கொச்சிக் கணேசையர் என்னும் பிராமணரிடம் பணிபுரிந்து வந்தார்.

அந்த வேளையில் கோபாலச்செட்டியார் வேப்ப மரமொன்றின் கீழ் விநாயகர் சிலையை வைத்துப் பூசித்து வந்தார். ஒரு நாள் கொச்சிக் கணேசையர் காரணமில்லாமல் கோபாலச் செட்டியாரைக் கண்டித்த போது கோபாலச் செட்டியார் உத்தியோகத்திலிருந்து விலகி பலசரக்கு வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் செய்யும் காலத்தில் ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கும் பலசரக்குப் பொருள்களைக் கொடுக்கும் வழக்கம் உடையவராயிருந்தார்.

இவருடைய நேர்மை, ஒழுக்கம், விசுவாசம் முதலியவற்றால் தேசாதிபதியின் மனைவியார் கோபாலச்செட்டியாரிடம் மிகவும் அபிமானம் உள்ளவராய் இருந்தார்.

இந்த வேளையில் இந்தியாவிலிருந்து ஈழத்துக்கு வந்த கூழங்கைத் தம்பிரான், கோபாலச் செட்டியாரிடம் நட்புக் கொண்டு அவருடன் வசித்து வந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாஸ்திரங்களிலும் மிக்க பாண்டித்தியம் உடையவராக விளங்கினார். சிறந்த பக்தர். இவர் அங்கு இருக்கும்போது தான் கோபாலச் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தான். புதல்வனைப் பார்த்த தம்பிரான் ஆசிர்வதித்து ''இவன் பெரும் கருமங்கள் செய்யப் பிறந்துள்ளான். இவனுக்கு வைத்தியலிங்கம் என்று பெயர் வையுங்கள்'' என்றார். அவ்வாறே பெயரும் இட்டனர் பெற்றோர்.

வைத்திலிங்கம் வளர்ந்து 12 வயதை கடந்துவிட்ட போது ஒருநாள் தந்தை சிறுவனை அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்றார். அந்தச் சமயம் தேசாதிபதியின் மனைவி கடைக்கு வந்தார். ''செட்டியார் எங்கே?'' என்று சிறுவனிடம் விசாரித்தார்.

வைத்திலிங்கமான சிறுவன் மாதுளங்கனி ஒன்றினை அந்த அம்மையாரிடம் கொடுத்தான். அதை அந்த அம்மையாரும் உளம் கனிந்து ஏற்றுக் கொண்டார். வாங்கிய மாதுளங்கனியை மிக விருப்பத்துடன் உட்கொண்டும் விட்டார். அப்பொழுது செட்டியார் அங்கு வந்தார். மாதுளங்கனி கொடுத்த சிறுவன் செட்டியாரின் மகன் என்று தேசாதிபதியின் மனைவிக்கு அப்பொழுது தான் தெரிந்தது.

வைத்திலிங்கத்தை தன்னுடன் அனுப்புமாறு அம்மையார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செட்டியார் தனது மகனை தேசாதிபதியின் மனைவியுடன் அனுப்பி வைத்தார்.

வைத்திலிங்கம் அரண்மனைக்குச் சென்று ஒல்லாந்த மொழியைக் கற்று அரண்மனை வாரிசாகவே வளர்ந்தார்.

வைத்திலிங்கத்திற்கு 18 வயது ஆன போது தேசாதிபதி முத்துக் குளிப்பை குத்தகைக்கு விடப்போவதைக் கேள்விப்பட்டார். உடனே தனது வளர்ப்புத் தாயான அம்மையாரிடம் தான் அந்தக் குத்தகையைப் பெறப் போவதாக விருப்பம் தெரிவித்தார்.

அம்மையாரும் அதற்கு விருப்பம் தெரிவித்துக் கடிதம் ஒன்றை எழுதிக் கச்சேரியிலுள்ள தேசாபதியிடம் கொடுக்கும் படி கொடுத்தனுப்பினார்.

''தேசாதிபதியும் அதற்குச் சம்மதித்து குத்தகையை வைத்திலிங்கத்தின் பெயருக்கும் பிணையாக எனது பெயரையும் எழுதுங்கள்'' என்றார். இதன் விளைவாக முத்துக் குத்தகையை ஏற்று முத்து வியாபாரம் செய்யும் காலத்தில் கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்றார். வைத்திலிங்கம் முத்து வியாபாரம் மட்டுமல்லாமல் யானைவிற்கும் வியாபாரமும் செய்து வந்தார். இதனால் பெரும் பொருள்களைச் சேர்த்து தனவந்தராக மாறினார்.

இதன்போது தனக்காக ஒரு மாளிகையை அமைக்க முடிவு செய்தார். அப்பொழுது கூழங்கைத் தம்பிரான், வைத்திலிங்கச்செட்டியாரிடம் ''உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த பரமபிதாவாகிய வைத்தியப் பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கும் ஆலயம் ஒன்றினை அமைக்க வேண்டும்'' என்று கூறினார். வைத்தி லிங்கச் செட்டியாரும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

சைவ ஆலயங்களை இடித்தும் சைவ சயத்தவரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்தைப் பரப்பி வந்த ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கச் செட்டியார் தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்றார்.

(தொடரும்)

சோபனா

# தில்லை நடராஜப் பெருமானின் ஆடல் காட்சியை விளக்கும் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார்

இலங்கை வரலாற்றின் ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லை நகர் விளங்கியது. அந்த நகருக்குத் தென் மேற்குப் புறத்தே அத்திமரங்கள் சூழ்ந்த ஓர் அழகிய கிராமம் காணப்பட்டது. யாழ். பட்டணத்தை அண்மித்து இருந்த இந்தக் கிராமத்தில் வேறெங்கும் இல்லாத அளவில் அத்திமரங்கள் அடர்ந்து காணப்பட்டன. அதனால் அத்தியடி என்னும் பெயர் பெறலாயிற்று.


இந்தப் பகுதியில் சிறுதொகை மக்களே வாழ்ந்து வந்த போதிலும் யாழ். வர்த்தகச் செயற்பாடுகளில் அனேகர் தம்மை இணைத்துக் கொண்டிருந்தனர். தமக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதன் பொருட்டு முன்னைய காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து பலபேர் தமிழ் நாட்டிற்குச் சென்று இறக்குமதி ஏற்றுமதி வாணிபத்தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். கட்டுமரங்கள், படகுகள், பாய்மரக்கலங்களில் கடல் மார்க்க வர்த்தகத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

தமது பயணங்களுக்கு வழிகாட்டியாகவும், பாதுகாப்பாகவும் இருக்க, தமது இஷ்ட தெய்வங்களின் அருளை வேண்டி இறைநம்பிக்கையுடன் வியாபாரம் செய்து வந்த வணிகர்களில் அத்தியடிக் கிராமத்தைச் சேர்ந்த வீரகத்தி என்பவரும் ஒருவராவார். விநாயகர் அடியாரான இவர் தமிழ் நாட்டிற்கு கடல்மார்க்கமாகச் செல்லும் போதெல்லாம் சிதம்பரத்துக்குச் சென்று நடராஜப் பெருமானைத் தரிசிக்க மறப்பதேயில்லை.

அத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டு நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்து வந்த இவர் தில்லைக் கூத்தன் சிவபெருமானின் ஆடல் காட்சியைக் கண்டு மெய்மறந்து வழிபடும் போதெல்லாம் தனது குல தெய்வமான விநாயகப் பெருமானின் ஆடல் அலங்காரக் காட்சியை நினைத்து மகிழ்வார். இதன் போது தமது கிராமத்திலும் ஆடல் தோற்றத்தில் அமைந்த விநாயகர் ஆலயத்தை அமைத்து வழிபடும் எண்ணம் அவர் மனதில் உதித்தது.

சிதம்பரத்தில் உள்ள சிற்பாச்சாரியர்களிடம் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தி நடன மாடும் கோலத்தில் விநாயகரை சிலையாக வடித்துத் தருமாறு வேண்டினார். அவ்வூர் சிற்பிகள் வலது காலைத்தூக்கி ஆடியவாறு உள்ள சிதம்பர சிற்பக் கலையுடன் கூடிய இலகுவில் தூக்கிச் செல்லக் கூடியவாறான 16 அங்குல உயரமுடைய அழகிய நடன விநாயகர் விக்கிரகத்தைச் செதுக்கி வழங்கினார்கள்.

பொதுவாக இருக்கை நிலையிலேயே விநாயகரை வடித்து வணங்கி வருகையில் இந்த ஆடல் தோற்ற விக்கிரகம் மிகவும் அபூர்வமானதாக விளங்கியது. அந்த விக்கிரகத்தைப் பக்குவமாகத் தோளிலும் மடியிலும் தாங்கித் தமிழகத் தரையிலிருந்து கட்டுமரம் மூலம் யாழ். கொழும்புத்துறைக்குக் கொண்டு வந்தார். அங்கிருந்து சைவ அன்பர்கள் புடை சூழ மேள தாள ஒலிகளுடன் எடுத்துவரப்பட்ட இந்த விநாயகர் சிலையை ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு சுத்தப்படுத்தப்பட்ட அத்தித் தோப்புக் காணியில் சிறு கொட்டில் அமைத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வரலாயினர்.



வீரகத்தி என்னும் பெருமகனின் ஆவலினால் சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயில் சுற்றாடலில் உருவான பிள்ளையார் யாழ்ப்பாணம் அத்தியடி எனும் ஊரில் உறைந்தமையால் யாழ். ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் என்னும் பெயர் பெறலாயிற்று இந்த ஆலயம். இந்த விநாயகருக்கு அத்தி முகன் என்றொரு பெயரும் உண்டு. இங்கு ஊரின் பெயரும் இறைவனின் நாமமும் ஒருங்கே அமைந்திருப்பது சிறப்புக்குரிய அம்சமாகும்.

தமது கிராமத்தில் விக்கினங்கள் தீர்க்கும் விநாயர் கோயில் கொண்ட பேரருளை எண்ணி ஊர் மக்கள் ஆலயம் தொழுவதிலும், பணிகளிலும் மகிழ்வுடனும் ஆர்வத்துடனும் ஈடுபட்டு பெரும் சிறப்புக்களைப் பெறலாயினர். நாளடைவில் அத்தியடிப் பிள்ளையாரின் அருட்கடாட்சம் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியது.

''இறைவனைத் தேடு; சகலதும் உன்னைத் தேடும்'' என்பது போல வீரகத்தி அன்பரின் வாணிபத் தொழிலும் மேன்மேலும் சிறந்து விளங்கவே வரும் இலாபத்தின் ஒரு பகுதியை சிறு குடிலாக இருந்த கோயிலை கற்கோயிலாக கட்டுவதற்குப் பயன்படுத்தினார். அத்தியடியில் வாழ்ந்த சிறு தொகை மக்களும் அயல் ஊர்களான யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, ஆரியகுளம், நல்லூர், இராசாவின் தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த அடியார்களும் இணைந்து விநாயகருக்குக் கற்கோயில் அமைப்பதில் ஈடுபட்டனர். இவர்களின் முயற்சியில் கருவறை, தூபியுடன் கூடிய மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது.

எஸ்.யேசுதாஸ்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 05.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ முகுந்தன், பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,**
தொ.பே இல:- 021 222 6944.

(3601)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

APRIL, 2011 TO SEPT.2011

*தமிழ் மொழி மூலம்*

- Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
- Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
- Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.05.2011

## மீசாலை வீரசிங்கம் ம.வி. தரமுயர்வு

தென்மராட்சி, மே.2

ஆயிரம் பாடசாலைகள் தரம் உர்த்தும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் வகை 1சீயிலிருந்து வகை 1ஏபி தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுத் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பாடசாலை தரம் உயர்த்தப் பட்டுள்ளது. வித்தியாலயம் தரம் உயர்வுக்கு ஒத்துழைத்த தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தம் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உட்பட அனைவருக்கும் வித்தியாலயக் கல்விச் சமூகத்தினர் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதிபர் தெரிவித்தார். (த-207)

## "தீக்குளிப்பேன்" மிரட்டுகிறார் மாத்தறை தேரர்

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தனது ஆலோசனைக் குழுவின் அறிக்கையை வாபஸ் பெறாவிட்டால் தான் தீக்குளிக்கப் போவதாக பௌத்த தேரர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

மாத்தறை போதிருக்கிரா ராமயவின் விகாராதிபதி வண. எத்ததஸ்ஸி நேற்றுக் காலை நடத்திய ஆர்ப்பாட்டமொன்றையடுத்து இவ்வாறு எச்சரித்துள்ளார்.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
07.01.1961

மறைவு:
14.04.2010

**அமரர் சின்னராசா கொன்செண்றியம்மா [கிரிசா]**

ஆண்டு ஒன்று சென்றாலும் அழியவில்லை
உங்கள் அன்பு மொழிகள்
தரணியில் இன்று உம்மை இழந்து தவிக்கின்றோம்
உங்கள் நினைவுகளை இன்றும் எங்கள்
நெஞ்சங்களில் சுமந்து விழிநீர் சொரிகின்றோம்.

இல.17/5, கோவில் ஒழுங்கை,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.


*கணவன், பிள்ளைகள்,*
*வ.சின்னராசா (வயறிங் சின்னண்ணை)*

(48,22,24)

## எங்கள் விழி நீரால் கரைந்து விட்ட ஈராண்டுகளின் நீங்காத தடம்....!

ஒளியாய் 17.07.1972 ...இறைவாழ்வில்... ஒளியாய் 07.01.2005





இருளாய் 24.04.2009 திதி: 02.05.2011 இருளாய் 27.04.2009

**முருகேசு வசந்தன்** **வசந்தன் நிவேதிகன்**

(உரிமையாளர், நிருட்ரவல்ஸ், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

என்னையும் பிள்ளைகளையும்
என் பெற்றோர் அரவணைப்பில் விட்டு
உங்கள் செல்ல மகனுடன்
எங்கு சென்றீர்கள்...?...?
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் உதிரத்து உறவுகளின்
பிரிவால் துவண்ட போதெல்லாம்
எமக்கு அருகிருந்து ஆற்றுப்படுத்திய
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அயலவர்கள், உதவி புரிந்தவர்கள்
அனைவருக்கும் இதய பூர்வ
நன்றிகள்....!

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்,
வ.தமிழ்ச்செல்வி (தர்சினி),
வ.நிருபமா, வ.நிவேதிகா.

(49,20,21)

## முதல் மாதத்திற்கு வட்டி இல்லாத

NDB
நன்னய
அடகுச் சேவை

* 6 மாதங்களுக்கு மேற்பட்ட அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு, இரண்டாம் மாதத்திலிருந்தே வட்டி அறவிடப்படும்.



22 கரட்
ரூ. 34,150/-

24 கரட்
ரூ. 37,250/-

பவுண் ஒன்றுக்கு கூடிய தொகை தரும் வங்கி

இன்றே அருகிலுள்ள NDB வங்கிக்கு வாருங்கள்.
அழையுங்கள் 011 2 44 88 88

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.04.29

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2387

வெற்றி எழுத்து: O
வெற்றி எண்கள்: 4 9 8 7 3 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O | 4 | 9 | 8 | 7 | 3 | 7 | ரூபா. 11,111,874/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 9 | 8 | 7 | 3 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 9 | 8 | 7 | 3 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 8 | 7 | 3 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 129 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 3 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1227 |
| 5 பரிசுகள் | | | | | | 3 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 12174 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 120987 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 9 | 8 | 7 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 4 | 9 | 8 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 116 |
| 9 பரிசுகள் | | 4 | 9 | 8 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1233 |
| 10 பரிசுகள் | | 4 | 9 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12173 |
| 11 பரிசுகள் | O | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 48398 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 13,310,050.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 8 இல் குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

தருபவர் : வித்தியா



## மேடம்

உங்கள் ராசிக்கு பிதா, பாக்ய விரய ஸ்தானாதிபதியாகிய குருபகவான் மீனத்தில் இருந்து பெயர்ச்சியாகி மேடத்தில் அமர்வு பெற்றுள்ளார். ஜென்மராசியில் குருபகவான் அமர்வதால் எந்தச் செயலிலும் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியம். ராசியில் உள்ள குரு 5, 7, 9 பார்வையால் பூர்வ, புண்ணிய, புத்திர, களத்திர, நட்பு ஸ்தானங்களை பார்க்கிறார். குருவின் பார்வை பதிகிற இடங்களின் வழியாக தாராள நற்பலன் கிடைக்கும். அளவுடன் பேசவேண்டும். கடும் உழைப்பால் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதரர்களின் ஒத்துழைப்பு அதிகமாக இருக்காது. வீடு, வாகன வகையில் இப்போது இருப்பதை தக்க வைத்துக் கொண்டாலே போதும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவதால் பல நலமும் பெறுவீர்கள். பூர்வ புண்ணிய பலம் பரிபூரணமாகத் துணை நிற்கும். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதலை மனமுவந்து ஏற்று படிப்பு, ஒழுக்கத்தில் முன்னேற்றம் காண்பர். பூர்வீகசொத்து உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். நீங்கள் நன்மை செய்ய நினைத்தாலும் சிலர் இடைஞ்சல் செய்யும் வகையில் செயற்படுவர். பொறுமையும் விவேகமும் பின்பற்றுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். சிறு அளவில் வரும் உடல்நல பாதிப்புகளை தகுந்த சிகிச்சையின் மூலம் சரிசெய்வீர்கள். ஏற்கனவே உள்ள கடன் நெருக்குதல் தருமென்பதால், புதிய கடன்களை தேவையின்றிப் பெறக்கூடாது. கணவன் மனைவி பொறுமையுடன் செயற்பட்டு குடும்பச் சிரமங்களை ஒழுங்குபடுத்துவர். மகிழ்ச்சியும் நம்பிக்கையும் வளரும். நண்பர்கள் முக்கிய தருணங்களில் இயன்ற உதவி புரிவர். பாதுகாப்பு குறைவான இடங்களுக்கு செல்லக்கூடாது. சிரமமான சூழ்நிலையிலும் குடும்பத்தேவை ஓரளவுநிறைவேறும். குடும்பத்தில் திட்டமிட்ட சுபநிகழ்ச்சி நிறைவேறும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி செயற்படுவதால் மட்டுமே பணி நடைமுறை எளிதாக இருக்கும். வேலைகளை முடிக்க பணி நேரத்துக்கும் அதிகமாக அலுவலகத்தில் இருக்க வேண்டி வரும். சலுகைகளைப் பெறுவதில் அவசரம் காட்டக்கூடாது. குடும்பப் பெண்கள் கணவரை அனுசரித்து நடப்பர். செலவை சிக்கனப்படுத்தி குடும்ப மகிழ்ச்சிக்கு வழிவகுப்பர். புத்திரப் பேறு இல்லாதவர்களுக்கு நற்பலன் உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் கடின உழைப்பின் பேரில் சுமாரான லாபம் பெறுவர்.

**மாணவர்கள்:** பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், கணினி ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் வெளிவிவகாரங்களில் கவனம் கொள்வதை தவிர்ப்பது அவசியம். ஏனைய மாணவர்களும் கவனமாகவே இருக்க வேண்டும். கடினமாக உழைப்பவர்களைக் குரு கை தூக்கி விடுவார். படிப்புக்கான பணவசதி அளவுடன் இருக்கும். சக மாணவர்களின் உதவி கிடைத்து மனம் மகிழ்வீர்கள். தந்தையின் வழிகாட்டுதலை பின்பற்றி நடந்து குடும்பத்திற்கு பெருமை தேடித்தருவீர்கள்.

**விவசாயிகள்:** குறைந்த செலவில் அதிக பலன் தருகிற தானியங்களை பயிரிடுவதில் ஆர்வம் கொள்வீர்கள். அளவான விளைச்சல் கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் கிடைக்கிற பணவரவு முக்கிய செலவுகளுக்கு பயன்படும். நிலம் தொடர்பான விவகாரத்தில் பொறுமை நல்லது.



## இடபம்

உங்கள் ராசிக்கு அட்டம, ஆதாய ஸ்தான அதிபதியாகிய குருபகவான் மீனத்தில் இருந்து பெயர்ச்சியாகி ராசிக்கு பன்னிரெண்டாம் இடமான மேடத்தில் அமர்வு பெற்றுள்ளார். இதனால் உங்கள் வாழ்வில் பல மாற்றங்கள் உருவாகும். குருவின் அமர்வு சிரமம் தந்தாலும், தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் தாய், வீடு, கடன், பணி, ஆயுள் ஸ்தானத்தைப் பார்ப்பதால் அவற்றின் மூலம் சிறப்பான பலன் கிடைக்கும். பணவரவு குறையும் என்பதால் சிக்கனத்தை, தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும். முக்கிய தேவைகளுடன் நிறுத்திக்கொண்டால் கடன் ஏற்படாமல் தவிர்க்கலாம். குடும்ப சூழ்நிலை காரணமாக இடமாற்றம், நீண்டதூரப் பயணம் ஏற்படும். தம்பி, தங்கைகளிடம் பாசம் அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் கிடைக்கிற வசதி உங்களை திருப்தி அடையச் செய்யும். தாய் சொல்லும் அறிவுரை வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும். புத்திரர்கள் ஆடம்பரப் பொருள்களைக் கேட்டு நிர்ப்பந்தம் செய்வர். சொத்து ஆவணங்களை பிறர் பொறுப்பில் தரக்கூடாது. உடல்நலக்குறைவு சரியாகி ஆரோக்கியம் அதிகரிக்கும். வழக்கு, விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

புதிய விவகாரங்களில் ஈடுபடாமல் விலகியிருப்பது நல்லது. இதுவரை எதிரியாக நடந்த உறவினர்கள் பாசக்கரம் நீட்டும் விசித்திர சூழ்நிலை ஏற்படும். கணவன், மனைவி கௌரவப் பிரச்சினையால் கருத்து வேறுபாடு கொள்வர். விட்டுக்கொடுத்து செல்லவும். நண்பர்கள் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து செல்வர். சிரமமான சில சூழ்நிலைகளை எதிர்கொண்டாலும் அதிலிருந்து விடுபட குருவருள் துணைநிற்கும். தந்தைவழி உறவினர்கள் மரியாதையுடன் நடந்துகொள்வர்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் எதிர்வரும் குறுக்கீடுகளை உரிய வகையில் சரிசெய்வர். தக்க நபர்களின் ஆலோசனை பணியில் வேகத்தைக் கூட்டும். சலுகைகள் ஓரளவு கிடைக்கும். குடும்பப் பெண்கள் தாய்வழி உறவினர்களின் பாராட்டுப் பெறுவர். கணவரின் கருத்துக்கு மரியாதை தருவதால் மட்டுமே குடும்ப நலன் சிறக்கும். வீட்டுச்செலவில் சிக்கனம் நல்லது. சுயதொழில் புரியும் பெண்கள் சந்தையில் போட்டி குறைந்து நம்பிக்கையுடன் செயற்படுவர். உற்பத்தி, விற்பனை முன்னேற்றும். லாபம் சுமாராக இருக்கும்.

**மாணவர்கள்:** மருத்துவம், சட்டம், விவசாயம், வணிகவியல், கணினி, நூலக அறிவியல் ஆகிய துறைகள் சார்ந்த மாணவர்கள் படிப்பதற்குரிய அனுகூலமான சூழ்நிலை வளரும். மதிப்பெண் பெறுவதில் முன்னேற்றம் காண்பர். ஏனைய துறை மாணவர்கள் இவர்களை விட நன்றாகப் படிப்பர். சக மாணவர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு சரியாகும். தாயின் பாசம் கிடைக்கும். படிப்பு முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் ஓரளவு அனுகூலம் உண்டு.

**விவசாயிகள்:** இடுபொருள்களின் விலை உயர்வு காரணமாக மகசூலில் விளைச்சலில் சிறு பாதிப்பு ஏற்படும். விளைபொருள்களுக்கு ஓரளவே விலை கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் முன்னேற்றமும் கூடுதல் பணவரவும் கிடைக்கும். நிலம் தொடர்பான சிரமங்களுக்கு தீர்வு வரும்.

union assurance
Trust in your tomorrow, today.

வேலைவாய்ப்பு



இளையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

காலம் :- புதன்கிழமை - 04.05.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்,
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனை முகாமையாளர்
A.Anton
0773688791, 0773668829
0773713415

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கணபதிப்பிள்ளை

### (இளைப்பாறிய உத்தியோகத்தர், வனபரிபாலன இலாகா)



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, வேரக்கேணி கந்தசாமி கோயிலடியைச் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கணபதிப்பிள்ளை நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கனகசுந்தரம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையாவின் (பொலிஸ்) அன்புச் சகோதரனும் பரராஜசேகரம் (மட்டுவில்), தவராஜசேகரம்(லண்டன்), சிவராஜசேகரம்(வவுனியா இ.போ.ச.), குலராஜசேகரம் (லண்டன்), குணராஜசேகரம்(கொடிகாமம்), சாந்தினி(மட்டுவில்), ஜெயந்தினி(ஆசிரியை, மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), குமுதினி (லண்டன்), கதிர்காமசேகரம் (பிரான்ஸ்), ஜெயராசசேகரம்(லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்களேஸ்வரி, செல்வராணி, தேவராணி(ஆசிரியை, வெளிக்குளம் உயர்தர வித்தியாலயம், வவுனியா) திலகவதி, பவானி (யாழ். போதனா வைத்தியசாலை), ஞானபஞ்சாட்சரம்(இ.மி.ச, சாவகச்சேரி), விநாயக மூர்த்தி, தவபாலராசா, சதீஸ்வரி, சிவரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரதீஸ்கரன், ரதீஸ்வரி, விமலநாதன், ரஜினா, ரமணா, தவச்செல்வி, யோகேஸ்வரன், காலஞ்சென்ற தவச்செல்வன் மற்றும் தவப்புதல்வன், பிரியலோஜனி, கிரிஜா, கௌசல்யா, வேந்தன், துசியந், சுதர்மன், சுதர்சன், சுதர்ஜனா, தவக்குமார், அனுசியா, தனுசியா, கிஷாந், சதீஸ், தமிழினி, யோகனா, மிதுர்சா, காலஞ்சென்ற பானுசா மற்றும் தர்வின், சுவேதா, மதுசாளினி, தேனுகன், ரூபினி ஆகியோரின் அன்புப் பேரனும் தர்சிகா, விதுசன், விபுசன், லதுசா, கரிஸ்னவி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெணியன்(நேரியதூபி) மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேரக்கேணி கந்தசாமி கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(1664) (28-27)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு எதிராக இனிமேல் ஆப்கானிலிருந்தே அமெரிக்கா தாக்குதல்

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆளில்லா விமானத் தாக்குதலை இனிமேல் ஆப்கானிஸ்தானில் இருந்து நடத்த அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

எங்கள் மண்ணில் இருந்து எங்கள் மண்ணில் அடைக்கலமாகியுள்ள பயங்கர வாதிகள் மீது தாக்குதல் நடத்த அனுமதிக்க முடியாது என்று பாகிஸ்தான் திட்டவட்டமாக கூறியதையடுத்து அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளது. இதை அமெரிக்காவின் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ''நியூயோர்க் ரைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இஸ்லாமாபாத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அமெரிக்காவின் இராணுவ அதிகாரி மைக் முல்லன் பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் பயங்கரவாதிகள் தனி இராச்சியம் நடத்தி வருகிறார்கள்.

அவர்களுக்கு எதிராகப் பாகிஸ்தான் இராணுவம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அப்பகுதியில் நாங்கள் நடத்தி வரும் விமானத் தாக்குதலின் வேகத்தைக் குறைக்க மாட்டோம் என்றார்.

அமெரிக்க இராணுவ அதிகாரி இப்படி எச்சரிக்கை விடுத்த மறு வாரமே பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை ஆப்கானிஸ்தானில் இருந்து நடத்த திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இது எந்த அளவுக்கு உண்மை என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பலுசிஸ்தான் தலைநகர் குவெட்டாவில் இருந்து 350 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஷாம்சி விமானத் தளத்தில் இருந்து அமெரிக்காவின் இராணுவ வீரர்களை வாபஸ் பெற வேண்டும் என்று பாகிஸ்தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய உளவுத் துறைத் தலைவராக டேவிட் ஹெச் பேட்ரியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனத்தால் பாகிஸ்தான் அச்சம் அடைந்துள்ளது. கடந்த காலங்களில் பேட்ரியாஸ் தங்களுக்கு எதிராகவே செயல்பட்டதாகக் கருதும் பாகிஸ்தான் வரும் காலத்தில் தங்களுக்கு எதிரான அவரின் எதிர்ப்பு வலுக்கும் என்று கருதுகிறது. இதனால் இனிமேலும் தங்களது நாட்டில் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்கத் தாக்குதலை அனுமதிப்பது நல்லதல்ல என்று நினைக்கிறது.

எனினும் ஒரே அடியாகத் தாக்குதலை முற்றிலும் நிறுத்துமாறு உத்தரவிட்டால் அமெரிக்கா கொதித்தெழுந்துவிடும் என்று பாகிஸ்தான் கருதுகிறது. இதனால் படிப்படியாக அந்நாட்டுக்கு நெருக்குதல் அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

அதன் ஒருபகுதியாகத்தான் தமது நாட்டில் உள்ள அமெரிக்காவின் விமானத் தளத்தை மூடுமாறு பாகிஸ்தான் நெருக்குதல் அளித்துள்ளது. ஆனால் இதை அமெரிக்கா ஏற்குமா என்பது தெரியவில்லை என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் சொல்கின்றனர். இதனிடையே பாகிஸ்தானின் நெருக்குதலால் அமெரிக்கா சீற்றம் அடைந்துள்ளதாகவும், அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து தீவிரமாக யோசித்து வருவதாகவும் தெரியவருகிறது. பாகிஸ்தானில் பழங்குடியினர் அதிகம் வாழும் வஜிரி ஸ்தான் பகுதி பயங்கரவாதிகளின் கோட்டையாகவும் திகழ்கிறது. இப்பகுதியில் பயங்கரவாத முகாம்களை அழிக்க அமெரிக்கா கடுமையாகத் தாக்குதல் நடத்தி வருகிறது. 2004இல் இருந்து ஆளில்லா விமானத் தாக்குதலை நிகழ்த்துகிறது.

இத்தாக்குதலின் போது அப்பாவி மக்களும் கொல்லப்படுவதாகப் பரவலாகப் புகார் எழுந்துள்ளது. தவி பாகிஸ்தான் மண்ணில் பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க இராணுவத்தைத் தொடர்ந்து தாக்குதல் நடத்த அனுமதிப்பதன் மூலம் தங்களது நாட்டு ராணுவத்தை தாங்களே குறைத்து மதிப்படுவது போல் உள்ளது என்று அந்நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

இதுவும் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் நெருக்குதல் அளிப்பதற்கு காரணமாக இருக்கக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்

## ஜேர்மன் ஹம்பர்க்கில் மே தினத்தில் மோதல்

ஜேர்மனியின் ஹம்பர்க் நகரில் பாரிய முறைப்படி மே தினம் கொண்டாடப்பட்டது. இதில் மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மாணவர்கள் நடத்திய கல்வீச்சுத் தாக்குதலில் 10 பொலிஸார் காயமடைந்தனர். பதற்றத்தைத் தணிப்பதற்காகப் பொலிஸார் நடத்திய தடியடித் தாக்குதலில் மாணவர்கள் ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

## மாணவன் துப்பாக்கி விற்றதால் பரபரப்பு

அமெரிக்காவில் நியூயோர்க் நகரப் பள்ளி ஒன்றில் மூன்றாம் வகுப்பு படிக்கும் சிறுவன் ஒருவன் தன் சக மாணவனுக்கு துப்பாக்கியை விற்பனை செய்துள்ளான்.

அமெரிக்காவின் குயின்ஸ் நகரை சேர்ந்தவர் இக்னாஸி யோ கால்வன். இவரது மகன் அப்பகுதியில் உள்ள பள்ளி ஒன்றில் மூன்றாம் வகுப்பு படித்து வருகிறான்.

மாணவனின் தந்தை தன்னுடைய பாதுகாப்புக்காக9எம்.எம் பிஸ்டல்வகையைச் சேர்ந்த துப்பாக்கியை வைத்திருந்தார். சம்பவத்தன்று மாணவன் தன்னுடைய துப்பாக்கியை பள்ளிக்கு எடுத்துச் சென்று சக மாணவனிடம் 3.50 டொலர் அளவுக்கு விற்பனை செய்துள்ளான்.

துப்பாக்கியை வாங்கிய மாணவனின் தாய் பள்ளி நிர்வாகத்திடம் தகவல் தெரிவித்தார். தொடர்ந்து பள்ளி நிர்வாகத்தினர் பொலிஸில் புகார் செய்தனர். புகாரின் பேரில் நகர பொலிஸ் அதிகாரி துப்பாக்கியை கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தினர்.

குயின்ஸ் நகர குடும்ப நீதிமன்றத்தில் மாணவன் மற்றும் அவனது பெற்றோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பள்ளி நிர்வாகம் துப்பாக்கியை விற்பனை செய்த மாணவன் மற்றும் வாங்கிய மாணவனை பள்ளியிலிருந்து நீக்கம் செய்துள்ளது.

VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 119
திகதி - 30.04.2011

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து G அதிர்ஷ்ட இலக்கம் 01 வெற்றி இலக்கம் 6 9 0 1 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G | 01 | 6 | 9 | 0 | 1 | 5 | ரூ. 15,490,974.00 | பரிசு | - |
| 1 பரிசு | | 01 | 6 | 9 | 0 | 1 | 5 | ரூ. 2,000,000.00 | பரிசு | 0 |
| 2 பரிசு | | | 6 | 9 | 0 | 1 | 5 | ரூ. 100,000.00 | பரிசு | 4 |
| 3 பரிசு | | | | 9 | 0 | 1 | 5 | ரூ. 10,000.00 | பரிசு | 28 |
| 4 பரிசு | | | | | 0 | 1 | 5 | ரூ. 1,000.00 | பரிசு | 276 |
| 5 பரிசு | | | | | | 1 | 5 | ரூ. 50.00 | பரிசு | 2776 |
| 6 பரிசு | | | | | | | 5 | ரூ. 20.00 | பரிசு | 26667 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 6 | 9 | 0 | 1 | | ரூ. 1,000.00 | பரிசு | 30 |
| 8 பரிசு | | | 6 | 9 | 0 | | | ரூ. 100.00 | பரிசு | 278 |
| 9 பரிசு | | | 6 | 9 | | | | ரூ. 50.00 | பரிசு | 2768 |
| 10 பரிசு | G | | | | | | | ரூ. 20.00 | பரிசு | 11021 |
| 11 பரிசு | G | 01 | | | | | | ரூ. 100.00 | பரிசு | 1231 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,167,860.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.15,872,598.00

**காணி விற்பனைக்கு**

நெல்லியடி, பருத்தித்துறை வீதியில் நெல்லியடி புதிய சந்தைக்கு முன்பாக வங்கிக்கு அருகில் மூன்று அறை குசினி உள்ள வீடும் 8 பரப்புக் காணியும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக் கிழமை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:- 0776401699

**மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

வசந்த மகோற்சவப் பெருவிழா

கொடியேற்றம் - 03.05.2011
தேர் - 16-05-2011
தீர்த்தம் - 17-05-2011

உங்கள் வாகனங்களில் கோயிலுக்கு வரலாம்.

அறங்காவலர்.

**வீடு, அறைகள், கட்டடங்கள் வாடகைக்கு**

திருமகள் சோதி வீதியின் முகப்பில் 750 பிரதான வீதிக்கு மிக அருகில் சகல வசதியும் உள்ள வீடு, அறைகளும் இரும்புக் கடைக்குரிய இடம் மற்றும் அடுக்கணிகளும் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0772487228, 021 226 4206

**நன்றி நவிலல்**

ஓராம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை ''யோகசித்த ஆயுர்வேத வைத்தியசாலையில்'' நான் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளேன். என்னைக் குணப்படுத்திய வைத்தியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி யோ.பாலேந்திரன்

**மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பம், 02.06.1980, பூராடம், 4ஆம் பாதம்,கிரகபாவம் 12, தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் மணமகளுக்கு அரச உத்தியோகத்தர் அல்லது வெளிநாட்டு மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:- 0779672105

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம் [illegible] 1973 [illegible] செவ்வாய் 11 [illegible] PR உடைய மணமகனுக்கு 1980 இற்குப் பின்னர் பிறந்த அழகிய படித்த மணமகள் தேவை. இங்கு வந்து திருமணம் செய்து கொள்வார். தொடர்பு:- 0786151810

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 20 . 06 . 1941



மறைவு 12 . 05 . 2010

இராசரத்தினம் விநாயகமூர்த்தி

அன்பாலும் பாசத்தாலும் எல்லோரையும்
அரவணைத்த எங்கள் அப்பாவே நீங்கள்
எம் வீட்டின் குலவிளக்கே
அணையாத தீபமே எமை வாழவைத்த எம்
அருமைத் தெய்வமே!- அப்பா நீங்கள்
எம்மைப் பாதிவழி தனில் பரிதவிக்க
விட்டு எங்கு சென்றீரோ?
ஓர் ஆண்டல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

47, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (3719) குடும்பத்தினர்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வில் 05 . 05 . 1978



உதிர்வில் 13 . 05 . 2010

அமரர் கந்தையா சத்தியசீலன்[மாறன்]
[கைதடி - நீர்வேலி] (திதி: 02.05.2011)

நித்தம் நித்தம் உங்கள் கனவு
கண்களில் வந்து செல்கின்றது
ஆறாத் துயரை தந்து சென்றீர்
பாலகன் இரண்டைத் தவிக்கவிட்டு
உங்கள் நினைவுடன் வாழும் - குழந்தைகள்
துயர் துடைக்க வந்திடுவீரோ?

ஓராண்டு ஓடித்தான் போனதோ
ஆனாலும் உங்கள் நினைவு எப்போதும்
எங்கள் நெஞ்சினில்
மறுபடியும் பூமியில் வந்து பிறந்திட
வேண்டுகின்றோம் ஆண்டவனை.

நீர்வேலி மத்தி, நீர்வேலி.
பிரிவால் வாடும்
மாமி, மைத்துனர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கூட்டுப் படைகளின் குண்டுவீச்சில் கடாபியின் மகன் மற்றும் 3 பேரன்கள் பலி!



திரிபோலி,மே2

லிபிய தலைநகரான திரிபோலியில் நேட்டோ விமானப் படைகள் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் கேணல் மும்மர் கடாபியின் புதல்வர் பலியானார் என அரசு பேச்சாளர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

பப் அல்-அஜிஜியா வளாகம் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் கடாபியின் புதல்வர் சைப் அல்-அராபும், கடாபியின் மூன்று பேரப்பிள்ளைகளும் உயிரிழந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அச்சமயத்தில் லிபிய தலைவர் கடாபியும் அப்பகுதியிலேயே இருந்தார். எனினும், எதுவித காயங்களுமின்றி அவர் தப்பியுள்ளார் என்றும் அரசு பேச்சாளர் மேலும் விவரித்தார்.

இதுகுறித்து நேட்டோ குறிப்பிடுகையில், 'கட்டுப்பாட்டு கட்டளை அகம்' எனக் குறிப்பிடப்பட்ட கட்டடப் பகுதி மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டது. தனிப்பட்டவர்களின் கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்று தெரிவித்தது.

கூட்டமைப்பின் பேச்சாளர் லெப்டினன்ட் ஜெனரல் சார்ள்ஸ் போசார்ட் குறிப்பிடுகையில், ''இராணுவ இலக்குகள் மீதே நேட்டோ குறி வைத்துள்ளது. விமானத் தாக்குதலில் கடாபியின் குடும்பத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. இதை நான் அறிவேன்'' என்றார்.

மனித இழப்புகளுக்காக நான் பெரிதும் வருந்துகிறேன். குறிப்பாக லிபியாவில் தற்போது இடம்பெற்றுவரும் போராட்டத்தில் அப்பாவி மக்கள் வகைதொகையின்றி கொன்று குவிக்கப்படுவதையிட்டு பெரிதும் வருந்துகிறேன்'' என்றும் போசார்ட் மேலும் தெரிவித்தார்.

## சிங்கப்பூர் சரக்குக் கப்பல் கென்யா கடலில் கடத்தல்

சிங்கப்பூருக்குச் சொந்தமான கப்பலொன்று கென்யா கடல் பகுதியில் கடத்தப்பட்டுள்ளது என சிங்கப்பூர் கப்பல் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரைச் சேர்ந்த 'எம்.டி. ஜெமினி' என்ற சரக்குக் கப்பலொன்று இந்தோனேசியாவின் கோலா தான்சூங் பகுதியிலிருந்து கென்யாவின் மொம்பசாவிற்குச் சென்றுகொண்டிருந்தது.

அக்கப்பல் தான்சானியாவின் கடல் பகுதியைச் சேர்ந்த டார் இ சலாம் என்ற இடத்தின் அருகே சென்றுகொண்டிருந்த போது கடத்தப்பட்டுள் ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 2005 ஆம் ஆண்டு மறைந்த போப்பாண்டவர் 2ஆம் ஜோன் போல் சவப்பெட்டி வேறு இடத்தில் அடக்கம்

## உலகம் முழுவதும் இருந்து கிறிஸ்தவர்கள் திரண்டனர்

வத்திக்கான்,மே2

தற்போது இருக்கும் போப்பாண்டவருக்கு முன்பு 2ஆம் ஜோன்போல் போப்பாண்டவராக இருந்தார். அவர் கடந்த 2005ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

அவரது உடல் வத்திக்கானிலுள்ள செயின்ட் பீட்டர் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அவர் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றார் என பக்தர்கள் நம்புகின்றனர்.

அவருடைய அருளால் பிரான்ஸைச் சேர்ந்த கன்னியாஸ்திரி மரிசைமன் பியாரி நரம்புத் தளர்ச்சி நோயிலிருந்து குணமாகி இருக்கிறார். இது நிரூபணம் செய்யப்பட்டது.


இதையடுத்து அவருக்கு அருளாளர் பட்டம் வழங்க முடிவு செய்யப்பட்டது. வத்திக்கான் தேவாலயத்தில் அருளாளர் பட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதற்காக ஜோன்போல் உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்த இடத்திலிருந்து அவருடைய சவப்பெட்டி தோண்டி எடுக்கப்பட்டது. சவப்பெட்டிக்கு போப்பாண்டவர் பெனடிக் திருப்பலி நடத்தி அருளாளர் பட்டத்தை வழங்கினார்.

இதில் உலகம் முழுவதுமிருந்து 16 நாட்டுத் தலைவர்களும், 87 கத்தோலிக்க மதப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். அருளாளர் பட்டம் வழங்கும் நிகழ்ச்சியில் உலகம் முழுவதுமிருந்து இலட்சக்கணக்கான பக்தர்களும் கலந்துகொண்டு ஜோன்போலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

அருளாளர் பட்டம் வழங்கி இருப்பதால் ஜோன்போலை வணங்குவதற்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வருவார்கள். ஜோன்போலின் உடல் இதற்கு முன்னர் தேவாலயத்திலுள்ள சுரங்க அறையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. அங்கு சென்று பக்தர்கள் வழிபட முடியாது.

எனவே வேறு இடத்தில் அடக்கம் செய்ய முடிவு செய்தனர். செயின்ட் பீட்டர் தேவாலயம் அருகே சிறு தேவாலயம் ஒன்று உள்ளது. இங்கு பிரபல சிற்பி வடிவமைத்த வியாகுலமாதா பளிங்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவாலயத்தில் ஜோன்போல் சவப்பெட்டி அடக்கம் செய்யப்பட்டது. (எ)



அமெரிக்கா, டஸ்கோலோசாவில் சில நாள்களுக்கு முன் வீசிய சூறாவளி புயலால், அப்பகுதியில் உள்ள வீடுகள் உடைந்து சிதைவடைந்தது. இந்தப் பகுதியை அந்நாட்டு அதிபர் ஒபாமா சென்று பார்த்தார்.

# பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் தேனிலவு தள்ளிவைப்பு

லண்டன், மே2

பிரிட்டிஷ் பட்டத்து இளவரசர் வில்லியம் - கேற் மிடில்டன் திருமணம் கடந்த 29ஆம் திகதி லண்டனிலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் அபே தேவாலயத்தில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

இவர்களது திருமணத்தில் 50 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்டனர். இவர்களது திருமணத்தை உலக நாடுகளைச் சேர்ந்த பல கோடி மக்கள் தொலைக்காட்சியில் கண்டு களித்தனர்.

திருமணம் முடிந்ததும் புதுமணத் தம்பதியான இளவரசர் வில்லியம் - கேற் மிடில்டன் வெளிநாட்டுக்குத் தேனிலவு செல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் உடனடியாக எந்த நாட்டுக்கும் தேனிலவு செல்லவில்லை.

தற்போது அவர்கள் பிரிட்டனிலேயே தங்கள் இனிய பொழுதை களிக்க உள்ளனர். எந்த நாட்டுக்குத் தேனிலவு செல்வது என்பது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும்.

இதைத் தொடர்ந்து இளவரசர் வில்லியம் அடுத்த வாரம் இராணுவப் பணிக்குத் திரும்புவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேனிலவு கொண்டாட்டம் தள்ளி வைக்கப்பட்டதற்கு புகைப்பிடிப்பாளர்கள்தான் காரணம் எனக் கூறப்படுகிறது.

அரச தம்பதியினர் தேனிலவுக்குச் செல்லும் இடங்களுக்கு விரட்டிச் சென்று அவர்களை படம் எடுத்து பத்திரிகைகளில் பிரசுரித்து தொல்லை கொடுத்து வருகின்றனர். இதுபோன்று தொல்லை கொடுத்ததால்தான் கடந்த 1997ஆம் ஆண்டு இளவரசர் வில்லியமின் தாயார் இளவரசி டயானா உயிரிழந்தார்.

அவர் பரிஸில் தனது காதலருடன் காரில் சென்றார். அவர்களை படம் பிடிக்க புகைப்பிடிப்பாளர்கள் மற்றொரு காரில் விரட்டிச் சென்றனர். அப்போது டயானா சென்ற கார் விபத்துக்குள்ளாகி அவர் பரிதாபமாக இறந்தார். இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவே தேனிலவு தள்ளி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. (எ)

# மாலைதீவு ஜனாதிபதிக்கு எதிராக எதிரணி போராட்டம்



மாலே,மே2

மாலைதீவு ஜனாதிபதி முகம்மது நஷீத் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் தலைநகர் மாலேயில் போராட்டம் நடத்தின.

இது குறித்து போராட்ட அமைப்பின் செய்தித் தொடர்பாளர் முகம்மது ஷரீப் கூறியவை வருமாறு:-

மாலைதீவில் பணவீக்க விகிதம் அதிகரித்துள்ளமை, வேலை இழப்பு ஏற்பட்டுள்ளமை, பணத்தின் மதிப்பை குறைத்துள்ளமை, அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வு ஆகியவை காரணமாக ஜனாதிபதியை பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். போராட்டம் நடைபெறும் நேரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் அரசு பேச்சுகள் நடத்த முன்வரவில்லை என அவர் தெரிவித்தார்.

1,200 சிறுதீவுக் கூட்டங்கள் கொண்ட மாலைதீவிற்கு சுமார் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். சுற்றுலா மூலமே அந்நாடு வருமானம் ஈட்டிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மூலம் முகம்மது நஷீத் அந்நாட்டின் முதல் ஜனாதிபதியானார்.

# என்டவர் விண்கலத்தில் கோளாறு; கடைசி நேரத்தில் நிறுத்தம்

கேப் கெனவரல், மே2

என்டவர் விண்கலத்தின் மின்விநியோகப் பகுதியில் கோளாறு ஏற்பட்டதையடுத்து சனிக்கிழமை விண்ணில் ஏவப்படவிருந்த அந்த விண்கலம் கடைசி நேரத்தில் ஏவப்படவில்லை.

அடுத்தாக திங்கட்கிழமை இது விண்ணில் செலுத்தப்படும் என நாசா அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் கேப் கெனவரலில் அமைந்துள்ள கென்னடி விண்வெளி ஏவுதளத்திலிருந்து விண்ணில் அமைக்கப்படும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு என்டவர் விண்கலம் சனிக்கிழமை ஏவப்படவிருந்தது.

இதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. விண்கலம் விண்ணில் ஏவப்படுவதை நேரில் பார்க்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், அவரது மனைவி மிஷேல் ஒபாமாவும் புளோரிடா வந்திருந்தனர்.

விண்கலம் ஏவப்படும் முன் இறுதிக்கட்ட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் அந்த விண்கலத்தின் மின்விநியோகப் பகுதியில் பழுதிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து கடைசி நேரத்தில் விண்கலம் ஏவும் திட்டம் தள்ளிவைக்கப்பட்டது.

இந்த விண்கலம் அடுத்து திங்கட்கிழமை விண்ணில் ஏவப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நாசா அதிகாரிகள் தெரிவித்தனர்.

விண்கலம் ஏவப்படுவதை நேரில் பார்க்க அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் வந்தமை இதுவே முதல் முறை. விண்கலம் கடைசி நேரத்தில் விண்ணில் செலுத்தப்படாமல் தாமதமானமை அனைவரையும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுனீஷியாவில் 800 கைதிகள் தப்பி ஓட்டம்

டுனிஷ்,மே2

டுனீஷியாவின் மத்திய மேற்குப் பகுதியில் கஸ்கரின் என்ற இடத்தில் மத்திய சிறை உள்ளது. இங்குள்ள 2 கைதிகளின் அறையில் திடீரென தீ பிடித்தது.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தீயை அணைக்கும் பணியில் சிறைக் கைதிகள் ஈடுபட்டனர். அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு 522 கைதிகள் அங்கிருந்து தப்பிவிட்டனர்.

கஸ்கானிலிருந்து 150 கி.மீற்றர் தூரத்தில் காப்சா என்ற இடத்தில் மற்றொரு சிறை உள்ளது. அந்தச் சிறையை உடைத்து 300 கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். தகவல் அறிந்ததும் நாடு முழுவதும் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து ஜெயிலிலிருந்து தப்பி ஓடிய 35 பேர் ஒரு மணி நேரத்தில் பிடிபட்டனர். மற்றவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது.

# கிடைத்திருக்கும்....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

''இந்தச் சம்பவத்தில் யாரும் குற்றமிழைத்தார்கள் என நாம் சொல்லவில்லை. ஆனால் புலிகளின் தலைவர்கள் சரணடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் நம்பியாரும் பங்கெடுத்திருக்கிறார் என்பதைக் காட்டும் வகையிலான போதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன'' என்கிறார் சிறீதரன்.

இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரியாக இருந்த நம்பியாரின் சகோதரன் 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கான ஆலோசகராகச் செயற்பட்டிருக்கையில், இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றும் எந்த நடவடிக்கையிலும் நம்பியார் ஈடுபட்டிருக்கக் கூடாது என்கிறார் சிறீதரன்.

உண்மையில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றவை மனிதப் பேரவலமாக இருந்தபோதிலும் அதனை இந்தக் கண்ணோட்டத்தில் அணுகுவதற்கு ஐ.நா. தவறிவிட்டது. போரின் இறுதி மாதங்களில் இடம்பெற்ற பொதுமக்கள் இழப்புக்கள் தொடர்பாகத் தான் திரட்டிய தகவல்களை ஐ.நா. வெளிப்படுத்தத் தவறியது என்கிறார் றோஸ்.

2009ஆம் ஆண்டு மே 13க்கு முன்னான நாள்களில் 7,721 பேர் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. புள்ளிவிவரங்களைத் திரட்டியிருந்தாக நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்து. பொதுமக்கள் இழப்பு விவரங்கள் தொடர்பான எண்ணிக்கையை ஐ.நா. அப்போதே வெளியிட்டிருந்தால் போரின் இறுதி நாள்களில் ஏற்பட்ட பொதுமக்கள் இழப்புக்களை நோக்கி அனைத்துலகக் கவனம் திரும்பியிருக்கும் என வாதிடப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வன்னிப் பிராந்தியத்தில் 300,000 பொதுமக்கள் வசித்து வந்தார்கள் என்ற உண்மையினை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும் வகையில் ஐ.நா. காத்திரமான அழுத்தத்தினைப் பிரயோகித்திருக்க வேண்டும் எனக் கீனன் கூறுகிறார். போர் இடம்பெற்ற பகுதியில் 75,000 தொடக்கம் 100,000 வரையிலான பொதுமக்களே இருக்கிறார்கள் என அரசு மீண்டும் மீண்டும் கூறிவந்தது.

இந்த நிலையில் போரின் மத்தியில் சிக்கியிருந்த பொதுமக்களின் தொகை தொடர்பான உண்மை விவரத்தினை ஐ.நா. வெளியிட்டிருக்குமெனில் அதிகளவிலான மனிதாபிமான உதவிகள் அங்கு அனுப்பப்படவேண்டும் என்ற வாதம் வலுப்பெற்றிருக்கும்.

அத்துடன் போரின் போது கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்களை அரசு மூடிமறைப்பதையும் இது கடினமாக்கியிருக்கும். ஆனால் ஐ.நா. அவ்வாறு செயற்படவில்லை.

போரின் இறுதிநாள்களில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை தொடர்பாகத் தனக்குக் கிடைக்கப்பெற்ற புள்ளி விவரங்களை ஐ.நா. வெளியிடாதமை தான், வன்னிப் பகுதியில் விரிந்த மோசமான மனிதாபிமான நிலைமை தொடர்பாக இலங்கை அரசு பொய் சொல்வதற்கு வழிசெய்தது.

பேர்ர் முடிவுக்கு வந்து ஓரிரு தினங்களின் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த முகாம்களுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பான் கீன் - மூன் பயணம் செய்திருந்தார்.

இந்த நிலையில் கொடூரமாகப் போரைத் தொடுத்த இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு ஐ.நா. அங்கீகாரம் வழங்குவதாகவே இந்த பயணம் அப்போது பலராலும் பார்க்கப்பட்டது. ''தாங்கள் இணைந்து பணியாற்றும் தரப்பு எதுவோ அதனது செயற்பாட்டு முறை என்ன என்பதை ஐ.நா. சரியாக விளங்கிக் கொள்ளுவதற்காகத் தவறி விட்டது. வெல்லுவதற்காக இவர்கள் எதனையும் செய்யக்கூடியவர்கள் என்பதை ஐ.நா. புரிந்துகொள்ளவில்லை''

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான அனைத்துலகத் தரத்துக்கு அமைவான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஐ.நா. ஏற்கனவே ஒருமுறை தவறிவிட்டது. வெளிவந்திருக்கும் நிபுணர் குழுவின் அறிக்கையானது இன்னொரு வாய்ப்பினை ஐ.நாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

முறையான விசாரணைகள் ஏதேனும் முன்னெடுக்கப்படாதவிடத்து, கிளர்ச்சிக்கு எதிராக இலங்கை அரசுக்கு வெற்றியைத் தந்த, ஆனால் கொடூரம் நிறைந்த தந்திரோபாயங்களை இதுபோன்ற பிணக்குகள் காணப்படும் இதர நாடுகளும் கைக்கொள்ளும் நிலைமையே தோன்றும்.

இலங்கை அரசு நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கும், 'பயங்கரவாதத்தினைத் தோற்கடித்தல்: சிறிலங்காவினது அனுபவம்' என்ற தலைப்பிலமைந்த கருத்தமர்வுக்குத் தங்களது பிரதிநிதிகளை அனுப்புவதற்கு 31 நாடுகள் ஏற்கனவே உடன்பட்டிருக்கின்றன.

ஐ.நா. பாதுகாப்புச்சபை, ஐ.நாவின் மனித உரிமைச் சபை, அல்லது தேவையேற்படுமிடத்து பான் கீ - மூன் ஆகியோர் 2009ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக எடுப்பதற்குத் தவறிய நடவடிக்கை எதுவோ அதனை மீண்டும் எடுப்பதற்கான அரியதொரு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் 'இலங்கை பெற்றுக்கொண்ட அனுபவம்தான்' என்ன என்பதை ஐ.நா. போட்டுடைக்க வேண்டிய தருணமிது. ✱

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,மே.02

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2387 ஆம் இலக்க சீட்டிழுப்பில் நேற்றுமுன்தினம் "O" என்ற ஆங்கில எழுத்தும் 4/9/8/7/3/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியவையாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

4/9/8/7/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/8/7/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/7/3/7என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 129 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,227 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,174 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,20,987 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 4/9/8/7/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/9/8/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 116 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/9/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத் திருக்கும் 1,233 பேருக்கு 9ஆம் பரிசாகத்தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4/9 என்ற இலக்கங்களைக்கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,173 பேருக்கு பத்தாம் பரிசாகத்தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"O" என்ற ஆங்கில எழுத்தை மட்டும்கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 48,398 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ற)

## அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி ஆட்டோ வாகனத்தில் ஆடு ஏற்றிவந்தஆட்டோ சாரதி உட்பட மூன்று பேருக்கு கடந்த 28 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

(க-207)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23
11
1969



விண்ணில்
02
05
2006

அமரர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)
சந்தைப்படுத்தல் முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம், யாழ்ப்பாணம்.

" அழிவிற்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது " *(1 . கொரி - 15, 42)*

காலனவன் உம்மைப்பிரித்து ஐந்து ஆண்டுகள் சென்றதப்பா.
கள்ளம் இல்லா உம் முகம் காணத்துடிக்கும் எம் மனம்;
காலங்கள் பல சென்றாலும் ஆறாதப்பா
எம் துயர் நீங்கள் இன்றி.
கண் எனக் காத்திட்ட உம் பிரிவால் நாம் சந்தித்த
வேதனைகள் பல.
கர்த்தரின் கரங்களில் உமது ஆன்மா சாந்தியடைய
கண்களில் நீர் துளிக்க, கனத்த இதயத்துடன்
வேண்டி நிற்கின்றோம்.

எம் அன்பு அப்பா
நாம் வாழும் காலம் எல்லாம் உங்கள்
நினைவுகளுடனேயே வாழ்வோம்.

மனைவி - சுவேந்தினி
பிள்ளைகள் - அல்றின், சேஷா (ALRIN, SESHA)
WINDSOR, BRISBANE, AUSTRALIA.

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் சரவணமுத்து கனகரத்தினம்



(அச்சா) (முன்னாள் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளை முகாமையாளர்)

சங்கானை, தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் வளவத்தை ஒழுங்கை, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அ.ச.கனகரத்தினம் (அச்சா) 30.04.2011 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளவத்தை ஒழுங்கை,
புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு. (3736)

தகவல்:
ஆர்.எஸ். ஜெயபாலன்
(மருமகன்)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் தங்கராஜா
கமலலோஜன்
(யா/ கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்)
திதி: சதுர்த்தசி (02.05.2011)

மலர்வு
13 ★ 09 ★ 1989

உதிர்வு
26 ★ 04 ★ 2006

ஐந்தாண்டுகள் எம்முடன் கூடி இன்பமுற்றீர்கள்
காலனவன் பொறுக்காமல் பிரித்து
ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
நாம் வாழும் வரை எம் உயிருடன்
ஒன்றாய் கலந்தே இருப்பீர்கள்.

[illegible] ஆலய வீதி,
[illegible] தெற்கு,
சாவகச்சேரி. (3734) (44-)

என்றும் உங்கள் பிரியமுள்ள:
மனைவி மற்றும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றவாளிகளை விசாரணை செய்ய இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்



## இந்திய அரசிடம் கம்யூ. கோரிக்கை

இலங்கை தமிழர்கள் படு கொலை விவகாரத்தில் போர்க் குற்றவாளிகளை விசாரணை செய்ய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண் டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் மனித உரிமை மீறல்கள், போர்க்காலத்தின் போது சர்வதேச சட்ட நெறிகளை மீறி இழைக்கப்பட்ட கொலைகள், குடிமக்கள் மீதே முப்படையை ஏவி குண்டு வீசிக் கொன்றமை, குடியிருப்புகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், வழிபாட்டு இடங்கள் ஆகியவற்றின் மீது ராணுவம் தாக்குதல் நடத்தி அழித்தமை போன்ற பல குற்றச்சாட்டுகள் பற்றி வந்த முறைப்பாடுகளை விசாரித்து, தடயங்களைச் சேகரித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைகளுக்கான குழு, போர்க் குற்றங்களை விசாரித்து நீதி வழங்கிடக் கோரி ஐ.நா.வுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையை ஐ.நா. உறுப்பு நாடுகளில் ஒன்று விசாரிக்குமாறு வலியுறுத்தி ஐ.நா.வின் ஒப்புதலைப் பெற வேண்டும். அத்துடன் இலங்கை அரசும் பகிரங்க விசாரணைக்கு ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காததோடு ஒடுக்கு முறை நடவடிக்கைகளை ஏவியதால் 2007 – 2009 வரை அது ஓர் உள்நாட்டுப் போராக மாற்றமடைந்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் நடந்த இறுதிக் கட்ட போரில் போராளிகள் ஆயுதங்களை பயன்படுத்துவதைக் கைவிட்டு போர் நிறுத்தத்துக்கும் சமரச பேச்சுக்கும் தூது அனுப்பி, வெள்ளைக் கொடியுடன் சென்ற அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் என்ற போராளியை நடுவழியில் ராணுவம் நிறுத்தி சுட்டுக்கொன்றது. பாதுகாப்பு முகாமுக்கு வருமாறு அழைப்பு விடுத்து அங்கு வந்த 40 ஆயிரம் மக்கள் மீது குண்டுகளைப் போட்டு அனைவரையும் கொன்று அழித்ததும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


இதை இலங்கை அரசு மறுக்கலாம். இந்திய அரசு தெரியாது என்று கூறலாம். ஆதாரங்கள் கேட்கலாம். எனவே தான் ஐ.நா. சபையின் மேற்பார்வையில் ஒரு பகிரங்க விசாரணைக் குழுவை அமைத்து சம்பந்தப் பட்டவர்கள் யாராக இருந்தாலும் அனைவரையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உலக அளவில் எழுந்துள்ளது.

இந்திய அரசு தொடர்ந்து இலங்கை அரசுக்கு ஆயுத தளபாடங்களை வழங்கி வந்தது. தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழக சட்டமன்றமும் விடுத்த போர்க் கருவிகளை வழங்க வேண்டாம் என்ற கோரிக்கையை இந்திய அரசு ஏற்கவே இல்லை.

இந்த நிலையில், ஐ.நா.வின் குழுவே விசாரணை கோருவதால் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள இந்திய அரசு, இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை விசாரிக்க வலியுறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தக் கட்டத்திலாவது இந்திய அரசு தமிழ் மக்களின் வேதனைமிக்க உணர்வுகளைப் புரிந்துகொண்டு பகிரங்க விசாரணைக்கு வலியுறுத்த வேண்டும். பகிரங்க விசாரணையின் போது செய்தியாளர்கள், ஊடகங்கள் அதில் பங்கேற்க முழுமையான அனுமதி வேண்டும். தமிழ் மக்கள் சாதி, மத, கட்சி வேறுபாடுகளை மறந்து, சொந்த சகோதரர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்கும் இந்தப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். இவ்வாறு தா.பாண்டியன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (வ)

## புதியதோர் உதயம்....




டில்லியில் அமைக்கப்பட்ட சி.பி.ஐ., புதிய தலைமை அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்த பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு, சி.பி.ஐ. இயக்குநர் அமர் பிரதாப் சிங், நினைவுப் பரிசு வழங்கினார். அருகில் மத்திய அமைச்சர்கள் சிதம்பரம், கபில் சிபில், வீரப்ப மொய்லி மற்றும் இணை அமைச்சர் நாராயணசாமி ஆகியோர் நிற்கின்றனர்.

# ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிறுத்த வேண்டும்

## மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்து

சென்னை,மே2

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ராஜபக்ஷ சகோதரர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன்னிறுத்தி இந்திய மத்திய அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என தமிழகத்தில் மனிதவுரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எழுத்தாளர் நாஞ்சில்நாடன், கல்வியலாளர் எஸ்.எஸ் ராஜகோபாலன், ஓவியர் டிராஸ்கி மருது, திரைப்பட இயக்குநர் கௌதம், தொழில்நுட்பவியலாளர் கீற்று நந்தன், ஊடகவியலாளர் வெப்துனியா அய்ய நாதன், தொழில் முனைவர் விசுவநாதன், மனித உரிமையாளர் கானகுறிஞ்சி ஆகியோ ரைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுவிக்கப் பட்டுள்ளது.போரில் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் என இரு தரப்பினரதும் மனித உரிமை மீறல்கள் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

வெள்ளைக்கொடியுடன் படையினரிடம் சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் அரசி யல் போராளிகள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

இந்த குற்றங்கள் விசாரணை செய்யப்படும் எனில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக ராஜபக்ஷ சகோதரர்கள் நிறுத்தப்படுவார்கள் என அதில் கூறப்பட்டுள்ளது. (எ)

# அருணாச்சல காங். முதலமைச்சர் ஹெலியுடன் காணவில்லை

## தேடும் பணிகள் மும்முரம்

அருணாச்சல பிரதேச மாநில காங்கிரஸ் முதலமைச்சர் டோர்ஜி காண்டு நேற்று முன்தினம் காலை தபாங் என்ற இடத்தில் இருந்து தலைநகரம் இட்டா நகருக்கு ஹெலிகொப்டரில் புறப்பட்டவேளை காணாமல் போயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் பயணம் செய்த ஹெலிகொப்டரில் முதலமைச்சரின் பாதுகாப்பு அதிகாரி, சட்டப் பேரவைத் தலைவர் ஒருவரின் சகோதரி மற்றும் பைலட்டுகள் 2 பேர் இருந்தனர்.

ஹெலிகொப்டர் பறந்து சென்ற 20 ஆவது நிமிடத்தில் அதன் தரைத் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதன் பிறகு ஹெலிகொப்டருடன் தொடர்பு கொள்ளவே முடியவில்லை.

இதனால் ஹெலிகொப்டரை தேடும் பணி தீவிரமாக நடந்து வந்தது. இந்த நிலையில் ஹெலிக்கொப்டர் பூட்டான் நாட்டில் பத்திரமாக இறங்கி விட்டதாக தகவல் கிடைத்தது. ஆனால் அது உறுதியான தகவல் இல்லை என்பது பின்னர் தெரியவந்தது. இதனால் மீண்டும் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது.

இந்திய விமானப்படை விமானங்கள், ஹெலிகொப்டர்கள் நேற்றுமுன்தினம் நண்பகலில் இருந்து மாலை வரை தொடர்ந்து தேடி வந்தன. ஆனால் கண்டு பிடிக்க முடியவில்லை. பின்னர் இரவு ஆகிவிட்டதால் தேடும் பணி நிறுத்தப்பட்டது. நேற்றுக் காலை மீண்டும் தேடும் பணி தொடங்கியது. ஹெலிகொப்டர்களில் தாழ்வாக பறந்து ஒவ்வொரு இடமாக தேடி வருகின்றனர்.

இந்தியா விண்ணில் செலுத்தியுள்ள செயற்கை கோள்கள் 24 மணி நேரமும் பூமியைச் சுற்றி வந்து படம் எடுத்துக் கொண்டே இருக்கும். இந்தப் படத்தின் உதவியுடன் ஹெலிகொப்டரைக் கண்டு பிடிக்க முயற்சித்து வருகின்றனர். ஹெலிகொப்டர் மாயமானதற்கு பிறகு நேற்று முன்தினம் 2 தடவைகள் இந்திய செயற்கை கோள்கள் அந்தப் பகுதியைக் கடந்து சென்று படம்பிடித்துள்ளன.

ஆனால் அந்தப் படத்தை ஆராய்ந்தபோது ஹெலி கொப்டர் விழுந்து கிடந்தது போன்ற எந்தக் காட்சியும் இல்லை. நேற்று அதே போல பகலில் செயற்கைக்கோள்கள் அந்தப் பகுதியில்வரும். அப்போது எடுக்கும்படத்தை வைத்து கண்டு பிடிக்க முயற்சிப்பார்கள். மேலும் செயற்கைகோள்கள் ஹெலிகொப்டரில் சமிக்ஞைகளும் கிரகிக்கும் சக்தி கொண்டவை. எனவே அதன் மூலமும் கண்டுபிடிக்க முயற்சி நடக்கிறது.

ஒரு வேளை பூட்டான் நாட்டு எல்லைக்குள் ஹெலி கொப்டர் விழுந்திருக்கலாம் என கருதப் படுகிறது. எனவே பூட்டான் அரசை தேடுதல் பணியில் ஈடுபடும்படி மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கேட்டுக் கொண்டார். இதனால் அங்கேயும் தீவிரமாக தேடுதல் பணி நடந்து வருகிறது. ஹெலிகொப்டர் வந்த பாதையை ஒட்டி சீனாவின் செலபாஸ் எல்லை பகுதி உள்ளது. அங்கே விழுந்திருக்க வாய்ப்பு இருப்பதால் சீனாவுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடம் கடல் மட்டத்தில் இருந்து 13 ஆயிரம் அடி உயரம் உள்ளது. எனவே இங்கு தேடுவது மிகவும் கடினமாக இருக்கும். தேடுதல் பணியை கவனிக்க மத்திய அமைச்சர் நாராயணசாமி, முகுல் வாஸ்னிக் ஆகியோர் இட்டா நகர் விரைந்துள்ளனர்.

அவர்கள் அதிகாரிகளுடன் பேசி தேடுதல் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இதற்கிடையே மாநில அரசும், தேடுதல் பணிக்காக சிறப்புக் குழுக்கள் அமைத்துள்ளது.

இந்தக் குழுக்கள் தனியாக தேடும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஹெலிகொப்டர் மாயமானதும் அது காட்டுப் பகுதியில் எங்காவது தரை இறங்கி இருக்க வேண்டும் என்றே கருதினார்கள். ஆனால் மாயமாகி 24 மணி நேரம் ஆகியும் எந்த தொடர்பும் இல்லாததால் ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கி இருக்க வேண்டும்.

அதில் இருந்தவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்றே கருதப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 மே 2011 திங்கட்கிழமை

# ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

## பகுதி - 03

22) இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அத்து டன் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டுள்ள பலதரப்பட்ட அதிகாரிகளைக் குழு சந்திப்பதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை என்பதையிட்டு குழு கவலை தெரிவிக்கிறது. இலங்கைக்கு விஜயம் செய்வது அதன் நடவடிக்கை களுக்கு அவசியமானதல்ல என்றிருந்த போதிலும், கற்ற பாடங்களை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் அரச அலுவலர்களைச் சந்தித்து, அவர்களின் கருத்துக்களை மேலும் நேரடியாகக் கேட்டு அவர்களுடன் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு (வேறு வழிகளில் உத்தியோகபூர்வ கருத்துக்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு குழு முடிந்த போதிலும்) குழுவுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கும். எழுத்து மூலமான பதில்களையும் இலங்கை அதிகாரிகளுடனான நேருக்கு நேரான உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை குழுவரவேற்ற போதிலும், அப்படியானதொரு ஈடுபாட்டுக்காக குழு முயற்சி செய்யவில்லை.

### உ. குழுவினது பதிவுகளின் இரகசியத் தன்மை

23) பின்னர் தகவலைப் பிரயோகிப்பது பற்றிய முழுமையான இரகசியத் தன்மையின் உறுதிப்பாட்டின் பேரில் சில சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமான மற்றும் வாய் மூலமான சமர்ப்பணங்கள் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றன. இது பற்றி அறிவுரை வழங்கிய சட்ட விவகாரங்கள் அலுவலகம், செயலாளர் நாயகத்தின் 'தகவலின் பதிவு நுட்பத் தன்மை, வகைப்படுத்தல் மற்றும் கையா ளுதல்' தொடர்பான அறிக்கையின் (ST/SGB/2007/6) ஏற்பாடுகளை அதன் பதிவுகளுக்கு உரியதாகக் கருதலாம் என உறுதிப்படுத்தியது. ஒரு (10) ஆவணத்தை 'கண்டிப்பான இரகசியத்தன்மை' என வகைப்படுத்தி அதற்கான பிரவேசத்தை 20 வருட காலத் துக்கு மட்டுப்படுத்துவதோடு அதனைத் தொடர்ந்தும் தடுத்து வைத்தல் அல்லது வெளியிடுதல் தொடர்பான நியாயம் பற்றிய மீளாய்வொன்றை மேற்கொள்ளலாம் என்பதற்கான ஏற்பாட்டினை இவ்வறிக்கை விளக்குகிறது. மேலும், குழுவின் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மற்றும் தோதானவிடத்து, பின்னர் பிரயோகிப்பது தொடர்பான கண்டிப்பான இரகசியத்தன்மை பற்றிய உறுதிப்பாட்டினை குழு வழங்கலாம் என்பதை சட்ட விவகாரங்கள் அலுவலகங்கள் உறுதிப்படுத்தியது. இதன் விளைவாக குழுவின் பொருள் செறிந்த பதிவுகள் கிட்டத்தட்ட முழுமையாக 'கண்டிப்பான இரகசியத் தன்மை' எனவும், சில விடயங்கள் தொடர்பாக எதிர்கால பாவனை பற்றிய மேலதிகப் பாதுகாப்புடனும் வகைப்படுத்தப்படும்.

### ii மோதலுக்கான வரலாற்று ரீதியிலான மற்றும் அரசியல் பின்னணி

24) கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள் நடைபெற்று வந்த மூர்க்கத்தமான மோதலின் பின்னர் 2009 மே 19ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் (எல்.ரி.ரி.ஈ) மீதான அதன் வெற்றியை இலங்கை அரசு பிரகடனப்படுத்தி யது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் பற்றிய ஏராளமான குற்றசாட்டுக்கள் விடுக்கப்பட்டதோடு, அவை பற்றி செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவது குழுவுக்குப் பொறுப்பு சாட்டப்பட்டது. இலங்கையின் சிக்கலான மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட அரசியல் வரலாற்றினை கூறுபடுத்தி ஆராய்வது குழுவின் பணியல்ல. இருந்த போதிலும், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களை தோதான அரசியல் மற்றும் சமூகப் பின்னணியின் கண்ணோட்டத்தில் ஆராய்வதற்காக, மோதலின் வரலாற்றின் சில அம்சங்களை கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என குழு கண்டது.

25) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு இந்தியாவின் தென் கிழக்குக் கரைக்கு 18 மைல்களுக்கு அப்பால் இந்திய சமுத்திரத்தில் உள்ள தீவு தேசமாகும். இலங்கை 21 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இனத்துவ, மொழிவாரியான அத்துடன் சமயம் தொடர்பான பன்முகத் தன்மையுடையதொரு நாடு என்பதோடு, அதில் 74 சதவீதத்தினர் அதிகமாக பௌத்தர்களை உள்ளடக்கிய சிங்கள மொழி பேசும் சிங்களவர்களாகவும், 18 சதவீதத்தினர் அநேகமாக இந்துக்களான தமிழ் மொழியைப் பேசும் தமிழர்களாகவும் (இலங்கைத் தமிழர் மற்றும் இந்திய தமிழர் என முறையே 13 சதவீதத்தையும் உள்ளடக்கியதாக) மற்றும் 7 சதவீதத்தினர் இஸ்லாம் மதத்தை அனுஷ்டிக்கும் பொதுவாகத் தமிழ் மொழியைப் பேசும் சோனகர்கள் மற்றும் மலேயர்களைக் கொண்ட முஸ்லிம்களாகவும் மற்றும் ஒரு சதவீதத்தினர் ஏனையவர்களுள் பறங்கியர் மற்றும் ஆதிவாசிகளைக் கொண்ட சிறிய இனத்துவச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். சில சமூகங்களில் சிறிய வீதத்தினராக கிறிஸ்தவர்கள் உள்ளனர்.

26) முதலில் போர்த்துக்கேயர் அடுத்து ஒல்லாந்தர் மற்றும் இறுதியாக பிரித்தானியர்களின் 4 நூற்றாண்டுகள் தொடர்ந்த காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர், பிரித்தானியாவிடம் இருந்து 1948இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்துக்குப் பின்னர் பல்வேறு இனத்துவச் சமூகங்களை உள்ளடக்கியதாகச் சிங்களவர் ஆதிக்கம் செலுத்தும் சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட அரசு இலங்கையை ஆட்சி செய்து வந்தது. சகலருக்குமான வாக்குரிமை, பல்கட்சி அமைப்பு மற்றும் துடிப்பானதொரு தேர்தல் செயற்பாடு, அத்துடன் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு சாராருக்குமான உயர்நிலையிலான எழுத்தறிவு, குறைந்த சிசு மரண வீதம் போன்ற முக்கியமான மனித அபிவிருத்திச் சித்திகள் ஆகியவற்றை உள்ளிட்ட உறுதியான ஜனநாயகச் சுட்டிகளை இலங்கையின் நீண்ட கால யுத்தம் பற்றிய வரலாற்றுடன் தெளிவாக ஒப்பிடக் கூடியதாகவுள்ளது.

(11)

### அ. இனத்துவமும் அரசியலும்

27) அரசியல் மற்றும் இனத்துவக் கோடுகளுடனான ஆழமானதொரு விரிசலின் வன்முறையான பிரதிபலிப்பாக இலங்கையின் ஆயுதந் தாங்கிய மோதல் இருந்துள்ளது.

### 1. இனத்துவம் சார்ந்த தேசியவாதத்தின் தோற்றம்

28) சுதந்திரத்தின் பின், அரசியல் பிரமுகர்கள் குறுகிய கால அரசியல் இலாபங்களுக்கு முன்னுரிமை வழங்கி, நீண்ட கால கொள்கைகளுக்கு மேலாக சமுதாயம் சார்ந்த அத்துடன் இனத்துவ வாத மன உணர்ச்சிகளை கவர்வதற்கான ஒரு போக்கினைக் கொண்டிருந்தனர். நீண்ட கால கொள்கைகள் பிரஜைகளின் பல் கலாசார இயல்பினை போதிய அளவு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சகலரையும் உள்ளிட்டதொரு நாட்டைக் கட்டியெழுப்பியிருக்கலாம். இத்தகைய செயற்பாடு மற்றும் பிரிவுகள் காரணமாக ஒருமைப்படுத்தும் தேசிய தனித்தன்மை பெரிதும் பாதிக்கப்பட்டது. அதே வேளையில், சிங்கள பௌத்த தேசிய வாதம் செயற்பட ஆரம்பித்தது. பௌத்த மதத்தின் பரிசுத்த இல்லமாகிய இலங்கையின் பாதுப்பாளர்கள் என்பதாக சிங்களவர்களுக்கு தனிச்சிறப்பினைக் கொண்டதொரு தன்மையை வலியுத்தியது. இக்காரணிகள் இலங்கையில் நாடு, அரசாட்சி மற்றும் இனங்களுடையிலான தொடர்புகளைப் பாழாக்கி நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தியது.

29) 1970 ஆம் ஆண்டுகளில் ஒரு புறம் வகுப்பு அடிப்படையிலான ஓரங்கட்டலால் விரக்தியடைந்த தெற்கின் இளம் சிங்களவர்கள் மற்றும் இனத்துவ அடிப்படையிலான ஓரங்கட்டலால் விரக்தியடைந்த வடக்கைச் சேர்ந்த இளம் தமிழர்கள் மறு பக்கம் உருவாகி வரும் நாடு சம்பந்தப்பட்ட வகையில் வெவ்வேறு விதமான எதிர்ச்செயலில் ஈடுபட்டு. தீவிரவாதத்தின் பக்கம் திரும்பி அரசுக்கு எதிரான ஆயுதந்தாங்கிய புரட்சிகளில் ஈடுபட்டனர். அரசு இவ்வியக்கங்களை தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாகக் கணித்து, அடிப்படையான அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதை விடுத்து, அரச அதிகாரத்துக்கு எதிரான சவால்களான காணமல்போதல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட அடக்குமுறையினைக் கொண்டு எதிர்கொண்டது.

30) வேறுபாடு காட்டும் அரசு கொள்கைகள் மற்றும் 1950 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான கலவரம் ஆகியவற்றைத் தொடர்ந்து, காந்தியின் அகிம்சா வழியைப் பின்பற்றி ஆரம்பித்த உரிமைகளுக்கான தமிழ் போராட்டம் தனி நாடு என்ற கோரிக்கையை மையமாகக் கொண்டு மேலும் மேலும் தமிழ் தீவிரவாதம் மற்றும் ஆயுதம் ஏந்திய புரட்சியைத் தோற்றுவித்தது. ஒத்துப்போவதில் இருந்து பிரிவினை வாதத்துக்கு கலந்துரையாடல் மாறிய போது. 1970 ஆம் ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பல தமிழ் ஆரசியல் தீவிரவாதக் குழுக்கள் தோன்றின. ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்கள் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல்களுக்குச் சமாந்தரமாக சிங்கள தேசியவாதிகள் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட கடுமையான அடக்கு முறை தீவிரமடைந்தது. 1977, 1979, 1981 மற்றும் 1983 இல் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை அரசில் இருந்த சில சக்திகள் உற்சாகப்படுத்தின அல்லது சில சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு அனுசாரணை வழங்கின. இந்த வன்முறை 1983 இல் ஆகப் பரவலாக நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களின் உச்ச நிலையை அடைந்தது. அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் சிங்களக் கும்பல்கள் போக்குவரத்துச் செய்யப்பட்டதோடு தமிழர்களை இனங்கண்டு அவர்களை இலக்குப் பார்ப்பதற்காக உத்தியோக பூர்வமான வாக்காளர் பதிவேடுகள் பிரயோகிக்கப்பட்டன. ஆயிரக்கானோர் உயிரிழந்ததோடு பெரிய அளவில் இடம் பெயர்வு தமிழர்களின் சொத்துக்களுக்கான சேதம் அத்துடன் தமிழர்களின் புலம் பெயர்வு நேர்ந்தது. வடக்கு மாகாணமான யாழ்ப்பாணத்தில் 13 இலங்கை இராணுவ வீரர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கொலை செய்தற்குப் பதிலாக இத்தாக்குதல்கள் நடைபெற்றதாக அரசு உறுதியாகக் கூறியது. இவ்வாறாக, 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இரு தரப்பினருக்கிடையிலான வன்செயல்கள் நேர்ந்த போதிலும், அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் ஆரம்பம் 1983 எனப் பொதுவாகக் கருதப்படுகிறது.

### 2. தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ)

31) 1983 ஆம் ஆண்டின் இனக் கலவரங்கள் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை மும்முரமடைந்த போது தமிழ் சமூகமும் மேலும் தீவிரவாதத்தில் ஆழ்ந்து, தமிழ் நாட் டில் பயிற்சி மற்றும் அமைப்புக்கு ஏது வான சூழலைப் பிரயோசனப் படுத்திய தோடு, தீவிரவாதக் குழுக்களின் அணிகளும் அதிகரித்தன.

தமிழ் விடுதலை இயக்கமாக ஆரம்பித்த தமிழீழ விடுதலைப் புலிகள் நாளடைவில் மிகவும் ஒழுங்கு சார்ந்த மற்றும் தமிழ் தீவிரவாதக் குழுக்களிடையே மிகவும் தேசியவாதத்தைக் கொண்டதகவும் மாறி 1980 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் பிரிவினைவாத நிகழ்ச்சிநிரலை அரவணைக்கும் தலையாய சக்தியாக தலைதூக்கியது. இக்கால கட்டத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ் குழுக்களை பணிய வைப்பதற்காக கூடிய அளவிலான வன்முறைப் போக்கினைக் கடைப்பிடித்ததோடு, தாமாகவே நியமிக்கப்பட்ட தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாம் என்பதை அவர்கள் வலியுறுத்தினர். அதன் புதிரான தலைவர், வேலுப்பிள்ளை பிரபாகரன், முழுமையான விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் அதிகாரத்துடன் கோரியதோடு பக்தி சார்ந்ததொரு ஆதரவாளர்களை உருவாக்கினார்.

தமக்குள்ளே எந்தவொரு கருத்து வேறுபாட்டையும் சகிக்காத தோடு, அரசுடன் செயற்படுவோர் அல் லது ஒத்துழைப்போர் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டு அநேகமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டார்கள். தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறை தமிழ் சமுதாயத்தினுள் ஆழ்ந்த பயத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டத்திலான பாடசாலைகளின் பெருவிளையாட்டு இன்று ஆரம்பம்

## யாழ்.சென்ஜோன்ஸ் மைதானத்தில்

வலி.வடக்கு,மே2

யாழ்.மாவட்ட கல்வி வலய பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் முதல் போட்டியாக ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலைகளும் -

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தை சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி , யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி அணிகளும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

இப்போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

(ஐ-86)

# வலிகாமம் கல்வி வலயத்தில் நியமப் புள்ளி அடிப்படையில் தெரிவு

வலி.வடக்கு,மே2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள தடகளப் போட்டிகளில் முதல் தடவையாக சர்வதேச நியமப் புள்ளிகளின் அடிப்படையில் வீர, வீராங்கனைகள் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

இதுவரை காலமும் சிறந்த வீர, வீராங்கனைகள் தாம் கலந்து கொள்ளும் தடகளப் போட்டிகள் மூன்றில் பெறும் உயர்புள்ளிகளின் அடிப்படையில் வயது ரீதியாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

கடந்தாண்டுகளில் 11,13, 15,17,19,21 வயது ஆண்கள், பெண்களுக்கென தலா ஆறு பேர் வீதம் பன்னிரண்டு வீர, வீராங்கனைகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டதும் இணைச் சம்பியன் வழங்கும் நிலையும் காணப்பட்டது.

இந்தாண்டு முதல் சர்வதேச புள்ளி நியமங்களின் அடிப்படையில் வீர, வீராங்கனைகள் தடகளப் போட்டிக்கு தனியாகவும் களப் போட்டிக்கு தனியாகவும் தெரிவுசெய்வதனால் இந்தாண்டு தெரிவுசெய்யப்படும் வீர, வீராங்கனைகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துக் காணப்படுவதனாகவும் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு முதல் வலிகாமம் வலய மட்டத்தில் நடைபெறும் தடகளப்போட்டிகளுக்கான சுற்றுக் கேடயங்களை சுன்னாகம் இலங்கை வங்கி கிளை வழங்கி வந்துள்ளது.

இந்தாண்டு 24 சிறந்த வீர வீராங்கனைகளை தெரிவு செய்து வெற்றிக் கேடயங்கள் வழங்குவதற்கான கிண்ணங்களையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

(ஐ-86)

# ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்-02.05.2011



### ஆலய வரலாறு

தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்த சோழராஜாகுமாரியாகிய மாருத்தப் புரவீகவல்லி குதிரைமுகம் நீங்கி, சாப விமோசனம் பெற்று மாவிட்டபுரத்தில் அரசாட்சி செய்து வரும் நாளில் அவரோடு தென்னிந்தியாவில் சீர்காழியில் இருந்து வந்த அவர்களின் குடிமக்களாகிய சலவைத்தொழிலாளர்கள் தமது சலவைத் தொழிலை இடையூறு இன்றி மேற்கொள்ள உகந்த இடம் தருமாறு அவரிடம் விணணப்பித்தனர். அதற்கு செவிசாய்த்த பட்டத்துராணி தனது பட்டத்து யானைக்கு முன்னே துணி விரித்து யானையைக் கொண்டு செல்லும் படியும், யானையின் கால்களில் எந்த இடத்தில் மண் ஒட்டவில்லையோ, அந்த இடம் உங்களுக்கு உகர்ந்த இடம் ஆகும். அதனை மானியமாக வழங்குவோம் என்றும் கூறினார்.

அதன் பிரகாரம் பட்டத்து யானை எல்லா இடங்களையும் தாண்டி இவ்வூரில் வரும்போது அதன் கால்களில் மண் ஒட்டவில்லை. அதனால் இந்த ஊரை சலவைத் தொழிலாளர்களுக்கு மானியமாக பட்டத்துராணி வழங்கியதாகவும் அறிகின்றோம். ஆனையின் கால்களில் மண் ஒட்டாத காரணத்தினால் ஆனை ஒட்டாத மண் நாளடைவில் மருவி 'ஆனைக்கோட்டை' என்று வந்தது என்று கூறுவர். இதனைவிட தற்போதும், இவ்வூர் குடிமக்களே மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குத் தொண்டு புரிந்து வருவதும் இக் கூற்றை உறுதிப்படுத்துவதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது. இவ்வாறு அங்கிருந்து வந்து தொழில் செய்து வரும்போது கடலும் கடல் சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய நெய்தல், மருதம் என்பவற்றின் கரையேயுள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்து விநாயகப் பெருமானை அதில் அமர்த்தி வழிபட்டு வந்ததாகவும் கரையில் அமைந்த பிரான் ஆகையால் கரைப்பிரான் என்று பெயரிட்டும் அடியவர்கள் விநாயகப் பெருமானை விரும்பி வழிபட்டு வருகின்றனர்.

முதலாவது ஆவணித் திருவோணத்தில் 1994 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவரது திருவருளால் 1995ஆம் ஆண்டு ஆதி விநாயகப் பெருமானுக்கு அழகான சித்திரத் தேர் அமைத்து தொடர்ந்து சித்திரை சுவாதி நட்சத்திரத்தில் வரும் முதல் நாள் தொடங்கி 14ஆம் நாள் தேர்த் திருவிழாவும், 15ஆம் நாள் தீர்த்த உற்சவமும் நடைபெற்றுவருகின்றன.

*இவ்வருடம் சித்திரைச் சுவாதி நட்சத்திரத்தில் (02.05.2011) இன்று.திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எம் பெருமான் சித்திரத் தேரில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.*

சோ.சிவகுமாரக்குருக்கள், தேவஸ்தானக்குரு.



### நல்லை ஆதின முதல்வரின் ஆசிச் செய்தி



இன்று கரைப்பிரரன் ஆதி விநாயகப்பெருமானுக்குத் தேர்த் திருவிழா. வினை தீர்க்கும் விநாயகப் பெருமான், வழிபடும் அடியார்களின் துயர் போக்கிட தேரேறி வந்து அருள்மாரி பொழிகின்றார். வருடாந்த மஹோற்சவத்தில் வேதாகம முறையில் அழித் தலைக் குறிக்கின்ற இந்த ரதோற்சவம் மிக விசேடமானது.

கரைப்பிரான் வாழ் மக்கள் அனைவரும் பூர்வ ஜென்மப் புண்ணியஞ் செய்தவர்களாவர். அவர்களுக்கு அருள்புரியும் நோக்கில் ஆதி விநாயகர் இங்கே எழுந்தருளி வீற்றிருக்கின்றார். இன்று நடை பெறும் தேர்த்திருவிழாவில் பங்கேற்கும் அடியார்களுக்கும் மற்றும் ஆலய நிர்வாகத்திலுள்ளவர்களுக்கும் அன்பர்களுக்கும் கடுவினை போக்கும் ஆதி விநாயகப் பெருமான் சகல நலன்களையும் அள்ளி வழங்கித் திருவருள் புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழத்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை ஆதீனம்.

### துயரங்கள் நீங்கிட, ஊர்கூடி வடம்பிடித்து தேர் இழுப்போம்



வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதம், கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல் ஆகிய இடங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதும் புராதன வரலாற்றுப் பெருமை வாய்ந்ததுமான கடற்கரையிலே வீற்றிருந்து அருளாட்சி செய்வதினால் "கரைப் பிரான்" என்று காரணப்பெயர் கொண்டு விளங்குகின்ற ஆனையூர் மத்தி மக்களின் குல தெய்வமாக விளங்கிவருகின்றவரும் தனக்கு மேலே ஒரு தலைவன் இல்லாதவனுமாகிய "விநாயகப் பெருமானுக்கு" இன்று ஆனந்தத் தேர்த்திருவிழா. ஆரம்ப காலத்தில் சிறு ஆலயமாக விளங்கிய இந்தக் கோயில் அடியவர்களின் அயராத ஒத்துழைப்பு, விடா முயற்சி, தளராத பக்தி என் பவற்றின் காரணத்தினால் இன்று சமய, சமூக சேவைகளை ஆற்று கின்ற ஆலயமாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட விநாயகப் பெரு மானுக்கு எல்லோரது முயற்சியின் காரணத்தினால் ஏறத்தாழ ஒரு தசாப்த காலத்தின் முன் அன்பர்கள், அடியவர்கள் யாவராலும் உருவாக்கப்பட்ட அழகிய சித்திரத்தேரில் பஞ்சமுக விநாயகப் பெருமானை அமர்த்தி "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற வாக்கு பொய்யாத வண்ணம் ஊர் மக்கள் அனைவரும் கூடி வடம் பிடித்து, பெருமானின் தேரை இழுத்து தமது துன்ப துயரங்களை நீக்கி அருள்புரிய வேண்டு மென்று பிரார்த்திக்கின்றனர்.

எனவே எல்லாம் வல்ல பஞ்சமுக விநாயகப்பெருமான் அடியவர்கள் அனைவரினதும் துன்ப, துயரங்களை நீக்கவும், நாட்டில் நிரந்தர சாந்தியும் சமாதானமும் ஏற்படவும் அருள்புரிய வேண்டும். அருள் புரிவார் என்ற நம்பிக்கையுடன் கரம் குவித்து நிறைவு செய்கின் றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ சோம.சிவகுமாரக்குருக்கள்.

### ஆதி விநாயகரே தேரில் ஆரோகணித்து வருக..!



உலகமெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் கரைப்பிராணிலே ஆதி விநாயகர் என்ற திருநாமத்துடன் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். வழிபடும் அடியவர்களின் அல்லல் போக்கித் துன்பம் நீக்கித் திருவருள் புரிகின்ற ஸ்ரீ விநாயகப் பெருமான் இன்று தேரேறி ஆரோகணித்து அருள் பாலிக்கின்றார். இன்று தேர் மீது பவனி வரும் ஆதி விநாயகப் பெருமான் தம்மை நாடித் தேடி ஓடிவந்து வழிபாடியற்றுகின்ற அடியவர் பெருமக்களுக்கு சகல வினைகளையும் நீக்கித் தண்ணருள் பொழிந்து நல்வாழ்வருள வேண்டுமென்று ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

இறை தொண்டர் இராசையா ஸ்ரீதரன்.


**விழா சிறப்புற வாழ்த்துவோர்...**

**ஜெகன் பிறிண்டேர்ஸ்**
கணினி பிரதியாக்கம் மற்றும் அனைத்து அச்சு வேலைகள் யாவும் குறித்த தவணையில் செய்து தரப்படும்.
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
T.P: 077 1146326

கணினி பிரதியாக்கம் மற்றும் அனைத்து அச்சு வேலைகளும் செய்வதற்கு நாட வேண்டிய ஒரே இடம்.
**றூபன் பிறிண்டேர்ஸ்**
**றூபன் புத்தகசாலை**
பாடசாலை உபகரணங்கள் காகிதாதிகள் போட்டோ பிரதி யாவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர் ஆ.சி.சிவரூபன்.
ஆனைக்கோட்டைச் சந்தி , மானிப்பாய் வீதி
ஆனைக்கோட்டை.

**OXFORD TRADERS**
Delears in: Electrical Goods, Electric Water Pumbs & Fitting, Stationeries & Fancy Goods.
G.Balakrishnan (Proprietor)
Anaicoddai Junction.
Anaicoddai.
T.P: 021-2222862, 0776122454.

**சாம்சன்** கட்டட உபகரணங்கள் விற்பனையாளர்கள்
Delears in Building Meterials
கொங்கிறீற்கற்கள், சல்லிக்கற்கள், மணல் வகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
0212255090, 0776630390

**தரன் மோட்டோர்ஸ்**
பொடி கிளீனிங், சீற் கிளீனிங் வேலைகள் யாவும் சிறந்த முறையில் குறித்த நேரத்துக்குச் செய்து தரப்படும்.
Jaffna Road, Manipay. Tel: 0213735352, 0773564361.

சகல விதமான மோபைபில்களுக்கான றிலோட், உதிரிப்பாகங்கள், மற்றும் அழகுசாதனப் பொருள்களும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**BEST ONE COMMUNICATION & FANCY HOUSE**
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**றொபின் சன் மோட்டார் சைக்கிள் வேக்ஸ்**
சகலவிதமான மோட்டார் சைக்கிள் வேக்ஸ்
சகலவிதமான மோட்டார் சைக்கிள் திருத்த வேலைகளும், பெயின்ரிங் வேலைகளும் ... செய்து தரப்படும்.
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**பிடாரி களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
இல.8, வராகி கோயில் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**சசி இரும்பகம்**
சகல விதமான பெயின்ட் வகைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**மேதிகா நகைப் பூங்கா**
22 கரற் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை சந்தி, ஆனைக்கோட்டை.

**S.Y.களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
கராச்சடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**R.S. ரயர் வேக்ஸ்**
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**S.R. அலுமினிய பிற்றிங், படமாடம் & ஆட்டோ சேவிஸ்**
சகல ஓடர்களும் தகுந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
Prop. S.Regan Pho. No:0777570516
ஆனைக்கோட்டை சந்தி, ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு தர்ம சங்கடத்தை....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படும் செயலுக்கு எதிராக எமது ஒருமைப்பாட்டை உலகுக்கு காட்டுவதாகவும் அமைய வேண்டும்.

எமது பலத்தைக் காட்டுவதற்கான தருணம் வந்துவிட்டது, தொழிலாளர் ஒற்றுமையைக் காட்டுவதாக மட்டும் இது இருக்காது. எமது நாட்டுக்கு எதிராக அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவதாகவும் இருக்க வேண்டும். சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர் மத்தியில் ஜனாதிபதி ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

**வெளிநாடுகளில் செய்தி பரவியது**

ஐ.நா நிபுணர் குழுவுக்கு எதிராகப் பேரணிகள் நடத்தும்படி ஜனாதிபதி விடுத்த அறைகூவல் பற்றிய செய்திகள் உலக செய்தி தாபனங்களினால் வெளி உலக நாடுகளிலும் விரிவாக வெளியிடப் பட்டன.

ஏஜென்ஸ் பிரான்ஸ் பிரஸ் வெளியிட்ட செய்தியில், இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா அறிக்கைக்கு எதிராகப் பேரணிகள் நடத்தும்படி அந்நாட்டு ஜனாதிபதி அறை கூவல் விடுத்துள்ளார்.

மே தின பேரணியானது ஐ.நாவுக்கு எதிரான எமது பலத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இது வரை காலமும் எமது பலத்தை நாம் காட்டாமல் இருந்து வந்துள்ளோம். ஆனால் மே தினத்தில் எமது பலத்தை நாம் காட்ட வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார் என்று அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பி.ரி.ஐ எனும் இந்திய செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் மே தின பேரணியை தமது பலத்தைக் காட்டும் பேரணிகளாக மாற்றி வருகிறார் இலங்கை ஜனாதிபதி என்று தெரிவித்துள்ளது.

முன்னாள் வெளியுறவு அமைச்சரும் ஐ.தே.க தகவல் துறை பேச்சாளருமான மங்கள சமரவீர வெளியுறவு அமைச்சரின் முரண்பாடான அறிக்கைகள் குறித்து கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அமைச்சரின் எந்தக் கூற்றினை நம்புவது என்று அறிய முடியாமல் வெளிநாட்டு அரசுகள் தடுமாறி நிற்கின்றன என்றார் அவர்.

முரண்பாடுகள் தான் அரசின் அடையாளம் என்றாகி விட்டது. இவர்கள் தங்களுக்குமட்டுமல்ல நாட்டுக்கும் விசுவாசமில்லாதவர்கள். எல்லாம் ஏமாற்று. இந்தக் கடைசி நேரத்திலாவது அவர்கள் மாற வேண்டும். ஜி.எல். பீரிஸ் கூறுகிறார் எதிர்ப்பு ஆர்பாட்டம் இருக்காது என்று. ஆனால் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் மே தினத்துக்கு பான் கீ மூனின் கொடும்பாவிகளுடன் வரும்படி கோரப்பட்டுள்ளது. ஒன்றில் வெளிநாட்டமைச்சருக்கு விவரம் தெரிவிக்கப்படவில்லை அல்லது ஜனாதிபதியை தொடர்ந்து தவறாக வழிநடத்துகிறார் அவர் என்றார் சமர வீரர்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ மூனுக்கு வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எழுதிய கடிதம் ஒன்று இதுவரை வெளியிடப்படாமால் இருந்து வந்துள்ளது. இக்கடிதம் நிபுணர் குழுவின் அறிக்கையில் பின் இணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் ஜனாதிபதியை விட்டுக் கொடுத்து இணக்கப்பாட்டுக்கு வரும்படியாக நிர்ப்பந்தித்துள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் ஆத்திரம் கொண்டிருக் கிறார்கள்.

வெளிநாட்டமைச்சர் நிபுணர் குழுவின் நோக்கங்களை முற்று முழுதாக தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் என்று கருதுகிறார்கள் அவர்கள்.

உங்கள் அணுகுதலுக்கும் (நிபுணர் குழு ஊடாக) கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக் குழு பொறி முறைக்குமிடையில் தொடர்பு நிலையொன்று இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புகிறார் என்ப தாக பீரிஸ் அந்தக் கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார். இதன் மூலம் நிபுணர் குழு தனது பணியை முடித்துக்கொண்டதன்பின்இயல்பாக நல்லிணக்க ஆணைக் குழு அதனை ஆராய்வதற்கு அனுமதிக்கப்பட வேண் டும் என்று எதிர்பார்த்திருக்கின்றார் அமைச்சர்.

இங்கே தான் பெரிய தவறு நிகழ்த்தப்பட்டு விட்டது. இலங்கை குழுவினர்நிபுணர்குழுவை சந்தித்ததன் மூலம் நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டு விட்டது. இந்தச் சந்திப்பு இரகசியமாக நடந்துபின்னர்வெளிப் படையாயிற்று.


நல்லிணக்கக்குழுவுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்கான ஆணை ஏதுவும் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை வெளியுறவு அமைச்சுடன் எதுவிதத் தொடர்புமின்றி சுதந்திரமாக இலங்கை பற்றிய அறிக்கையை அதுபான்கீமூனிடம் கையளித்தது.

நிபுணர் குழுவானதுஇணக்கக்குழுவின் ஓர் இணைப்பு என வெளியுறவு அமைச்சரின் தவறானஎண்ணம் அரசு திருத்தியுடன்அமைதியாக இருப்பதற்கு வழி வகுத்துவிட்டது என்கிறார்கள் அவர்கள். (ப)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 06 - 1952

மறைவு 24 - 04 - 2009



### அமரர் கார்த்திகேசு நவரெத்தினம்

(மண்டைதீவு 1ஆம் வட்டாரம்)

திதி- அமாவாசை

மறைந்ததோ ஈராண்டுகள்
மறக்கவும் முடியுமோ அந்தக் கொடிய நாளை
நினைக்காத நாள் இல்லையப்பா உங்களை
எங்களை விட்டு எங்கு சென்றீர்கள் தந்தையே!

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (3707) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா சொர்ணலிங்கம் (கந்தசாமி)



புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்த வருமாகிய செல்லையா சொர்ணலிங்கம் (கந்தசாமி) 30-4-2011 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் செல்லையா-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை- பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி (கனடா), கலைவதனி(கனடா), சுபாகரன் (கனடா), கல்பனா (இருபாலை), சசீஸ்கரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகராஜா(கனடா), உதயகுமார்(கனடா), ஜெனி(கனடா), திருவருட்செல்வன் (கண்ணன்-இருபாலை), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் கலைமகள்(வவுனியா), வில்வரெத்தினம்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி(கொழும்பு) காலஞ்சென்ற நடராஜா மற்றும் நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வர்களான தருமராசா, தர்மலிங்கம், சோமசுந்தரம் மற்றும்ஜெகதீஸ்வரி(கிளிநொச்சி), தங்கவடிவேலு (பருத்தித்துறை), பேரின்பநாதன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராசமணி, கனகராஜா மற்றும் மங்கையர்க்கரசி(கனடா), மரகதாம்பாள் (கனடா), புஸ்பவதி(பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சர்மிதா,லக்சனா, அர்சன்(கனடா), சகிர்தா,ஆரங்கன், அச்சிதா(கனடா), ஆதீஸ்(கனடா), பிரவின், தர்சிகா, மருதன்(இருபாலை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழம்றோட்,
இருபாலை (3744)

தகவல்: திருவருட்செல்வன் (கண்ணன்-மருமகன்)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
*A/L(2013) கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன்
GIT, Gen. Eng.
Biology
R.குகானந்தன் B.Sc
*O/L REPEAT
*Gr. 1 முதல் O/L வரை
*Eng. Med. 6 to 11

## 1ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 16 ★ 04 ★ 1916

மறைவு 14 ★ 04 ★ 2010



### திருமதி அம்பிகை முருகேசு

திதி- அமாவாசை-சித்திரை (02.05.2011 திங்கட்கிழமை)

ஆண்டு ஒன்று கடந்திட்ட போதிலும்
உங்கள் நீங்கா நினைவுகளுடன்
வாழும் ...

(சி/578203)

V.H லேன்,
இருபாலை, கோப்பாய் தெற்கு

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## துயர் பகிர்கின்றோம்



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக உறுப்பினரும்
முன்னாள் ஆளுநர் சபையின் பிரதி மாவட்ட
பொருளாளருமான லயன் C.சுந்தரேஸ்வரன்
அவர்களின் அன்புச் சகோதரன்

### செல்லப்பா மகேஸ்வரன் (கனடா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துயரில் நாமும் பங்கு
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழக உறுப்பினர்கள்,
யாழ். மாவட்டம்.

(சி/578136)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 27.08.1939

ஆண்டவன் அடியில் 02.04.2011



### கணபதிப்பிள்ளை தவமணி

நல்லன செய்து நின்றாய் நாடுறை விடுதலைக்காய்
வல்லதும் செய்தாயந்த வல்லமை எவர்க்கு உண்டாம்
சொல்லில்லை உனது அன்பின் சுவையுரைத் தழுதல் நீங்க
இல்லையே வழிகள் எம்மை இருட்டிலே விட்டெங் குற்றாய்
தாயெனும் இனிய தெய்வம் தமிழர்தம் உரிமை செல்வம்
ஆயநற் பொருளாய் வாழ்ந்தெம் அகத்தினில் நிறைந்தாய் அம்மா
நோயெனக் கேட்ட அந்த நொடிப் பொழுதருகு வந்தும்
தாயுந்தன் குரலைக் கேட்கும் தகுதியை இழந்தோம், நொந்தோம்
தங்கச்சி என்பார் சுற்றம் தவமணி எமக்கோ தெய்வம்
எங்குற்றாய் என்று தேடும் எல்லவர் மனத்தும் துன்பம்
பொங்குகண் நீரால் தேய்ந்தோம் பொறுமையே தாயே அம்மா
அங்கு நாம் வருவோம் ஓர்நாள் அதுவரை ஆறும் நெஞ்சம்
எங்களுக்கில்லையே அம்மா ஏக்கமே எங்கட் காச்சோ
திங்களாய் தீபமாகித் திசையெலாம் நிறைவாய் என்றே
அஞ்சலிக்கின்றோம் நீயே ஆறுதல் தருவாய் அம்மா.

எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மரணச் செய்தி கேட்டவுடன் நேரில் வந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்து இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் தங்கள் அனுதாபத்தை பகிர்ந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தினரின் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 02.04.2011 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 02.05.2011 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்குத் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அரசடி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (சி/578141) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழனாக இருந்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் தொடர்ந்தும் தீவறிழைத்து வருகிறார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது முள்ளி வாய்க்கால் நோக்கி 4 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் சென்றனர். இதனை அப்போது அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார் உறுதிப்படுத்தியிருந்தார். அத்துடன் உலக உணவுத் திட்டத்தில் மூன்று லட்சத்து 20 ஆயிரம் மக்கள் பதியப்பட்டி ருந்தனர்.

இவ்வாறு ஆதார ரீதியாக நிரூபிக்கப்பட்ட நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசுடன் இணைந்து 70 ஆயிரம் மக்கள் மட்டுமே அங்கு உள்ளர் என்று எண்ணிக்கையைக் குறைத்துக் கூறினார். அது தொடர்பாக தொடர்ச்சியாகக் கருத்துக்களை வெளியிட்ட வண்ணம் இருந்தார். இது டக்ளஸ் தமிழ் மக்களுக்குச் செய்த முதலாவது தவறு ஆகும்.

எமது மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டும், கலாசாரம் சிதைக்கப்பட்டும், சிங்கள மயமாக்கப்படும் நிலையில் தமிழனாக உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு உண்மையை மூடி மறைத்துக் கூறுவது எவ்வளவு பெரிய குற்றம்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்ததை ஐ.நாவின் அறிக்கை தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் ஒன்றுமே இறுதிப் போரில் இடம்பெறவில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டிருப்பது இரண்டாவது மாபெரும் தவறு ஆகும்.

தமிழ் மக்களுக்கு ஏற்ற அரசியல் தீர்வு காண்பதற்காக அரச தரப்பு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தியது. அதன்போது 13 ஆவது அரசியல் திருத்தத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தியிருக்கிறார். இது அவரது மூன்றாவது மிகப்பெரிய தவறு ஆகும்.

13ஆவது அரசியல் திருத்தம் தமிழ் மக்களுக்கென எந்த அதிகாரமும் இல்லாத வெறும் 'எலும்புக் கூடு' போன்றது ஆகும்.

தமிழ்மக்களது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்காது இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என இந்தியத் தலைவர்கள் அவ்வப்போது கூறியிருக்கின்றனர்.

இந்த நிலையில் டக்ளஸ் தமிழ் மக்களது அரசியல் தீர்வு குறித்து அவசரப்பட்டு இப்படிக் கூறுவது ஏன்?

அரசுடனும் ஏனைய அமைச்சர்களுடனும் இணைந்து சர்வதேசத்துக்கு இவ்வாறு உண்மைகளை மறைத்து டக்ளஸ் தேவானந்தா நடந்துகொள்வதைத் தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். (ஒ-14-4)

## மரண அறிவித்தல்கள்

### பரம்சோதி தில்லைநாதன்



(முன்னாள் முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி - மன்னார்)

வண்ணார்பண்ணை, ஐயனார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சிவன்கோயிலடி, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட பரம்சோதி தில்லைநாதன் நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் கண்ணகைஅம்மா தம்பதியரின் மருமகனும் பத்மினியின் அன்புக் கணவரும் தேவநாதனின் (லண்டன்) அன்புச் சகோதரனும் ஆர்த்திகா, அருச்சுனா, அமிர்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிதரன், நவநீதன், லோப்னா ஆகியோரின் அன்பு மாமனும் புவீந்திரன், சசீந்திரன், வசிகா, ரஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் பிறேம லதாவின் மைத்துனரும் கணணின் பெரியப்பாவும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2011) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி,
சித்தன்கேணி. (3750) (34)

தகவல்:
தி.அருச்சுனா (மகன்)

### திருமதி குசலகுமாரி தவராசா



வேலணையைப் பிறப்பிடமாகவும் வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராசா குசலகுமாரி 30.04.2011 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் பூபாலசிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் சின்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் தவராசாவின்(தவ்ம்) அன்பு மனைவியும் ராசன் (U.K), நிமல்(பிரான்ஸ்), விமல் (பிரான்ஸ்) வினோ ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலா, திருப்பதி, சிவா, கர்ணா, கண்ணன், சக்தி, உதயன், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணம், ரூபன், ரகு, செல்வராசா, சொரூபன், தங்கம்மா, றோசா, தேவி, விசி, சகாதேவி, சியா ஆகியோரின் மைத்துனரும் ஜெகன், மதன், கமல், சுதாகர் ஆகியோரின் பெரியம்மாவும் ஜாருசன், கேசிகா, மதி, மகிந்தன், சுபஸ்தலா, சீலன், சுசி, சுதன், சுஜந்தினி ஆகியோரின் சித்தியும் சுதாகர், பிரதீபன், சுகந்தினி, கஜந்தினி, தர்சினி, சுபாசினி ஆகியேரின் மாமியும் கம்சி, தீபனா, சுதன், லக்சி, கிருசி, சர்மி, காவியா, பிரவீனன் ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.05.2011 திங்கட் கிழமை பி.ப 2.00 மணிக்கு இரத்தினசிங்கம் தங்கம்மா (தங்கமணி) இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கள்ளி வீதி,
வட்டுக் கோட்டை (C/578145)

தகவல்: பிள்ளைகள்
மருமகள் (செல்வி)

## உண்மை எதுவென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு, நிபுணர் குழுவின் அறிக்கையையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் ஒரு ராஜதந்திர அணுகுமுறையாக இந்தியா, சீனா, ரஷ்யா நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றது என்று அதன் இணைச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார். அந்த முயற்சிக்கு புலம்பெயர் தமிழர்கள் ஆதரவு வழங்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் நேற்று யாழ். நகரில் இடம் பெற்றது. ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரமுகர்களான சி.வீ.கே.சிவஞானம், க.கௌரிகாந்தன், பேராசிரியர் இரா.சிவ சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய மாவை சேனாதி ராசா, "ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் இலங்கை அரசு மீதும் விடுதலைப் புலிகள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளன. ஆனால், புலிகளைவிட அரசின் குற்றங்களாலேயே பொதுமக்கள் உயிரிழப்புகள் அதிகமாகி உள்ளன என்று அறிக்கை கூறுகிறது. சர்வதேச உடன்படிக்கைகளிலும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களிலும் கையெழுத்திட்டதையும் மீறியே அரசு இந்தக் குற்றங்களைச் செய்துள்ளது" என்றார்.

நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளபடி இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து பதிலளிக்க வேண்டிய கடப்பாடு, கடமை அரசுக்கு உண்டு என்றும் அவர் வலியுறுத்தினார். "பணம் வழங்கி மக்களைத் திரட்டி நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராகக் குரல் கொடுத்தாலும் அறிக்கைக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது" என்றார் மாவை.

இதேவேளை, ஐ.நா. அறிக்கைக்கு எதிராகத் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான ரஷ்யத் தூதர் விளாடிமிர் மிக்கலோவ், எனினும் அந்த அறிக்கையைப் பயன்படுத்தி பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை ஏதாவது கொண்டுவரப்பட்டால் ரஷ்யா வீட்டோவையும் பயன்படுத்தத் தவறாது என்றார்.

இந்த விடயத்தில் சீனாவும் இலங்கைக்கு உறுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளது. இந்தப் பிரச்சினை இலங்கையின் உள்விவகாரம் எனத் தெரிவித்துள்ள அது, வெளிச் சக்திகள் அதில் தலையிடக்கூடாது என்றும் கூறியுள்ளது.

இந்தியா இந்த விடயம் குறித்து இதுவரை எந்தக் கருத்தையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. எனினும் எதிர்க் கட்சிகளிடம் இருந்தும் தமிழகக் கட்சிகளிடம் இருந்தும் இலங் கைக்கு ஒத்துழைக்கக்கூடாது என்ற கடும் அழுத்தம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை, தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா இனியாவது உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். "இந்தியாவை எம் பக்கம் ஈர்க்க வேண்டும். தமிழகம் அதற்கு உதவியாக இருக்கவேண்டும். இந்தியா தமிழர்களுக்கு நீதி கிடைக்க ஆதரவு தெரிவிக்கும் எனில் சர்வதேசமும் அது குறித்து கவனத்தில் கொள்ளும்" என்றார். (உ-4,14)

## சில ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினர். மனிதாபிமானம் என்ற அடிப்படையில் படையினர் மேற்கொண்ட பணிக்கு கிடைத்தது அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தான்.

எதிரிகளுக்கும் கூட மனிதாபிமான ரீதியிலேயே நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டனர். ஐ.நா. அறிக்கையில் தெரிவித்தவாறு போர்க் குற்றங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சமாதான நிலைமை ஐ.நா. அறிக்கையால் பாதிக்கப்படமாட்டாது - என்றார் ஜனாதிபதி. (ஒ-ஐ)

## நிபுணர் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நீர்ப்பாசன அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சின் வாஸ் குணவர்தன ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக உள்ளனர்.(ஒ-சி)

## முன்னாள் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் 11 ஆயிரத்து 600 பேர் அரச படையினரிடம் சரணடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஒ-சி)

## கொழும்பில் மேதினப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளும் ஏற்பாடு செய்த பேரணிகளில், வெளி மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் அழைத்து வரப்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கில் இருந்து வாகனங்களில் அழைத்து வரப்பட்டவர்களும் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்த பேரணியில் ஐ.நாவுக்கு எதிராக ஆக்கிரோஷமான கோஷங்கள் எழுப்பப்பட்டன. சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் தாங்கிச் சென்றனர்.

அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் இடம்பெற்ற பேரணியில் அமெரிக்காவுக்கும் நேட்டோ நாடுகளுக்கும் எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இலங்கை வரலாற்றிலேயே தொழிலாளர்களின் உரிமைக்காகக் கோஷங்கள் எழுப்பாமல் மேதினப் பேரணி நேற்றுத் தான் முதல் தடவையாக இடம்பெற்றது என செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

நன்கு திட்டமிடப்பட்டு பேரணிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஐ.நாவை இலக்கு வைத்தே இந்தப்பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர் என்பதனை அவதானிக்க முடிந்தது. ஆனால் பிரசாரப்படுத்தப்பட்ட அளவில் பேரணிகள் இடம்பெறவில்லை என்று சர்வதேச செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய அரச மேதினப் பேரணியில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கொடும்பாவி தீயிட்டுக் கொளுத்தப்பட்டது என்றும், ஐ.நா நிபுணர் குழு உறுப்பிர்கள் மூவரும் விடுதலைப்புலிகளின் சீருடையுடன் நடமாடுவது போன்று பேரணியில் மூவர் உலா வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செ.பிலோமினம்மா

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செ.பிலோமினம்மா நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வக்குமாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னக்குமார் மற்றும் பிரகாசி, ஜெயக்குமார், ஜீவராசா, வீரன், நேசம், வசந்தி, ஜோன்சன், ஸ்ராலின் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆரதனை பாஷையூர் அந்தோனியார் தேவாலயத்தில் இன்று (02.05.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாஷையூர்.

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி பார்வதிதேவி நாகராசா

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வட்டு.தெற்கு, காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதிதேவி நாகராசா (முல்லைச் சகோதரிகளில் ஒருவர்) நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் நாகராசா (சின்னத்தம்பி) வின் அன்பு மனைவியும் மகராஜன் (விவசாயக்கல்லூரி, வவுனியா), பிரசாந்தன் (யாழ். பல்கலைக்கழகம், 4 ஆம் வருடம்), தயாணந்தன், குகதாசன் (பொறியியல் பீடம், மொறட்டுவ, 2 ஆம் வருடம்), சிவதாசன் (யா/வட்டு. இந்துக் கல்லூரி, கணிதப்பிரிவு-2011) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

காளி கோயிலடி,
வட்டு. தெற்கு. (சி/578146) (34)

தகவல்:
தி.நாகராசா (சின்னத்தம்பி-கணவர்),
பிள்ளைகள்.

### திருமதி நடராசா சிவகாமியம்மா

புத்தூரைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவகாமியம்மாள் நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பி நடராசா அவர்களின் அன்பு மனைவியும் திருமதி கமலாதேவி, திருமதி ஜெயதேவி, காலஞ்சென்ற தில்லைச்சிற்றம்பலம் மற்றும் திருமதி சத்தியதேவி, திருமதி சாரதாதேவி ஆகியோரின் அருமைத்தாயும் திரு. சத்தியபாலர், வைத்திய கலாநிதி சந்திரசேகரா, கலஞ்சென்ற ருக்குமணி, திரு. சிதம்பரநாதன் மற்றும் பேராசிரியர் சிவானந்தமூர்த்தி ஆகியோரின் மாமியும் வைத்தியகலாநிதி கோசலா, கணக்காளர் ஸ்ரீகுகன், வாசுகி, மயூரன், முகுந்தன், கௌரி, சடாச்சரா (பொறியியலாளர்), கிரிதரன் (பொறியியலாளர்), நடராஜன், திவேசன், சிவசங்கர், சிவசங்கரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை மயிலணி, சுன்னாகத்தில் உள்ள அவரின் மருமகன் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல்,கொத்தியாலடி இந்துமயானத்தில் பி.ப. 2 மணியளவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி, சுன்னாகம். (சி/578146) (34)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

### இந்த வருடத்தின் முதல் காலாண்டில்

# மேலும் ஆறரைக் கோடி மக்கள் ஆசிய நாடுகளில் வறுமை நிலையில்

கொழும்பு, மே 2

2011 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் ஆசிய நாடுகளின் சனத்தொகையில் மேலும் ஆறரைக்கோடி மக்கள் கடும் வறுமை நிலைக்குட்பட்டோராகக் கணக்கிடப்பட்டுள்ளனர் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் கணிப்பீடு தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகளில் பொருள்களின் விலை மிக வேகமாக அதிகரித்துச் செல்வதே இதற்கான காரணமென அக் கணிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் இவ்வாண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் ஆசிய நாடுகளில் பொருள்களின் விலை நூற்றுக்குப் பத்து வீதம் என்ற வகையில் அதிகரித்துள்ளது.

உலகின் சனத்தொகையில் அதிகூடிய எண்ணிக்கையானோர் வாழும் ஆசியக் கண்டத்தின் மொத்த சனத்தொகை 330 கோடியாகும். அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய நாடுகளில் வாழும் வறிய மக்கள் தமது வருமானத்தில் 60 சதவீதத்தை தமது உணவுத் தேவைக்காகச் செலவிடுகின்றனர்.

இதனால் சுகாதார மற்றும் கல்வித்துறை தொடர்பான இவர்களது தேவைகளுக்கான செலவு தாங்கிக் கொள்ள இயலாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதம பொருளாதார நிபுணர் சண்யோன் கேரே தெரிவித்துள்ளார். (ஒ-22)

## வாழைச்சேனையில் ஆயுதங்கள் மீட்பு

வாழைச்சேனை அம்புஸ் குடா காட்டுப் பகுதியில் மிகவும் நுட்பமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை வாழைச்சேனைப் பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர் எனப் பொலிஸ் அத்தியட்சகரும், ஊடகப் பேச்சாளருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த பிரதேசத்தை சோதனையிட்டபோது கேபி ரக கைக்குண்டுகள் 5, கே 400 ரக கைக்குண்டுகள் 2, கிரனைட் 10, சயனைட் குப்பி 02, டெட்டனேட்டர் 30, ஜொனி பட்டா 01, ஜொனி பட்டா பியூஸ் 02 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ-சி)

# விரிவுரை பகிஷ்கரிப்பு தொடரும் என்கின்றனர் பல்கலை மாணவர்கள்

### அவர்களை சமுகம் தரக் கோருகிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், மே 2

மாணவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தும் வரை விரிவுரைகளைப் புறக்கணிக்கப் போவதாகப் பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களினதும் மாணவர் ஒன்றியங்கள் இணைந்து விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியங்களின் தலைவர்கள் ஒப்பமிட்டு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை மூன்று கோரிக்கைகளை முன்நிறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் நிர்வாகத்தினருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் கோரிக்கைகள் வருமாறு:-

* மாணவர்களால் தெரிவு. செய்யப்பட்ட மாணவர் ஒன்றியத்தலைவரின் பல்கலைக்கழக உட்பிரவேசத் தடையை உடன் ரத்துச் செய்யவேண்டும்.
* மாணவர்களின் நலனில் அக்கறை இல்லாது தனது சுய இலாபங்களுக்காகச் செயற்படும் மாணவ ஆலோசகரைப் பதவியைவிட்டு உடனே நீக்க வேண்டும்.
* மாணவர் ஒன்றியத்துக்கு மாணவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியை உள்வாங்கி ஒன்றியத்தை உடன் மீள ஒருங்கமைக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வகுப்புக்களைப் புறக்கணிக்கப்போவதாக அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராக மாணவர்களாகிய நாம் முன்வைத்துள்ள நியாயமான கோரிக்கைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க நிர்வாகத்தினர் முன்வர வேண்டும் என்றும் அதுவரை மாணவர்களாகிய நாம் விரிவுரைகளைப் புறக்கணிப்பதாக ஏகமனதாக முடிவு எடுத்துள்ளோம் என்றும் மாணவர் ஒன்றியம் ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கும் வரை போராட்டம் தொடரும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி மாணவர் ஒன்றியத்தின் அறிக்கை தொடர்பில் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

அன்றைய தினமே (கடந்த வெள்ளிக்கிழமை) தான் மாணவர்களுக்கு முழுவிளக்கத்தையும் தெரிவித்துவிட்டேன். அதன்படி எதிர்வரும் 6 ஆம் திகதி ஒன்றியத்தெரிவு இடம்பெறும்.

பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் வழமைபோல இடம்பெறும். மாணவர்களை விரிவுரைகளுக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஒ-10)

# நகரில் மீண்டும் ஞானம்ஸ் ஹோட்டல் தளபதி ஹத்துருசிங்க திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், மே, 2

யாழ். மின்சார நிலைய வீதியில் ஞானம் ஹோட்டல் 24 வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹோட்டலை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது. ஹோட்டலை யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாகக் கடந்த 87 ஆம் ஆண்டு முதல் ஞானம்ஸ் ஹோட்டல் செயற்பாடுகள் தடைப்பட்டன. அதைத் தொடர்ந்து இலங்கை இராணுவத்தினரின் 512ஆவது படைப்பிரிவினர் கையகப் படுத்தியதில் இருந்து அது பாதுகாப்பு வலயத்தில் சிக்கி முடங்கிப் போய் இருந்தது.

நாட்டில் யுத்தம் ஓய்ந்து ஓரளவு சுமுக நிலை ஏற்பட்டதைத் அடுத்து கடந்த ஜூன் மாதம் ஞானம்ஸ் ஹோட்டல் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

நேற்யை நிகழ்வில் யாழ். பொலிஸ் நிலையத்தின் உதவி அத்தியட்சகர் அபயசில்வா, பொலிஸ் அதிகாரி சமன்சிகேரா, வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆனையாளர் சி.அச்சுதன், யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் வங்கி முகாமையாளர்கள், வர்த்தகர்கள், மற்றும் ஹோட்டல் உரிமையாளர் ச. கைலாசபதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-10-14)

## நோயாளர் தேவைக்கு தொலைபேசி வசதி

தென்மராட்சி, மே 2

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் கருதி நாணயத் தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலைக்கு அருகில் 'ரெலிக் கொம்' நிறுவனத்தினரால் தொலைபேசி நேற்றுத் தொடக்கம் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (ஒ-207)

# இரட்டைப் பிரஜாவுரிமை நடைமுறையில் மாற்றம்

கொழும்பு, மே, 02

இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடைமுறையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் டபிள்யூ.ஏ. சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

தாய் நாட்டின் சட்ட திட்டங்களை மதித்து, ஒழுங்காக வரிகளைச் செலுத்தி வருபவர்கள், இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளில் தொடர்பில்லாதவர்கள் ஆகியோருக்கே இரட்டைப் பிரஜாவுரிமை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் 1987ஆம் ஆண்டின் இரட்டைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. எவருக்காவது வழங்கப்பட்டிருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமையைத் தகுந்த காரணங்களின் அடிப்படையில் எந்த நேரத்திலும் ரத்துச் செய்யும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தாய்நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறவர்களும் இரட்டைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ளமையாலேயே மீள் பரிசீலனை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-சி)

# வெள்ளை அறிக்கை தயாரிக்கும் பணியில் பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, மே, 02

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நிபுணர் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான உண்மையற்ற விடயங்களை மறுத்து யதார்த்தத்தைத் தெளிவுபடுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சு வெள்ளை அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகிறது என செய்தி வெளியாகி உள்ளது.

உலகில் பயங்கரவாதத்தை ஒடுக்கும் யுத்தம் அல்லது சிவில் யுத்தத்தின் இறுதியில் பல நாடுகள் மேற்கொண்ட முன் மாதிரியின்படி இந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இஸ்ரேல் உட்பட பல நாடுகள் தாம் மேற்கொண்ட யுத்தம் தொடர்பாக இதுபோன்ற வெள்ளை அறிக்கையின் மூலம் உலகுக்குத் தெளிவுபடுத்தி உள்ளன.

பாதுகாப்பு அமைச்சு இலங்கை தொடர்பாகத் தயாரிக்கும் வெள்ளை அறிக்கை மூலம் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற சகல நடவடிக்கைகளும் திகதிவாரியாக முன் வைக்கப்படும். சில முக்கிய புகைப்படங்களும் வெள்ளை அறிக்கையில் உள்ளடக்கப்படும் எனத் தெரியவருகிறது. இந்த வெள்ளை அறிக்கை சம்பந்தமாக சட்டபூர்வ விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை அறிக்கைக்கு மேலதிகமாக ஐ.நா. நிபுணர் குழுவுக்கு பதில் அளிக்கும் வகையில் இலங்கையின் நிலைப்பாட்டையும் இன்னும் ஒரு சில வாரங்களில் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-சி)

## மன்னிப்புக் கோருகின்றனர் பல்கலை மாணவர்கள்

யாழ்ப்பாணம், மே 2

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தைச் செய்தியாக்கச் சென்ற 'உதயன்' ஊடகவியலாளர் தாக்கப்பட்டதற்கு தாம் மன்னிப்புக் கோருவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் தெரிவித்துள்ளன.

தவறுதலாக அன்றைய தினம் இடம்பெற்ற அந்தச் சம்பவத்துக்கு சம்பந்தப்பட்ட ஊடகத்திடமும் ஏனைய ஊடகச் சமூகங்களிடமும் மன்னிப்புக்கோருகின்றோம்.

இனிமேல் இதுபோன்ற அசம்பாவிதம் நடைபெறாமல் இருப்பதற்கும் தாம் உத்தரவாதம் தருவதாகவும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# நிபுணர் குழு அறிக்கையை வரவேற்கிறது கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சி

ரொரண்டோ, மே 2

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை கனடா புதிய ஜனநாயகக் கட்சி வரவேற்றுள்ளது.

ஐ.நாவின் அறிக்கை குறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று நம்புவதுடன், உடனடியாக ஐ.நா சுதந்திரமான விசாரணைகளைத் தொடங்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், பொதுச்சபையில் அனைத்துக்கட்சிக் குழுவொன்றை உருவாக்கும் தீர்மானம் ஒன்றை புதிய ஜனநாயக் கட்சி கொண்டு வந்தது. துரதிஷ்டவசமாக அந்தத் தீர்மானத்தை கொன்சர்வேட்டிவ் கட்சி தோற்கடித்து விட்டது.

சர்வதேச சமூகம் அமைக்கின்ற விசாரணைக் குழுவொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்க இந்தத் தீர்மானம் இலங்கை அரசையும் ஐ.நாவையும் கேட்டுக் கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. - என்றுள்ளது. (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் தொடர்பான அறிக்கை குறித்து உறுப்பு நாடுகளிடம் பரிந்துரை கோருகிறார் மூன்

இலங்கை போர்க்குற்றம் புரிந்தது தொடர்பாக ஐ.நா., சபை அறிக்கை வெளியிடப்பட்டது. இறுதிப் போரில் பல ஆயிரம் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றுள்ளதாக தகவல் தெரியவந்துள்ளது. இறுதிப்போரில் இலங்கை இராணுவத் தாக்குதலால் தான் உயிரிழப்பு அதிகமானது. 214 பக்க அறிக்கையில், இராணுவத் தாக்குதல் குறித்த படங்களும், ஆதாரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மருத்துவமனை தாக்கப்பட்டது தொடர்பான செயற்கைக்கோள் படங்களும் ஐ.நா., வெளியிட்டுள்ளது.

ஐ.நா. வல்லுநர் குழுவின் போர்க்குற்ற அறிக்கை குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை தெரிவிக்குமாறு அனைத்து உறுப்பு நாடுகளையும் ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பரிந்துரைகள் கிடைத்தவுடன் அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(தமிழ்வின்)(ஒ-10)

# தமிழகச் சட்டசபைத் தேர்தல் வரைக்கும் நிபுணர்குழு அறிக்கையை தாமதிக்கிறார்

## பான் கீ மூனின் பிரதம அதிகாரி நம்பியார்

தமிழகத்தின் சட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் வரை நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிடுவதை பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரே நிறுத்தி வைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழுவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பில் ரஷ்யா, தமது கருத்தை வெளியிட்ட போதும் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் ஊடகங்களுக்கு கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை

இதற்கான காரணமாக அவருக்கு ஆங்கிலம் தெரியாது எனக்கூறப்பட்டதாக சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது

இந்தநிலையில் ஏன் அவர், மொழிப்பெயர்ப்பாளரை கொண்டு ஊடகங்களுக்கு கருத்தை கூறியிருக்க முடியாது என்று சண்டே லீடர் கேள்வி எழுப்பியுள்ளது

இந்தநிலையில் ஜனாதிபதியின் சகோதரரும் இலங்கை இந்திய உறவுக்கு முக்கியமானவருமான பஸில்ராஜபக்ஷ, பான் கீ மூன் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடாமல் இருந்து வருகிறார்.

இதற்கான காரணமாக, அவர் புலிகளுடனான இறுதியுத்தத்தின் போது சர்வதேசத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் என்று சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது. எனினும் ஆங்கில ஊடகம் ஒன்று, பஸில் ராஜபக்ஷ. பான் கீ மூனின் அறிக்கைக்கு எதிராக செயற்படுவதாக செய்தி வெளியிட்டுள்ளமையை சண்டே லீடர் சுட்டிக் காட்டியுள்ளது.

அவரே நிபுணர் குழுவின் அறிக்கையை தாருஸ்மானின் அறிக்கை என்ற பெயரில் அழைக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளதாகவும் ஆங்கில ஊடகத்தை கோடிட்டு சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஜக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் இலங்கை வந்தபோது, அவருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டு அறிக்கையில் கையெழுத்திடுவதை பஸில் ராஜபக்ஷ விரும்பவில்லை.

எனினும் பஸிலின் கருத்தை கேட்காமலேயே மஹிந்த ராஜபக்ஷ, பான் கீ மூனுடன் கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டார்.

இந்தநிலையில் தற்போது அந்த அறிக்கையை பான் கீ மூன் தமக்கு சாதகமாக பயன்படுத்துவதை பஸில் ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார். அதன் காரணமாகவே இலங்கை பெரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் தமிழகத்தின் சட்டசபைத்தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் வரை நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிடுவதை பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரே நிறுத்தி வைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அறிக்கை தமிழக சட்டசபை தேர்தலுக்கு முன்னர் வெளியிடப்படுமானால் அது ஆளும் திராவிட முன்னேற்றக்கழகம் மற்றும் காங்கிரஸ் கூட்டணிக்கு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தி விடும் என்ற காரணத்தாலேயே அதனை சட்டசபை தேர்தலின் பின்னர் வெளியிட நம்பியார் தமது பங்கை செலுத்தியதாக சண்டே லீடர் குறிப்பிட்டுள்ளது.

(தமிழ்வின்)(ஒ-10)




# இலங்கையில் இனப்படுகொலையே நடந்தது ஐ.நா. அறிவிக்கவேண்டும் என்கிறார் திருமா

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ போர்க்குற்றவாளி என்று அறிவிக்கக் கோரியும், இலங்கையில் தமிழர்களை கொன்றொழித்தது இனப்படுகொலை என்றும் ஐ.நா. அறிவிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேசப் போர்க்குற்றவாளி ராஜபக்ஷவைக் கைது செய்ய வலியுறுத்தியும், ஐ.நா. அறிக்கை குறித்து விவாதிக்க இந்தியா நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வலியுறுத்தியும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது ராஜபக்ஷவின் உருவபொம்மை எரிக்கப்பட்டது. அப்போது ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தின்போது பேசிய அக்கட்சியின் தலைவர் திருமாவளவன், இலங்கையில் படுகொலை நடந்து முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து தாமதமாக அறிக்கை வெளியிட்டாலும், உண்மையான அறிக்கையை வெளியிட்ட ஐ.நா.சபை முடிவை வரவேற்கிறோம். வெறும் போர்க்குற்றம் என்று மட்டும் பார்க்காமல், இனபடுகொலை என்று அறிவிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் அவசரமாக கூட்டி, ஐ.நா. சபை அறிக்கை குறித்து விவாதிக்க வேண்டும். சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கையை ஆதரிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இலங்கையை இந்தியாவும் ஆதரிக்கக் கூடாது - என்றார்.

(நக்கீரன்) (ஒ-10)

# மக்கள் பிரச்சினைகளைமூடி மறைக்க அறிக்கையைப் பயன்படுத்த வேண்டாம் - அர்ஜுன

மக்கள் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கு பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையைப் பயன்படுத்தக் கூடாது என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். பாணந்துறைப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் எதிர்ப்பை வெளியிடும் பல அமைச்சர்கள் அறிக்கையை முழுமையாக வாசித்தார்களா என்பதே சந்தேகமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழல் மோசடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக பான் கீ மூனின் அறிக்கையைப் பயன்படுத்தக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(தமிழ்வின்)(ஒ-10)

# தமிழ்நாட்டைக் கவனிக்க சிறப்புப் பிரிவு அழுத்தம் கொடுக்கிறது புலனாய்வுத்துறை

இலங்கை விவகாரத்தில் கருத்துகளை வெளியிடும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளை முறியடிக்க இலங்கை வெளிவிவகார அமைச்சு சிறப்பு கண்காணிப்பு பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளது.

தமிழ்நாட்டின் நிலைமைகளை இந்தக் குழு கண்காணித்து, எதிர் நடவடிக்கைளை மேற்கொள்ளவுள்ளது.

ஐ.நா அறிக்கை வெளியான பின்னர், இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டில் வலுப்பெற்று வருகிறது. தமிழ்நாட்டு அரசியல் வாதிகளின் கருத்துகள் ஆங்கிலத்தில் அதிகளவில் வெளியாவதால், அவை அனைத்துலக ஊடகங்களில் இலகுவாகவே இடம் பிடித்து விடுகின்றன. இது இலங்கை அரசுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் தமிழ்நாட்டைக் கவனிக்க சிறப்புக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதையடுத்தே, தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைக் கண்காணித்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சிறப்புப் பிரிவு ஒன்றை உடனடியாக அமைக்கவுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

(தமிழ்வின்)(ஒ-10)

# துட்டகைமுனுவாக நடித்த மேர்வின் யானையிலிருந்து தவறிவிழுந்தார்

அமைச்சர் மேர்வின் சில்வா துட்டகைமுனு மன்னனாக நடிக்க முயன்று யானையிலிருந்து தவறிக் கீழே விழுந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அமைச்சர் மேர்வின் சில்வா துட்டகைமுனு மன்னனின் கதாபாத்திரத்தில் நடிக்கும் ''சுரங்கனா லொவின்'' எனும் திரைப்படத்தின் ஒளிப்பதிவு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதன் போது அமைச்சர் மேர்வின் யானை மேலேறி போருக்குப் போவது போன்ற காட்சி படமாக்கப்பட்டுள்ளது.

ஆயினும் யானை மீதேற முயன்ற அமைச்சர் மேர்வின் சில்வா தவறிக் கீழே விழுந்துள்ளார். அவர் விழுந்த வேகத்தில் யானை மிரண்டு குழம்பிவிட அவரது மெய்ப்பாதுகாவலர்கள் விரைந்து செயற்பட்டு அமைச்சரைக் காப்பாற்றியுள்ளனர்.

ஆயினும் அமைச்சர் மேர்வின் சில்வா யானையிலிருந்து கீழே விழுந்த காட்சி அங்கு திரண்டிருந்த அனைத்து ஊடகவியலாளர்களினதும் டிஜிடல் கேமராக்களில் படமாக்கப்பட்டுள்ளது. அவற்றை அழித்து விடுமாறு அமைச்சர் கடும் தொனியில் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அவ்வாறு தான் கீழே விழுந்த புகைப்படம் ஊடகங்களில் வெளியானால் அதனுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்துக் கடும் தண்டனையளிக்கவுள்ளதாகவும் அவர் அச்சுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு என்னும் முகவரியுடைய சிவகுருநாதன் சிறிரங்கன் என்பவருடைய தே.அ.அட்டை (752791538V) சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய 1C கவர் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரிக்கும் உரும் பிராய்க்கும் இடையில் கடந்த 29.04.2011 அன்று பேருந்து பயணத்தின் போது தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி யுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0213219245, 0779232592.

## கொள்முதல் செய்யப்படும்

பழைய இரும்பு, பித்தளை, செம்பு, அலுமினியம் தரகர் இன்றி நேரடியாக எவ்வளவு தொகையானாலும் நல்ல விலைக்குக் கொள்முதல் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:-
0777769869, 0757846846, 0770357667.

## புத்தாண்டில் புதிதாக ஜொலிக்க விசேட சலுகையுடனான எமது சேவைகள்!!

நிழல் அல்ல நிஜம்! ஒரே வாரத்தில்;

* உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!!
* கழுத்து கருமை நீங்கம், முகப்பருக்கள், முகச் சுருக்கம், உதடு கருமை நீக்கம், கருவளையம் போன்றவற்றிற்கான சிகிச்சைகள்.
* முடி உதிர்வு, பொடுகு, இளநரை சிகிச்சைகள், உடல் கட்டழகு சிகிச்சைகள்.
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல், வயிறு, இடுப்பு, கை, கால், தசைகள் குறைவதற்கான சிகிச்சைகள்.

எமது "SANEYA BEAUTY PALACE" தற்போது SANEYA HERBAL CARE எனும் பெயரில் செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, ஆயுள் வேத வைத்தியசாலை நாயன்மார்க் கட்டு நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகிறது.

WE CARE ALWAYS
முற்பதிவுகளுக்கு:-
0777351954, 0774011129.

## தென்மராட்சியில் ஆசிரியர் விவரம் திரட்டல்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

இது தொடர்பான அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அதிபர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்துக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)

## Study In the UNITED KINGDOM

இறுதிச் சந்தர்ப்பம்
IELTS தேவையில்லை
G.C.E (O/L) மற்றும் G.C.E (A/L) உடன் கற்கை நெறிகளை தொடலாம்.
June / July Intakes in Progress

2011 April 21ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறையின் கீழ்
(1) G.C.E (O/L) அடிப்படை தகுதியுடன் ஆங்கில கற்கை நெறியினை U.K. இல் மேற்கொள்ளலாம் IELTS தேவையில்லை
(2) G.C.E (O/L) / G.C.E (A/L) அடிப்படை தகுதியுடன் Foundation Degree யினை மேற்கொள்ளலாம். இதற்கு City & Guide இன் B1 ஆங்கில அறிவு (மிகவும் இலகுவானது) போதுமானது. IELTS தேவையில்லை.

உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்ப்படுத்தல் என்பன எங்களால் நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்.

சகல நாடுகளுக்குமான அனைத்துவித Documentation மற்றும் விசாக்களும் 100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத் தரப்படும்.

Jaffna: BRITISH COLLEGE OF HIGHER STUDIES
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(above Cosy Hotel & Near Ariyakulam Junction)
T.P: 0212224550

EISC EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel:2500207 E-mail:elsc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935 Web: www.expresslanka.com

## மரண அறிவித்தல்கள்



### துரையப்பா சிவகுமார்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனை வசிப்பிடமாவும் கொண்ட துரையப்பா சிவகுமார் (30.04.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் கலாவின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவரான குருசாமி மற்றும் புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜிந்துசன், நிறோசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்றவரான சொர்ணேஸ்வரி மற்றும் வஸ்ரேஸ்வரி ஸ்ரீ குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தில்லைச் செல்வி, தில்லைச்சிவன் (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் காலஞ்சென்றவர்களான சீவரெட்ணம், சபா நாதன் மற்றும் கோடீஸ்வரன் கோமதி, பரமேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும், சற்குணத்தின் (டென்மார்க்) சகலனும், சத்தியா, வித்தியா (ஜேர்மனி), சுகன்ஜா (லண்டன்), சிந்துஜா (இந்தியா), கனியமுது (ஜேர்மனி), மதிவதனன் (லண்டன்), காண்டீபன் (ஜேர்மனி), மதுரா (அவுஸ்திரேலியா), யதர்ஜினி, கீர்த்திகன் (பிரான்ஸ்), அஜந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனும், சாரங்கா, சாருஜன், கஜானன், ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளந்தென்றல் கபே,
6ம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
(3152)

தகவல்:
ஸ்ரீகுமார்.
(சகோதரன்)



### கதிரேசு கந்தையா
(ஓய்வுபெற்ற அதிபர்)

பலாலியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு கந்தையா நேற்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மற்றும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரன் (இந்தியா), கேதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), சசிகலா, சூரியகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கன்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
0212240980, 07705803368
(3751)

தகவல்:
குடும்பத்தினர்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

### UK Student Visa

மூலம் செல்பவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை (B1)
BATCH MAY 2ND 9.00 A.M

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கில பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British high Commission னால் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது நிறுவனத்தினாலேயே பரீட்சைக்குத் தோற்றவும் முடியும்.

### Settelment Visa Spouse Visa (கணவன் - மனைவி)

மூலம் UK செல்வதற்கான ஆங்கிலப் பரீட்சை (A1) மிகவும் இலகுவானமுறையில் எமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகிறது. எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்குத் தோற்றவும் முடியும்.

BATCH MAY 2ND

Quick Learning Course திங்கள் - வெள்ளி வரை

### Spoken English With Grammar

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

Duration : 1 Month
Rs. 3000.00

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

Date: 23rd May
Morning 9.00 a.m. Evening 3.00 p.m

## Win Tech

விலைக்கழிவினில் நீங்கள் வியந்திட WinTechல் மலிவு விற்பனை.
உத்தரவாதத்துடன் கணனி உதிரிப்பாகங்களினை சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

187/1, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 568 9418.

Intel 3.0GHz Processor
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
250GB Hard Disk
16"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
34000/=

Intel 3.0GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
36000/=

Intel 3.2GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
250GB Hard Disk
16"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
37250/=

Intel 3.2GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
2GB Ram DDR-3
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
41500/=

Intel 3.2 GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
40000/=

Intel 3.06GHz Processor Core i3
G55 Intel Chip Mother Board
2GB Ram DDR-3
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
52000/=

Intel 3.2GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
2GB Ram DDR-3
250GB Hard Disk
16"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
39000/=

Intel 1.6GHz Processor
Atom Mother Board
1GB Ram DDR-2
250GB Hard Disk
16"LCD Monitor
ATX Casing
Keyboard&Mouse
Free Computer Table
25000/=

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org